2887

# T.N.L.A. Debates

## OFFICIAL REPORT

VOL. XIV NO: 1

July 17th 1985

(C)

V2l1,31 N85
N85.14.1
136426

வெளியீடு 9-1-1986 | Issued 9—1—1986

80/86

2587

24 ... 86

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஜூலை 17, 1985 - தொகுதி XIV எண் 1
Wednesday the 17th July 1985 - Volume XIV No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly, Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை : ரூ. 3-50 காசுகள் ] [Price Rs. 3-50 paise

D
Y211,31 N85
N85.14.1

136426
சென்னை-600 008.

உள்ளடக்கம்

17-7-1985

பக்கங்கள்

(அ) தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் i—iii

(ஆ) Personnel of the Government of Tamil Nadu iv—vi

(இ) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் vii—vii

(ஈ) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல். ix—xvi

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள். .. 1—41

2. தகவல் கோரல்:

(அ) தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுதல். .. 41

(ஆ) உறுப்பினர்களுக்கு முன்கூட்டி வழங்கப்பெற வேண்டிய விளக்கக் குறிப்புகள்.. 46

3. ஒழுங்குப் பிரச்சனை:

நீதிமன்றத்திலுள்ள வழக்கு குறித்து. .. 42—45

4. ஒத்திவைப்புத் தீர்மானம்:

திருச்சி மாவட்டம் வேப்பந்தட்டை கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை. ... 46—63

5. கவன ஈர்ப்புகள்:

(அ) விவசாயிகள் இலவச மின்சாரம் போன்ற சலுகைகள் பெற அதிகாரிகளிடம் சான்றிதழ்கள் பெறுவது குறித்து ... 63—65

(ஆ) தொட்டியம் தொகுதி மேட்டுப்பாளையத்திலுள்ள மேல்நிலைப் பள்ளியில் பொறியியல் கட்டடம் கட்டுவது ... 66—69

6. அறிக்கைகள் அளித்தல்: பக்கங்கள்

(அ) பொதுக் கணக்குக் குழு .. .. 69—70

(ஆ) பொது நிறுவனங்கள் குழு .. .. 70—71

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்:

(அ) பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவு, 1985. .. 71—74

(ஆ) தீ அணைப்புப் பணி சட்ட முன்வடிவு, 1985. .. 74—75

(இ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1985. .. 75—87

(ஈ) நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985. .. 87—102

(உ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப் படுத்துதலும்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1985. .. 103—117

(ஊ) சென்னை உயர் நீதி மன்ற (விசாரணை அதிகார வரம்பினை. நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1985. (ஆ.இ) .. 118—120

8. அறிவிப்பு:

சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை(ஆ.இ.)நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1985. .. 117

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 120—121


## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

### திரு. சுந்தர்லால் குரானா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன்: *(முதலமைச்சர்)*— பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர் மற்றும் அனைத்திந்தியப் பணியாளர்கள், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், இலஞ்ச ஒழிப்பு, திட்டம், சர்க்கரைப் பாகு கழிவு, தொல்பொருள் இயல், மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் நீங்கலாக), ஆயத்துறை மற்றும் பயண இசைவுச் சீட்டு.

2. மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: *(நிதிஅமைச்சர்)*— நிதி, வருவாய், சட்டமன்றம், தேர்தல்கள். புள்ளி விவரங்கள், இளைஞர் அணி மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: *(மின் துறை அமைச்சர்)*— மின்சாரம், இரும்பு எஃகு கட்டுப்பாடு, அச்சு காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத்துறை, மற்றும் அரசு அச்சகம்.

4. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: *(தொழிலாளர் நலத்துறை அமைச்சர்)*—தொழிலாளர், கால்நடை பராமரிப்பு, பால், பால் பெருக்குத் திட்டம், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: *(செய்தி—அற நிலையத் துறை அமைச்சர்)* —செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம், அறநிலையத் துறை, வனங்கள், சின்கோனா, மற்றும் மது அருந்த அனுமதி வழங்கல்.

6. மாண்புமிகு திரு. க. இராசாராம் : *(தொழில் துறை அமைச்சர்)* —பெருந்தொழில்கள், சுரங்கம் மற்றும் கனிவளம், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல்.

7. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: *(உள்ளாட்சித் துறை அமைச்சர்)*—நகராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், சமுதாய வளர்ச்சி, கிராமப்புற கடன் சம்பந்தப் பட்டவை.

8. மாண்புமிகு திரு.செ.அரங்கநாயகம்: *(கல்வி அமைச்சர்)*— கல்வி, ஆட்சிமொழி, தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு.

9. மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (வேளாண்மைத் துறை அமைச்சர்)—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் பிரிவு, வேளாண் பொறியியல். வேளாண் பணி கூட்டுறவு சங்கங்கள், குடிநீர் வழங்கு மற்றும் கழிவு நீரகற்று வாரியம்.

10. மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (சட்ட அமைச்சர்)—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்,—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு மற்றும் கடன் நிவாரணம், (கடன் வழங்கல், சீட்டு நிதி இவைகள் பற்றி சட்டம் இயற்றல் உள்பட.)

11. மாண்புமிகு டாக்டர் எச்.வி. ஹண்டே: (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)— மக்கள் நல்வாழ்வுத் துறை, சுற்று சூழல் மாசுக் கட்டுப்படுத்தல்.

12. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (போக்குவரத்துத் துறை அமைச்சர்)— போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

13. மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (உணவு அமைச்சர்)—உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் மக்கள் தொகைக் கணக்கு.

14. மாண்புமிகு திரு.வி.வி. சுவாமிநாதன்: (கைத்தறித் துறை அமைச்சர்)—கைத்தறி மற்றும் நெசவாலைகள்.

15. மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : (சத்துணவு அமைச்சர்)—சத்துணவு.

16. மாண்புமிகு திரு. தா. வீராசாமி: (வணிக வரித்துறை அமைச்சர்)—வணிக வரிகள்.

17. மாண்புமிகு திரு. என். நல்லுச்சாமி: (வீட்டு வசதித்துறை அமைச்சர்)—வீட்டு வசதி மற்றும் குடிசைமாற்று வாரியம், நகர அமைப்பு மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

18. மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன்: (ஊரகத் தொழில் அமைச்சர்) —இராம, குடிசை. சிறு தொழில்கள் உள்ளிட்ட ஊரக தொழில்கள்.

19. மாண்புமிகு திரு. த. இராமசாமி: (மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத் துறை அமைச்சர்)—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள்.

20. மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: (ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்)—ஆதி திராவிடர் நலம். மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.



21. மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்)—பிற்பட்டோர் நலம் மற்றும் மீன்வளம்.

22. மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (சமூக நலத் துறை அமைச்சர்)—மகளிர் குழந்தைகள் உள்ளிட்ட சமூகநலம், பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம்.

23. மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி: (கதர்த்துறை அமைச்சர்)— கதர், பூமிதானம் மற்றும் கிராம தானம்.

24. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: (பொதுப் பணித் துறை அமைச்சர்)— பொதுப்பணித்துறை, சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டங்கள் மற்றும் வக்ஃப்.

25. மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கூட்டுறவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU SUNDAR LAL KHURANA

MEMBERS OF THE COUNCIL OF MINISTERS :

1. The HON. DR. M. G. RAMACHANDRAN : (CHIEF MINISTER)—

   Public, General Administration, Indian Administrative Service and other All India Services, District Revenue Officers, Deputy Collectors, Police, Prevention of Corruption, Planning, Molasses, Archaeology, Prohibition excluding grant of Liquor permits, Excise and Passports.

2. The HON. DR. V. R. NEDUNCHEZHIAN : (MINISTER FOR FINANCE)—

   Finance, Revenue, Legislature, Elections, Statistics, Youth Service Corps and Ex-servicemen.

3. The HON. THIRU S. RAMACHANDRAN : (MINISTER FOR ELECTRICITY)—

   Electricity, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press.

4. The HON. THIRU K. A. KRISHNASAMY : (MINISTER FOR LABOUR)—

   Labour, Animal Husbandry, Milk, Dairy Development, Registration and Stamp Act.

5. The HON. THIRU R. M. VEERAPPAN : (MINISTER FOR INFORMATION AND RELIGIOUS ENDOWMENTS)—

   Information and Publicity, Film Technology, Tourism, Tourism Development Corporation, Cinematograph Act, Hindu Religious and Charitable Endowments, Forest, Cinchona and grant of Liquor permits.

6. The HON. THIRU K. RAJARAM : (MINISTER FOR INDUSTRIES)—

   Large Scale Industries, Mines and Minerals, Electronics, Science and Technology.

7. The HON. THIRU r. U. SHANMUGAM : (MINISTER FOR LOCAL ADMINISTRATION)—

   Municipal Administration, Panchayats, Panchayat Unions, Community Development and Rural Indebtedness.

8. The HON. THIRU C. ARANGANAYAGAM : (MINISTER FOR EDUCATION)—

   Education, Official Language, Tamil Development and Culture.

9. The HON. DR. K. KALIMUTHU : (MINISTER FOR AGRICULTURE)—

   Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing and Agro-Engineering, Agro-Service Co-operative Societies, Water-Supply and Drainage Board.

10. The HON. THIRU C. PONNAIYAN : (MINISTER FOR LAW)—

    Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits.

11. The HON. DR. H.V. HANDE : (MINISTER FOR HEALTH)—

    Health and Environmental Pollution Control.

12. The HON. THIRU S. MUTHUSAMY : (MINISTER FOR TRANSPORT)—

    Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Highways.

13. The HON. THIRU S. THIRUNAVUKKARASU : (MINISTER FOR FOOD)—

    Food, Price Control and Census.

14. The HON. THIRU V. V. SWAMINATHAN : (MINISTER FOR HANDLOOMS)—

    Handlooms and Textiles.

15. The HON. THIRU R. SOUNDARARAJAN ; (MINISTER FOR NUTRITIOUS MEALS)—

    Nutritious Meals.

16. The HON. THIRU T. VEERASAMY : (MINISTER FOR COMMERCIAL TAXES)—

    Commercial Taxes.

17. The HON. THIRU N. NALLUSAMY : (MINISTER FOR HOUSING)—

    Housing and Slum Clearance Borad, Town Planning and Accommodation Control.

18. The HON. THIRU ANOOR P. G. JAGADEESAN: (MINISTER FOR RURAL INDUSTRIES)—
Rural Industries including Village, Cottage and Small Industries.

19. The HON. THIRU T. RAMASAMY: (MINISTER FOR REHABILITATION AND EMPLOYMENT)—
Employment and Training, Indians Overseas, Refugees, and Evacuees.

20. The HON. THIRU A. ARUNACHALAM: (MINISTER FOR ADI DRAVIDAR WELFARE)—
Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour.

21. The HON. THIRU M. R. GOVENDAN: (MINISTER FOR BACKWARD CLASSES)—
Backward Classes and Fisheries.

22. The HON. TMT. GOMATHI SRINIVASAN: (MINISTER FOR SOCIAL WELFARE)—
Social Welfare including Women and Children Welfare, Beggars Home, Orphanages, and Correctional Administration.

23. The HON. TMT. VIJAYALAKSHMI PALANISAMY: (MINISTER FOR KHADI)—
Khadi, Bhoodan and Gramdhan.

24. The HON. THIRU Y.S.M. YUSUF: (MINISTER FOR PUBLIC WORKS)—
Public Works Department, Irrigation including Minor Irrigation and Wakf.

25. The HON. THIRU K.K.S.S.R. RAMACHANDRAN: (MINISTER FOR CO-OPERATION)—
Co-operation.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி. எச். பாண்டியன்

*பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. மா. சின்னராசு

திரு. செ, செம்மலை

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்

திரு. மு. இராமநாதன்

திரு. வே. இரா. ஜெயராமன்.

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

இணைச் செயலாளர்

திரு. பி. எம். பத்மநாப நம்பியார், பி. ஏ., பி.ஜி. எல்.,

துணைச் செயலாளர்

திரு. வி. சீதாராமன், பி.காம். பி.ஜி.எல்.

குழு அலுவலர்கள்

திரு. கா. சீனிவாசன், பி.எஸ்.சி.

திரு. கு. அ. சீனிவாசன், பி.ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. செ. சு. ஜானகிராமன், பி.ஏ.,பி.எல்.

திரு. பெ. பாலகிருஷ்ணன், பி.காம்.

திரு. பெ. ச. கனகசபாபதி, பி.ஏ., பி.எல்.

திரு ஜே. ரெஜினால்ட் ஜான், பி.ஏ.,

திரு. வ. சா. ஜான், பி.ஏ.

திரு. கா. செ. சுந்தரராஜன், பி.ஏ., பி.ஜி.எல்.

திரு. டி. சாலமன் ஜெயபால், பிஎஸ்.சி, பி.எல்.

எஸ்டேட்* அலுவலர்கள்.

திரு. கே. தியாகராஜன், பி.ஏ., பி.எல்.

திரு. கேசவராம், பி.ஏ.

பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர்

திரு. பி. கோதண்டராமன்,

துணைச் செயலாளர் (பதிப்பாளர்)

திரு. ஜி. எஸ். அனந்த நாராயணன், பி.லிட்.,

தலைமை நிருபர்

திரு. வை. இராமச்சந்திரன், எம்.ஏ., எல்.எல்.பி.

* 27-2-85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

**11-3-85 அன்று தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| 1. அப்துல் சமத் திரு. ஆ.கா.அ. | திருவல்லிக்கேணி |
| 2. அப்துல் மஜீத் திரு, எச். | வாணியம்பாடி |
| 3, அரங்கநாயகம் திரு. செ. | தொண்டாமுத்தூர் |
| 4. அரிக்குமார் திரு. இரா, | பெரணமல்லூர் |
| 5. அருணாசலம் திரு. இரா. | நாமக்கல் (செ.வ) |
| 6. அருணாசலம் திரு. எ. | வரகூர் (செ.வ) |
| 7. அன்பழகன் திரு. க. | பார்க்டவுன் |
| 8. அன்பழகன் திரு. கே. | ஓமலூர் |
| 9. அன்பழகன் திரு. தி. | நாட்ராம்பள்ளி |
| 10. அன்பழகன் திரு. பொ. | இளையான்குடி |
| 11. ஆண்டி அம்பலம் திரு. மெ. | நத்தம் |
| 12. ஆதிமூலம் என்கிற தில்லை காந்தி | ஆண்டிமடம் |
| 13. ஆபிரகாம் திரு. ம. | ஆலந்தூர் |
| 14. ஆறுமுகம் திரு. அ. | வந்தவாசி |
| 15. ஆறுமுகம் திரு. எச். ஜி. | பென்னாகரம் |
| 16. ஆறுமுகம் திரு. ஆர். எஸ். | ஓட்டபிடாரம் (செ.வ) |
| 17. ஆறுமுகம் திரு. எ. எஸ். ஏ. | விருதுநகர் |
| 18. ஆறுமுகம் திரு. செ. | மதுராந்தகம் |
| 19. ஆறுமுகம் திரு. சேலம் மு. | சேலம்—2. |
| 20. ஆனந்த கிருஷ்ணா திரு. ஜி. | பூந்தமல்லி |
| 21. ஆனந்தன் திரு. மு. | உளுந்தூர்பேட்டை |
| 22. இரகுபதி திரு. கோ. | காட்பாடி |
| 23. இரகுமான்கான் திரு. அ. | சேப்பாக்கம் |
| 24. இரத்தினம் திரு. எம். வி. | பொள்ளாச்சி |
| 25. இரத்தினவேலு திரு. சே. | முசிறி |
| 26. இராசமாணிக்கம் திரு. ஆர். | அரூர் (செ.வ) |
| 27. இராசமாணிக்கம் திரு. எல்ல. | தாம்பரம் |
| 28. இராசரத்தினம் திரு. எப். எம். | கொளச்சல் |
| 29. இராசரத்தினம் என்கிற மணி திரு. எம். | விழுப்புரம் |
| 30. இராசாங்கம் திரு. மு. | திருவிடைமருதூர் |

| | | |
|---|---|---|
| 31. | இராசாம்பாள் திருமதி த. | தலைவாசல் (செ.வ) |
| 32. | இராசாரம் திரு. க. | பனமரத்துப்பட்டி |
| 33. | இராசாராமன் திரு. எஸ். | பாபநாசம் |
| 34. | இராசு திரு. வி. கே. | அரக்கோணம் (செ.வ) |
| 35. | இராசேந்திரன் திரு. எஸ். என். | தூத்துக்குடி |
| 36. | இராமச்சந்திரன் டாக்டர் எம்.ஜி. | ஆண்டிப்பட்டி |
| 37. | இராமச்சந்திரன் திரு.கே.எஸ்.எம். | போடிநாயக்கனூர் |
| 38. | இராமச்சந்திரன் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர் |
| 39. | இராமச்சந்திரன் திரு.ச. | பன்ருட்டி |
| 40. | இராமச்சந்திரன் திரு. சோ. மா. | அண்ணாநகர் |
| 41. | இராமச்சந்திரன் திரு. ப. ந. | பட்டுக்கோட்டை |
| 42. | இராமசாமி திரு. எஸ்.என். | சாத்தான்குளம் |
| 43. | இராமசாமி திரு. த. | இராமநாதபுரம் |
| 44. | இராமநாதன் திரு. மு. | கோயம்புத்தூர் மேற்கு |
| 45. | இராமலிங்கம் டாக்டர் கே.பி. | ராசிபுரம் |
| 46. | இளங்கோவன் திரு.ஈ வே.கி.ச. | சத்தியமங்கலம் |
| 47. | ஈஸ்வரன் திரு. ஆர். | வாசுதேவநல்லூர் (செ.வ) |
| 48. | உச்சி திரு. கே. | கூடலூர் |
| 49. | உத்திராபதி திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 50. | எத்திராசன் திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ) |
| 51. | கணபதி திரு. கே. ஆர். | சிதம்பரம் |
| 52. | கதிர்வேலு திரு. மா. | ராணிப்பேட்டை |
| 53. | கந்தசாமி திரு. கா. வே. | கிணத்துக்கடவு |
| 54. | கந்தசாமி திரு. பெ. | பொங்கலூர் |
| 55. | கல்லன் திரு. கே. | உதகமண்டலம் |
| 56. | கலிதீர்த்தான் திரு. சோ. | சங்கராபுரம் |
| 57. | காளிமுத்து டாக்டர் கா. | மதுரை கிழக்கு |
| 58. | கிருஷ்ணசாமி திரு. கே. ஏ. | ஆயிரம் விளக்கு |
| 59. | கிருஷ்ணசாமி திரு. வி. இரா. | அணைக்கட்டு |
| 60. | கிருஷ்ணமூர்த்தி திரு. கி. | கும்பகோணம் |
| 61. | கிருஷ்ணராஜ் திரு. ஜி. | சேலம்—1. |
| 62. | குப்புசாமி திரு. கு. | ஒட்டன்சத்திரம் |



| | | |
|---|---|---|
| 63. | குமர குருபர ராமநாதன் திரு.ச. | விளாத்திகுளம் |
| 64. | குமரி அனந்தன் திரு. | ராதாபுரம் |
| 65. | குமாரதாஸ் டாக்டர் தே. | கிள்ளியூர் |
| 66. | குருசாமி என்கிற அண்ணாதாசன் திரு. எம். | திருவரம்பூர் |
| 67. | கோமதி சீனிவாசன் திருமதி | வலங்கைமான் (செ.வ.) |
| 68. | கோவிந்தசாமி திரு. ஆர். | குடியாத்தம் |
| 69. | கோவிந்தசாமி திரு. ச. | எடப்பாடி |
| 70. | கோவேந்தன் திரு. எம். ஆர். | பேராவூரணி |
| 71. | சங்கரலிங்கம் திரு. ச. | சங்கரநாயனார் கோயில் (செ. வ.) |
| 72. | சண்முகம் திரு. இரா. | திருத்தணி |
| 73. | சண்முகம் திரு. என். | சோளிங்கர் |
| 74. | சண்முகம் திரு. ப. உ. | மேல் மலையனூர் |
| 75. | சண்முகயா பாண்டியன் திரு. | ஆலங்குளம் |
| 76. | சந்திரசேகரன் திரு. ஆ. | சோழவந்தான் |
| 77. | சந்திரசேகர் திரு. மு. | முகையூர் |
| 78. | சம்சுல் ஆலம் திரு.வி.எஸ்.டி. | பாளையங்கோட்டை |
| 79. | சமரசம் டாக்டர் கோ. | காவேரிப்பட்டினம் |
| 80. | சரோஜா திருமதி இரா | உப்பிலியாபுரம் (ஆ.வா) |
| 81. | சாமிக்கண்ணு திரு. தா. | செங்கம் (செ.வ.) |
| 82. | சித்தன் திரு. என். எஸ்.வி. | திருமங்கலம் |
| 83. | சிந்தன் திரு. வி. பி. | வில்லிவாக்கம் |
| 84. | சிவக்குமார் திரு. ஆ. | சமயநல்லூர் (செ.வ.) |
| 85. | சிவக்குமார் திரு. எம். | கூனூர் (செ.வ.) |
| 86. | சிவஞானம் திரு. என். | திருவோணம் |
| 87. | சிவப்பிரகாசம் திரு. சீ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 88. | சிவராமன் திரு. எஸ். | சின்னசேலம் |
| 89. | சிவராஜ் திரு. க. | ரிஷிவந்தியம் |
| 90. | சின்னக்குழந்தை திரு. மு. | ஆரணி |
| 91. | சின்னச்சாமி திரு. ரா. | தர்மபுரி |
| 92. | சின்னசாமி திரு. வே. கு. | பவானிசாகர் |
| 93. | சின்னராசு திரு. க. இரா. | கிருஷ்ணகிரி |
| 94. | சின்னராசு திரு. மா. | மேட்டுப்பாளையம் |

| | | |
|---|---|---|
| 95. | சுந்தரதாள் திரு. மா. | விளவன்கோடு |
| 96. | சுப்புராயர் திரு. சி. | கம்பம் |
| 97. | சுப்பராயன் திரு. கு. | திருப்பூர் |
| 98. | சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் திரு. எஸ். ஆர். | திருச்செந்தூர் |
| 99. | சுப்பிரமணியன் திரு. உ. | சிவகங்கை |
| 100. | சுப்பிரமணியன் திரு. வீ. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 101. | சுவாமிநாதன் திரு. வி.வி. | புவனகிரி |
| 102. | செங்காளியப்பன் திரு. ஆர். | சிங்காநல்லூர் |
| 103. | செங்கோட்டையன் திரு. கு. அ. | கோபிச்செட்டி பாளையம். |
| 104. | செங்கோட்டையன் திரு. பெ. | கபிலர்மலை |
| 105. | செம்மலை திரு. செ. | தாரமங்கலம் |
| 106. | செல்லமுத்து திரு. மொ. | திருவாரூர் (செ.வ.) |
| 107. | செல்லப்பா திரு. வி. கோ. | கடலூர் |
| 108. | செல்வராசன் திரு. அ. | துறைமுகம் |
| 109. | சேகர் என்கிற குலசேகரன் திரு.கே.பி. | பொன்னேரி (செ.வ.) |
| 110. | சொர்ணலிங்கம் திரு. கா. | திருவாடானை |
| 111. | சோலைராசு திரு. க. | மருங்காபுரி |
| 112. | சைதை துரைசாமி திரு. சா. | சைதாப்பேட்டை |
| 113. | சௌந்திரராசன் திரு. ஆர். | ஸ்ரீரங்கம் |
| 114. | சௌரிராஜன் டாக்டர் கே. | தியாகராயநகர் |
| 115. | ஞானசுந்தரம் திரு. சா. | மன்னார்குடி |
| 116. | டேனியல்ராஜ் திரு. எஸ். | ஸ்ரீவைகுண்டம். |
| 117. | தங்கமணி திரு. மு. | மாயூரம் |
| 118. | தங்கமணி திரு. கே. எம். | திண்டிவனம் |
| 119. | தங்கராசு திரு. ஏ. | குறிஞ்சிப்பாடி |
| 120. | தங்கராசு திரு. செ. | மங்களூர் (செ.வ.) |
| 121. | தங்கவேல்ராஜ் திரு. ப. ம. | கிருஷ்ணராயபுரம் (செ.வ) |
| 122. | தங்கவேலு திரு. வி. | வால்பாறை (செ.வ.) |
| 123. | தமிழ்மணி திரு. | திருப்போரூர் (செ.வ). |
| 124. | தமிழரசன் திரு. கு. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 125. | தனபால்திரு. ப. | சங்கரி (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 126. | தாமரைக்கனி திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. | தியாகராசன் திரு. ர. | விருத்தாசலம் |
| 128. | திருஞானம் திரு. பி. ஆர். | ஏற்காடு (ஆ.வா.) |
| 129. | திருநாவுக்கரசு திரு. எஸ். | அறந்தாங்கி |
| 130. | திருமலைசாமிக் கவுண்டர் திரு.சு. | உடுமலைப்பேட்டை |
| 131. | தீர்த்தகிரி கவுண்டர் திரு. டி. | மொரப்பூர் |
| 132. | தீர்த்தராமன் திரு. ப. | பாலக்கோடு |
| 133. | துரை அன்பரசன் என்கிற இராமலிங்கம் திரு. | நெல்லிகுப்பம் |
| 134. | துரை கிருஷ்ணமூர்த்தி திரு. | தஞ்சாவூர் |
| 135. | துரை கோவிந்தராசன் திரு. | திருவையாறு |
| 136. | துரைராசு திரு. எஸ்.பி. | காரைக்குடி |
| 137. | துரை ராமசாமி திரு. | வெள்ளக்கோவில் |
| 138. | தெய்வநாயகம் திரு. எ. | மதுரை சென்ட்ரல் |
| 139. | தேவராஜ் திரு. வி. எம். | வேலூர் |
| 140. | நடராசன் திரு. ஆ. | பேரூர் |
| 141. | நரசிம்ம பல்லவன் திரு.க. | உத்திரமேரூர் |
| 142. | நரசிம்மன் திரு. பூ. மு. | பள்ளிப்பட்டு |
| 143. | நல்லமுத்து டாக்டர் க. | பெரம்பலூர் (செ.வ.) |
| 144. | நல்லுசாமி திரு. என். | திருச்சிராப்பள்ளி-2 |
| 145. | நாச்சிமுத்து திரு. கே. பி. | மேட்டூர் |
| 146. | நாராயணன் திரு. எஸ். | திருநெல்வேலி |
| 147. | நாராயணன் திரு பு. கோ. | பவானி |
| 148. | நெடுஞ்செழியன் டாக்டர் இரா. | ஆத்தூர் |
| 149. | பட்டாபிராமன் திரு. ச. | திருவள்ளூர் |
| 150. | பரமசிவம் திரு. பா. ந. | பல்லடம் |
| 151. | பரிதி இளம்வழுதி திரு. | பெரம்பூர் |
| 152. | பழனி திரு. த. | ஆற்காடு |
| 153. | பழனிச்சாமி திரு. கா.செ. | காங்கேயம் |
| 154. | பழனிமுத்து திரு. சி. | ஆத்தூர் |
| 155. | பாண்டியன் திரு. பி. எச். | சேரன்மாதேவி |
| 156. | பாண்டுரங்கன் திரு. மு. | கலசபாக்கம் |
| 157. | பாப்பா சுப்பிரமணியன் திரு. | குத்தாலம் |
| 158. | பாரதி திரு. ஜி.கே.ஜெ. | திருவொற்றியூர் |

| | | |
|---|---|---|
| 159. | பாரமலை திரு. க. | மானாமதுரை (செ.வ.) |
| 160. | பாலகிருஷ்ணன் திரு.ச. | மொடக்குறிச்சி |
| 161. | பாலகிருஷ்ணன் திரு.வ. | சிவகாசி |
| 162. | பாலச்சந்திரன் திரு.வை. | பத்மநாபபுரம் |
| 163. | பாலச்சுப்பிரமணியன் திரு.க. | சீர்காழி (செ.வ.) |
| 164. | பாலசுப்பிரமணியன் திரு. எஸ். | அம்பாசமுத்திரம் |
| 165. | பாலசுப்பிரம்ணயன் திரு.வி.பி. | வேடசந்தூர் |
| 166. | பாலன் திரு. சு. | எழும்பூர் |
| 167. | பாலாஜி திரு. கே. | காஞ்சிபுரம் |
| 168. | பாலுச்சாமி திரு.ஏ. | பரமக்குடி (செ.வ.) |
| 169. | பாலுசாமி திரு. அ. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 170. | பிச்சை திரு. மு. | அருப்புக்கோட்டை |
| 171. | பிரணவநாதன் திரு. அ. | கடலாடி |
| 172. | பிரேம்குமார் திரு. அ. | திண்டுக்கல் |
| 173. | புருசோத்தமன் திரு. எஸ். | அரியலூர் |
| 174. | புஷ்பராசு திரு.த. | திருமயம் |
| 175. | பெரியசாமி திரு. அ. | தாராபுரம் (செ.வ.) |
| 176. | பெரியசாமி திரு. ரா. | தொட்டியம் |
| 177. | பெருமாள் திரு. தெ. | கடையநல்லூர் |
| 178. | பெருமாள் பிள்ளை திரு. கோ. | கன்னியாகுமரி |
| 179. | பொன்னம்மாள் திருமதி ஏ. எஸ். | பழனி (செ.வ.) |
| 180. | பொன்னுசாமி டாக்டர் அ. | பெருந்துறை |
| 181. | பொன்னுரங்கம் திரு. ப. | ராயபுரம் |
| 182. | பொன்னையன் திரு. சி. | திருச்செங்கோடு |
| 183. | மணவாளன் திரு. | திருப்பத்தூர் |
| 184. | மணிமாறன் திரு. மா. | நன்னிலம் (செ.வ.) |
| 185. | மலர்மன்னன் திரு. அ. | திருச்சிராப்பள்ளி–1 |
| 186. | மனோகரன் திரு. நாஞ்சில் கி. | புரசைவாக்கம் |
| 187. | மனோகரன் திரு. தி.நா.கோ.அ. | திருநாவலூர் |
| 188. | மாசிலாமணி டாக்டர் ந. | ஜெயங்கொண்டான் |
| 189. | மாதவன் திரு. செ. | திருப்பத்தூர் |
| 190. | மாதையன் திரு. யு.பி. | அந்தியூர் (செ.வ) |
| 191. | மாரிமுத்து திரு. த. | குளத்தூர் (செ.வ) |
| 192. | மாரிமுத்து திரு. மு. | திருப்பரங்குன்றம் |



| | | |
|---|---|---|
| 193. | மீனாட்சி சுந்தரம் திரு. மா. | வேதாரண்யம் |
| 194. | முகம்மது கனி திரு. ஜே. | புதுக்கோட்டை |
| 195. | முகம்மது சலீம் டாக்டர் த. | பெரியகுளம் |
| 196. | முசிறிபுத்தன் திரு.பி. | குளித்தலை |
| 197. | முத்துசாமி திரு.சு. | ஈரோடு |
| 198. | முத்துராமலிங்கம் திரு.பி.கே.எம். | உசிலம்பட்டி |
| 199. | முத்துராமலிங்கம் திரு.பொன். | மதுரை மேற்கு |
| 200. | முத்துவேல் திரு. கே. | முதுகுளத்தூர் |
| 201. | முத்தையா திரு. இரா. | சேடப்பட்டி |
| 202. | முருகன் திரு. கி. | செய்யாறு |
| 203. | முருகானந்தம் திரு. டி.என். | செஞ்சி |
| 204. | முனிரத்தினம் திரு. இரா. சா. | கும்மிடிப்பூண்டி |
| 205. | யசோதா திருமதி டி. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ) |
| 206. | ரமணி திரு. கு. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 207. | ரவீந்திரன் திரு. ஏ. எஸ். | திருவண்ணாமலை |
| 208. | ராமஜெயம் திரு.ம.நா. | வாணூர் (செ.வ) |
| 209. | ராமன் திரு. கி. | ராஜபாளையம் (செ.வ) |
| 210. | ராஜாபாபு திரு. ஜெ. | போளூர் |
| 211. | ரெங்கசாமி திரு. ஆர் | கோவில்பட்டி |
| 212. | ரெத்தினராஜ் திரு எஸ். | நாகர்கோவில் |
| 213. | லட்சுமி திருமதி பி. | அவினாசி (செ.வ) |
| 214. | வச்சிரவேலு திரு.எ. | தண்டராம்பட்டு |
| 215. | வடிவேல் திரு. கு. | கரூர் |
| 216. | வளர்மதி திருமதி பா. | மயிலாப்பூர் |
| 217. | விஜயபாலன் திரு. என். | பூம்புகார் |
| 218. | விஜயலட்சுமி பழனிச்சாமி திருமதி ப. | விரபாண்டி |
| 219. | வீராணம்பலம் திரு.க.வெ. | மேலூர் |
| 220. | வீரய்யன் திரு.கோ. | நாகப்பட்டினம் |
| 221. | வீராசாமி திரு.தா. | ஒரத்தநாடு |
| 222. | வேங்கடரமணன் திரு. டி.ஆர். | தென்காசி |
| 223. | வெங்கடரெட்டி திரு.டி. | ஒசூர் |
| 224. | வெங்கடாசலம் திரு.அ. | ஆலங்குடி |
| 225. | வெங்கடாசலம் திரு.கி. | லால்குடி |

| | |
|---|---|
| 226. வெங்கடாசலம் திரு. டி.எம். | பரகூர் |
| 227. வேணுகோபால் திரு. எஸ். | டாக்டர் ராதாகிருஷ்ண நகர் |
| 228. வேணுகோபால் திரு. கே.வி. | தள்ளி |
| 229. ஜான் வின்சென்ட் திரு. மு. | நாங்குநேரி |
| 230. ஜகதீசன் திரு. ஆனூர் பு.கோ. | செங்கல்பட்டு |
| 231. ஜெகதீசன் திரு. சு. | அரவக்குறிச்சி |
| 232. ஜெயச்சந்திரன் திரு. சா. | காட்டுமன்னார்கோவில் (செ.வ) |
| 233. ஜெயராமன் திரு. வே. இரா. | தேனி |
| 234. ஹேமச்சந்திரன் திரு. ஜே. | திருவட்டாறு |
| 235. பிரான்சிஸ் திரு. ஜி.கே. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
|---|---|
| 1. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் | அமைச்சர் |
| 2. மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே | அமைச்சர் |
| 3. மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் | அமைச்சர் |
| 4. திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி | தலைமை வழக்கறிஞர் |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

*1985, ஜூலை 17,* புதன்கிழமை.

ஆடி 2, குரோதன-திருவள்ளுவர் ஆண்டு 2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்'

''இச் செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம்'' என்று சொல்லுதல் எவர்க்கும் எளியனவாம் சொல்லியபடி செய்து முடித்தல் அரியனவாம்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

விருத்தாசலம் அணை ஆயக்கட்டு பகுதியில் வரி தள்ளுபடி

*884—(*வினா எண். 941)*—திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் அணையில் தெற்கு மெயின் சானலில் ஏற்பட்ட உடைப்பு காரணமாக ஆயக்கட்டு நிலங்களின் வரியை தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை பரிசீலித்து வரி வஜா செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, விருத்தாசலம் அணையின் தெற்கு மெயின் வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டது. உடைப்பை மூட பொதுப்பணித்துறை தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேற்படி வாய்க்கால் மூலம் பயன்பெறும் நிலங்கள் இந்த உடைப்பினால் பாசனம் பெறவில்லை எனினும் தேவங்குடி, காவனூர் ஆகிய கிராமங்களில் உள்ள ஏரியில் தேங்கும் மழை நீரைக் கொண்டு சாகுபடி செய்வதாலும் கிணறு மற்றும் குழாய்க்கிணறு பாசனங்களால் சாகுபடி செய்வதாலும் ஆயக்கட்டுதாரர்களுக்கு வரிவஜா வழங்கப்படவில்லை. ஐந்து ஏக்கருக்கு குறைவாக நஞ்சை நிலம் உள்ளவர்களுக்கு வழங்கப்படும் மாமூல் நஞ்சை தீர்வை வஜா வழங்கப்படுகின்றது.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது விருத்தாசலம் தொகுதியில் வலதுகரை கால்வாயிலே காவனூர், கீரனூர் போன்ற கிராமங்களுக்கு 1974-லிருந்து அந்த வாய்க்கால் வெட்டப்படாமலும், அங்கே உடைப்பு இருப்பதைக் கட்டாத காரணத்தாலும், அந்த விவசாயிகளுக்கு அந்தத் தண்ணீர்ப் போய்ச் சேரவில்லை. அதனாலே பாசன வசதி கெட்டு, பயிர்கள் சேதம் அடைந்து, அரசிடம் முறை

யிட்டார்கள். அந்த முறையீட்டின் பேரிலே வட்டாட்சியர் பார்த்து, அதைப்பற்றி ஆலோசனை செய்து, தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுப்போம் என்று சொன்னார்கள். ஆகவே, உங்கள் மூலமாக, அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். குறைந்தது 10 ஆண்டுகள் அந்த வாய்க்காலிலே அவர்களுக்கு தண்ணீர் பாயவில்லை. இப்பொழுது இரண்டு, மூன்று ஆண்டுகளாகத் திட்டமிட்டு இந்த அணை கட்டப்படுகிறது. ஆகவே, நீர் பாயாத காரணத்தாலே வரி தள்ளுபடி செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா.நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாய்க்காலைச் சீர்படுத்துகின்ற முறையில் அணைக்கட்டைச் சீர்படுத்தி, நீர்ப்பாசனம் செய்கின்ற அத்தகைய முயற்சியையும் நீர்ப்பாசனத் துறை முறைப்படி மேற்கொள்ளும் என்று கருதுகிறேன். நான் முதலிலே சொல்லியபடி 5 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு, புஞ்சைத் தீர்வைக்குச் சமமான அளவில் வரி தள்ளுபடி செய்யப்படுகிறது. மற்ற வகைகளில் தள்ளுபடி செய்கின்ற நிலைமை ஏற்படவில்லை.

திரு. ஆர். தியாகராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 ஏக்கர் வரி தள்ளுபடி செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எல்லோரிடமும் வரி வாங்கி விட்டார்கள். அவர்கள் பூராவும் கட்டி விட்டார்கள். அதனாலே ஏழை விவசாயிகளிடமிருந்து அதையாவது தள்ளுபடி செய்யவோ ஏற்கனவே வசூல் செய்திருந்தால் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கருதுகின்ற கருத்தை வைத்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தக்க நடவடிக்கை மேற்கொள்ள முடியுமானால், அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

### பழவேற்காடு பகுதியில் புயல் பாதுகாப்பு இல்லங்கள்.

685—(*வினா எண். 2201) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பொன்னேரி தொகுதி பழவேற்காடு பகுதி கலங்கரை விளக்க குப்பம், அவுரிபாக்கம், அண்ணாமலைச்சேரி, மாங்கோடு, கள்ளூர் ஆகிய இடங்களில் ''புயல் பாதுகாப்பு இல்லங்கள்'' கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, (அ) செங்கல்பட்டு மாவட்டம், பொன்னேரி தொகுதி பழவேற்காட்டில் ஒரு புயல் காப்பகம் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது. ஏனைய இடங்களில் புயல் காப்பகம் கட்டும் திட்டம் ஏதும் இல்லை.



திரு. கே. பி. கே. சேகர்: பேரவைத் தலைவர் அவர்களே, எனது பொன்னேரி தொகுதியில் பழவேற்காடு பக்கத்தில் இருக்கிற அரங்கம், திருமலை நகர், செம்பாசிபள்ளி குப்பம் போன்ற பகுதிகளில், கடந்த நவம்பர் 11, 12 தேதிகளில் வீசிய கடுமையான புயலால் 34 மீனவத் தொழிலாளர்கள் மாண்டுபோனதை நாடு அறியும் என்று கருதுகிறேன். அது மீனவர் அதிகமாக வசிக்கிற பகுதி என்பதால், கல்லூர், மாங்காடு, அண்ணாமலைச்சேரி ஆகிய பகுதிகளில் அரசு இந்த ஆண்டிலாவது பாதுகாப்பு இல்லங்கள் கட்ட முன் முயற்சி எடுக்குமா என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் இருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி பழவேற்காட்டில் ஒரு புயல் காப்பகம் கட்டுவதற்கான முறையில் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே 78 காப்பகங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 32 காப்பகங்கள் கட்டப்படுகின்றன. ஆகவே 110 கட்ட திட்டமிடப்பட்டு செயல்பட்டு வருகின்றது. மேற்கொண்டு ஐரோப்பிய பொருளாதாரச் சமுதாயம் மூலம் 30 காப்பகங்கள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அது எந்த, எந்த இடம் என்பதை ஆராய்ந்து, எந்த, எந்த இடங்கள் பாதிக்கப்படுகின்றன என்பதைப் பார்த்து, முன்னுரிமை அடிப்படையிலே அவை கட்டப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற பகுதிகள் அதிலே சேருமா, சேராதா என்று இப்பொழுது சொல்வதற்கில்லை. ஆய்வு முடிந்ததற்குப் பிறகு சொல்லலாம்.

திரு. கே. பி. கே. சேகர்: தலைவரவர்களே, அந்த ஐரோப்பியத் திட்டத்தின் மூலம் வரக்கூடிய அந்த நிதி ஒதுக்கத்தால் எவ்வளவு கட்டிடங்கள் எவ்வளவு ரூபாயில் கட்டப்படவிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஐரோப்பிய பொருளாதார சமுதாயத்தின் மூலம் எவ்வளவு நிதி என்ற கணக்கு வரவில்லை. ஆனால் 30 கட்டிடங்கள் கட்டப்படுவதற்கான முயற்சிகள் அரசின் ஆய்வில் இருக்கின்றன.

திரு. கா. ஆறுமுகம்: தலைவரவர்களே, இந்த கடலோரங்களிலுள்ள பாதுகாப்பு இல்லங்களில் இப்போது இலங்கை அகதிகளை வைத்திருக்கிறோம். இப்போது புயல் அடிக்கிற நேரம் அந்த சீசன் நெருங்கிக்கொண்டிருக்கிறது. அப்படி வரும்போது இவர்களை எங்கே அனுப்புவது? கடலோர மக்களுக்கு என்ன பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கின்றன? இதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, புயல் அடிக்கிற அறிகுறிகள் மற்றவைகள் வருவதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னால் மாவட்ட ஆட்சித் தலைவர் தக்க நடவடிக்கை எடுப்பார். அப்படி வருகிறபோது கடற்கரையோர

மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க, அவர்கள் அந்த புயல் பாதுகாப்பு இல்லங்களில் தங்க வாய்ப்பு அளித்துவிட்டு பள்ளிக் கூடங்கள் வேறுபல இடங்களில் சில குறிப்பிட்ட நாட்களுக்கு அகதிகளைத் தங்கச் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் முறைப்படி தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வார்.

குத்தகை நிலுவைகளைத் தள்ளுபடி செய்தல்.

686—(*வினா எண். 2210)—திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தமிழகத்தில் குத்தகை விவசாயிகளிடம் இயற்கை இடர்பாடுகளினால் ஏற்பட்ட குத்தகை பாக்கிகளுக்கு நிவாரணம் கிடைக்கக்கூடிய வகையில் அவைகளைத் தள்ளுபடி செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கோ. வீரய்யன்: தலைவரவர்களே, இயற்கைப் பாதிப்பினால் புயல், வெள்ளம் போன்ற காலங்களில் மகசூல் முழுவதும் பாதிக்கப்பட்ட நில உடைமையாளர்களுக்கு நிலவரியை தள்ளுபடி செய்வது, குத்தகை விவசாயிகளுடைய குத்தகைப் பாக்கிகளை தள்ளுபடி செய்வது பற்றி இதுவரை பரிசீலனை செய்யாவிட்டாலும் இனிமேலாவது பரிசீலித்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தள்ளுபடி செய்கின்ற நிலைமை இல்லை. ஆனால் உடனடியாக அவர்கள் செலுத்தவேண்டிய பாக்கிகளிலிருந்து நிவாரணம் அளிக்கின்ற வகையில் அவ்வப்போது அரசு சட்டங்கள் இயற்றி, கட்டுவதற்கான கால வரம்பை நீட்டியிருக்கிறது. குவிந்து இருக்கும் குத்தகைப் பாக்கிகளைச் சுலபமான தவணைகளில் கட்டுவதற்கு வழிவகை செய்யப்படுகிறது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 30-6-83 உடன் முடிவடைந்த பசலி ஆண்டு குத்தகையை அல்லது முந்தைய பசலி ஆண்டு குத்தகையை 30-9-85 முதல் 4 சம அரையாண்டு தவணைகளில் செலுத்த வகை செய்ய, உரிய சட்டம் இயற்றப்படவிருக்கிறது. 30-6-85 ஆம் ஆண்டு உடன் முடிவடையும் பசலியாண்டு குத்தகைப் பாக்கியை 31-12-85 முதல் 5 சம அரையாண்டுத் தவணைகளில் செலுத்த வகை செய்யவும் சட்டம் கொண்டுவரப்படவிருக்கிறது. 1965 ஆம் ஆண்டு முதல் சில தனிப்பட்ட நேர்வுகள் தவிர அவ்வப்போது குத்தகை போன்ற நிலுவைகளிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. இப்போது நான் குறிப்பிட்டபடி சட்டம் இயற்றப்பட்டால் அவர்கள் செலுத்த வேண்டிய பாக்கிகளை 5, 6 தவணைகளில் சுலபமாகச் செலுத்த வாய்ப்பு அளிக்கப்படும்.





திரு. கோ. வீரய்யன்: தலைவரவர்களே, அவ்வப்போது பாதிப்பு ஏற்படக்கூடிய காலத்தில் இந்த கால நீட்டிப்பு கொடுத்து, திருப்பிச் செலுத்த அரசு வாய்ப்பு கொடுக்க இப்போதும் சட்ட முன்வடிவு வரவிருக்கிறது என்ற கருத்தைச் சொன்னார்கள். அதே நேரத்தில் மகசூல் முழுவதும் அழிந்து போன நேரத்தில், அவர்கள் வரி, குத்தகை செலுத்தும் காலத்தை நீட்டிக்கொடுத்து திருப்பிச் செலுத்தச் சொல்வது நிவாரணமாக இருக்காது. அவர்களுக்கு முழு அளவுக்கு தள்ளுபடி செய்யாவிட்டாலும் ஓரளவுக்காவது தள்ளுபடி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்த அளவுக்கு முழுமையாக அழிந்திருக்கிறது என்று சொல்ல இயலாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற கருத்துபற்றி தனியாக ஆராயலாம்.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது தள்ளுபடி செய்ய இயலாது என்று சொன்னார்கள். எல்லா நேரங்களிலும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நாங்கள் கேட்கவில்லை. ஆனால் 1983 டிசம்பர் 21, 22 தேதிகளில் 90 நாட்களில் பெய்யவேண்டிய மழை இரண்டே நாளில் பெய்திருக்கிறது. தஞ்சை மாவட்டம் முழுவதும் அதனால் பாதிக்கப்பட்டது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு தெரியும். அந்த மாதிரி பாதிக்கப்பட்ட நேரங்களில் தள்ளுபடி செய்ய அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–10).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, முழுவதுமே பாதிக்கப்பட்டு ஒன்றுமே செலுத்த இயலவில்லை என்ற சூழ்நிலையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலிருந்து அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை அனுப்படுமேயானால் அதை அரசு தனியாகப் பரிசீலிக்கும்.

திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டம்.

708 அ—(*வினா எண். 3872)—திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் கடன் வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு ரூபாய் கடன் வழங்கியுள்ளது?

(இ) திட்டப்பணிகள் எப்போது தொடங்கி முடிவுறும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) திருப்பூர் இரண்டாவது குடிநீர் திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் ரூ. 288 இலட்சம் கடனுதவி வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. கடனுதவி பெற்றவுடன் திட்டப்பணிகள் தொடங்கப்பட்டு ஐந்து ஆண்டுகளில் முடிக்கப்படும்.

திரு. சு. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் இரண்டாவது குடிநீர்த் திட்டத்திற்கு எந்தத் தேதியில் எல்.ஐ.சி-யிடம் இருந்து அரசு கடன் கோரிக் கடிதம் எழுதியிருக்கின்றது? எல்.ஐ.சி. எந்தத் தேதியில் கடன் வழங்க ஒப்புக் கொண்டது?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, எந்தத் தேதியில் என்பது இல்லை. 1983 ஆம் ஆண்டிலே கடன் கேட்டோம். இதிலே தனி நபர் செலவு அதிகமாக இருக்கின்றது என்ற ஒரு காரணத்தைக் காட்டி அவர்கள் கடன் தர மறுத்து விட்டார்கள். எனவே 1983-84-ல் அந்தக் கடனைப் பெற இயலவில்லை. மறுபடியும் குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் அவர்கள் விவாதித்து எப்படியாவது இதைத் தரவேண்டும் என்ற வகையில் அவர்கள் கருத்துச் சொல்லி அவர்களுடைய முதலீட்டுக் குழு கூட்டங்களில் வைத்து முடிவு செய்து இப்போது கடனை வழங்க ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எல்.ஐ.சி. கடன் கோரப்பட்டிருந்தாலும் மாநில அரசு குடிநீர்த் திட்டத்திற்காக எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது? திட்டப் பணிகளை நிறைவேற்ற எந்தத் துறையிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது? அப்படிப்பட்ட துறையின் தலைமை அலுவலகத்தைத் திருப்பூரில் அமைத்து இயங்க வைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: பேரவைத் தலைவரவர்களே, மாநில அரசு 704.44 இலட்சம் ரூபாய் இதற்காகச் செலவு செய்ய இருக்கின்றது. குடிநீர் வடிகால் வாரியம்தான் இந்தப் பணியை மேற்கொள்ள இருக்கின்றது. தலைமை அலுவலகத்தைத் திருப்பூரில் வைப்பதில் ஒன்றும் சிக்கல் இல்லை.

கோவை மாநகராட்சியில் உள்ள லாரிகள்.

687—(*வினா எண். 16)—திரு. கு. ரமணி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகராட்சியில் குப்பைகளை அப்புறப்படுத்த லாரிகள் மற்றும் வண்டிகள் மிகவும் குறைவாக உள்ளது அரசுக்குத் தெரியுமா?





(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

(இ) சுகாதார ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) கூடுதலாக 16 லாரிகள் வாங்க அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(இ) இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

கோவை நகராட்சியின் வழங்கலில் இழப்பு.

688—(*வினா எண். 498)—திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகர எல்லைக்குள் மாநகராட்சி விநியோகம் செய்யும் மின்சாரத்தில் ஏற்படும் லைன் லாஸ் பற்றி அரசுக்கு ஏதேனும் தகவல் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 1982-83, 1983-84 மற்றும் 1984-85 ஆகிய ஆண்டுகளில் சராசரி மின் இழப்பு 4.64 சதவீதம் ஆகும்.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கார்ப்பரேஷன் எல்லைக்குள் 14 பெர்சன்டுக்கு மேல் லைன் லாஸ் ஏற்படுவதற்குக் காரணம் இருக்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் இது உண்மையாகவே லைன் லாஸ்தான் என்பது பற்றி குறிப்பு அரசுக்கு வந்திருக்கின்றதா? அல்லது வேறு வகைகளில் மீட்டரைச் சரியாக ஓடவிடாமல் தடுத்து அல்லது வேறு ஏதாவது வகையில் மின்சாரம் திருடப்பட்டிருப்பதாக அரசுக்குக் குறிப்பு வந்திருக்கின்றதா? அவ்வாறு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தி சிலரைக் கண்டுபிடித்தும் அவர்கள் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க முடியாமல் இருக்கின்றது என்பது பற்றி அரசின் கவனத்திற்கு வந்திருக்கின்றதா? அப்படியானால் இது போன்ற நிலைமைகளில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி ஆராய்ந்து மேலும் இப்படி லைன் லாஸ் ஏற்படாமல் தடுக்கக்கூடிய நிலையினை உருவாக்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர் களே, மின்சாரத்தைப் பொறுத்தவரையில் லைன் லாஸ் இல்லாமல் இருக்க முடியும் என்று உலகத்திலே எங்கும் செய்வதாக இல்லை. அதைக் குறைக்கத்தான் முடியுமே தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது. லைன் லாஸ் ஏற்படக் காரணம் செம்புக் கம்பிக்குப் பதிலாக அலுமினியக் கம்பிகள் போட்டால் லைன் லாஸ் அதிகமாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் திருட்டும் நடந்திருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்கிறேன். 107 இடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் நடந்ததாகக் கண்டுபிடிக்கப் பட்டு அபராதத் தொகையாக 1,78,984 ரூபாய் 30 பைசா இழப்புத் தொகையாகவும் அபராதமாகவும் விதிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அப்படி மேற்கொண்டும் எங்கேயாவது நடக்கின்றது என்ற தகவல் மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடத்திலே இருந்தால் அதுபற்றி அரசுக்குத் தெரிவித்தால் உடனடியாகக் கண்டுபிடித்து தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. மு. இராமநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி அதிகாரிகளிடத்திலே ஏற்கெனவே இதுசம்பந்தமாக நான் கலந்து பேசி இருக்கிறேன். ஆனால் பழுதுபட்டுப்போன கம்பிகள் இன்னும் பழுதுபார்க்கப்படாமல் அந்த இன்சுலேஷன் பிரிந்து போய் தானே தீ பற்றிக் கொள்ளக்கூடிய நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. கம்பிகள் மாற்றப்பட வேண்டும் என்பது முக்கியமான ஒரு வேண்டுகோள். அதுபோல பழுது பார்க்கக்கூடிய நிலைமையையும் ஒழுங்காகப் பார்த்தால் ஓரளவுக்கு லைன் லாஸ் குறையும். மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள் லைன் லாஸ் ஏற்படத்தான் செய்யும் என்று. ஆனால் அது எவ்வளவு சத வீதம் என்பதுதான் பிரச்னையே தவிர வேறு அல்ல என்றுதான் நான் சொல்கிறேன். 16 சதவீதம் லைன் லாஸ் என்பது ஒப்புக் கொள்ளப்படாத ஒன்று. ஆகவே அதை கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிகாரிகளோடு கலந்து பேசியிருப்பதாகச் சொன்னார்கள். லைன் லாஸ் என்பதில் அரசு ஒப்புக் கொண்டிருப்பது 15 சதவீதம் வரையில் இருக்கலாம் என்பது. அதனாலே 16 சதவீதம் நியாயம் என்று சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல கம்பிகள் பழுதுபார்க்கப் பட வேண்டியவைகள் நிறைய இருக்கின்றன. மாற்றப்படவேண் டியவைகளும் இருக்கின்றன. அத்தோடு சில இடங்களில் டிரான்ஸ் பார்மர்கள் கூட மாற்றப்பட வேண்டியிருக்கின்றன. சில நேரங் களில் மின் இணைப்பு பெறுபவர்கள் அதிகாரிகளுக்கு தெரியாம லேயே உயர்தர மோட்டார் வைத்து ஓட்டுவதன் காரணத்தால் லைன் லாஸ் ஏற்படுகிறது. அவைகள் எல்லாம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கம்பிகளை மாற்றுவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.



1985 ஜூலை 17]

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, கோவை மாநகராட்சியில் மின்சார விநியோகம் என்பது சில இடங்களில் மாநகராட்சியிடமும், ஆடெட் ஏரியா என்று சொல்லப்படுகிற சில பகுதிகளில் மின்சார வாரியத்திடமும் இருக்கிறது. அப்படி இரண்டு நிர்வாகங்களின் கீழ் இந்த மின் விநி யோகம் நடைபெறுவதால் சமயத்தில் ஏதாவது இடர்பாடுகள் ஏற்படுகிறபோது, எந்த நிர்வாகத்தை அணுகுவது என்று தெரியா மல், பொது மக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. அதைப் பற்றி அரசு அறியுமா? ஆகவே அதை ஒரே நிர்வாகத்தினுள் கொண்டுவர முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாநகராட்சியாக ஆக்கப்படுவதற்கு முன்பு, கோவை, நகராட்சி யாக இருந்தது. அப்போது மின்சாரம் சம்பந்தமான எல்லா வற்றையும் நகராட்சியே கவனித்துக் கொண்டிருந்தது. அந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டிருந்தது. அதற்குப் பிறகு அது மாநகராட்சியாக ஆக்கப்படுவதற்காக, அதைச் சுற்றியிருக்கும் சில பகுதிகளையும் சேர்த்து, மாநகராட்சியாக்கப்பட்டது. அந்தப் பகுதிகள் எல்லாம் அப்போது மின்வாரியத்தின் கீழ் பொறுப்பில் இருந்தன. ஆகவே இப்போதும் அதுபோன்றே இரண்டு பிரிவாக இருந்து வருகின்றன. இவைகளையெல்லாம் என்ன செய்வது என்பதுபற்றி ஆலோசனை செய்து சட்டப்படியான நடவடிக்கை களை மேற்கொண்டதற்குப் பிறகுதான், நடவடிக்கை எடுக்க வேண்டும்.

திரு தி. அழகமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சி, நகராட்சிகளில் எல்லாம், தெரு விளக்குகளை பகல் நேரங்களிலும், மாலையில் இருட்டுவதற்கு முன்னாலேயும் எரிய விடுவதன் காரணமாக மின்சாரம் வீணாக்கப்படுகிறது. இதைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர் களே, பகல் நேரங்களில் அப்படி விளக்கு எரிவதாக எனக்குத் தெரியவில்லை. எங்காவது அப்படி எரிகிறது என்றால், உரிய தகவல்களை கொடுத்தால் நடவடிக்கை எடுக்க தயாராக இருக் கிறோம்.

ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆயாக்களுக்கு ஊதியம் வழங்குதல்.

689—(*வினா எண்.748)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணிபுரியும் ஆயாக் களுக்கு (School Conductress) சம்பளம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை நிவர்த்திக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் பற்றி நன்கு பரிசீலித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அலுவலக கணக்கு அலுவலர்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப் பட்டுள்ளனர். கல்வி மானியத்தை சரியாக கணக்கிட்டு பெறத் தக்க நடவடிக்கை உடனே எடுக்கப்படும்.

திரு. ஜெ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலேயிருந்து வர வேண்டிய கிராண்ட் உரிய காலத்தில் வராததால்தான் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட முடியாத நிலை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். எனவே, எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலேயிருந்து கிராண்ட் போவதற்கு கொஞ்சம் காலதாமதம் ஆனாலும்கூட, ஒன்றியத்திலே உள்ள பொது நிதியிலிருந்து சம்பளத்தை முதலிலே கொடுத்துவிட்டு, பிறகு எஜுகேஷன் டிபார்ட்மெண்டிலேயிருந்து அந்த கிராண்ட் வந்த பிறகு அதை ஈடு செய்கிற வகையில் அமைச்சர் அவர்கள் உத்தரவு இடுவார்களா? நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1981-ம் ஆண்டு ஒன்றியங்களில் உள்ள ஆரம்பப் பள்ளிகளை எல்லாம் அரசு உடைமை ஆக்கியபோது, ஆயாக்களையும் அங்கிருந்த காவலர்களையும், அவர்களோடு சேர்த்து எஜுகேஷன் டிபார்ட்மெண்ட்டில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதனால் அவர்களுக்கு கொடுக்கின்ற மானியத்தை கொடுக்கவில்லை. அதை கொடுக்க வேண்டும் என்று உள்ளாட்சி, கல்வித் துறையிடம் கேட்டிருக்கிறது. அது இன்னமும் பரிசீலனையில் இருக்கிறது. இப்போது மீண்டும் ஆரம்பப் பள்ளிகள் உள்ளாட்சித் துறைக்கு மாற்றப்பட்டிருக்கிற காரணத்தினால் அங்கிருக்கிற ஆயாக்களும், காவலர்களும் சம்பளம் பெற அரசே அதற்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று உள்ளாட்சித் துறை வற்புறுத்தியிருக்கிறது. இதுவரையில் ஊராட்சி ஒன்றியத்தினால்தான் அவர்களுக்கு பணம் கொடுக்கப்பட்டு வருகிறது என்றாலும் சில ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை பற்றாக் குறை இருக்கிற காரணத்தினால் சொமங்கள் இருக்கலாம். அது கிராண்ட் வந்தவுடன் தீர்க்கப்படும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுவதின் மூலமும், அல்லது இறந்து விடுவதன் மூலமும் ஏற்படும் கண்டக்ரூஸ் பணிகளுக்கான காலி யிடங்கள் நிரப்பப்படுவதே இல்லை அப்படி நிரப்பப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம்? அப்படி நிரப்பப்படாமல் இருப்பதால் ஒருவேளை அந்தப் பதவிகளை ஒழித்துவிடலாம் என்று அரசு முடிவெடுத்துள்ளதா என்று அறிய விரும்புவதோடு,





அப்படி அந்தப் பதவிகள் நீக்கப்பட்டுவிடுமேயானால், அந்தப் பணிகளைச் செய்வதற்கு மாற்று ஏற்பாடு யார் மூலமாகச் செய்யப்பட இருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, கண்டக்ரஸ் என்று சொல்லப்படுகிற ஆயாக்கள் பாடசாலைகளில் வைக்கப்பட்டிருப்பதன் காரணம், முன்பு பாடசாலைகளுக்கு சிறுவர்கள் வருவதில் சிரமம் இருந்தது. ஆகவே அவர்களை கூட்டிக் கொண்டு வருவதற்காக இருந்தது. இப்போது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சத்துணவுத் திட்டம் அமுலாக்கப் பட்டிருக்கிறது பிள்ளைகள் பள்ளிக்கு சரியாக வந்து கொண்டிருக் கிறார்கள். ஆயாக்கள் தேவைதானா என்பது பரிசீலனை செய்ய வேண்டிய ஒன்று. இருக்கின்றவர்களை வேலையை விட்டு எடுப்பதாக உத்தேசம் இல்லை. ஆனால் இருக்கின்றவர்களுக்கு பதில் மாற்று ஆயாக்களை நியமிக்கப்படுவதைப் பற்றி அரசு பரிசிலித்துத்தான் முடிவு எடுக்கும்.

ஊராட்சிகளில் பகுதி நேர எழுத்தர் மற்றும் சுகாதார சிப்பந்திகள்.

690—(* வினா எண். 800) திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஊராட்சிகளில் பணிபுரியும் பகுதி நேர எழுத்தர்கள் மற்றும் பகுதி நேர சுகாதார சிப்பந்திகளது மாத ஊதியத்தை உயர்த்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

வீர உடையார் கோவில் கண்மாய்.

691—(*வினா எண். 1144)—திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நத்தம் தொகுதி, நத்தம் ஒன்றியம் சாத்தம்பாடி கிராமத்தில், வீர உடையார் கோவில் கண்மாய் ஆழப்படுத்தா மல் உள்ளது. அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேற்கூறப்பட்ட வீர உடையார் கண்மாய்க்கு பாசன ஆயக்கட்டு நிலங்கள் கிடையாது. கோவில் உபயோகத்திற்காக உபயோகிக்கப்பட்டு வருகிறது. அதனை ஆழப்படுத்த தேவையை அனுசரித்து ஊராட்சி நிதியிலிருந்து எடுத்துச் செய்ய நத்தம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, அங்கே பிரான் மலையை அடுத்து வீர உடையார் கோவில் இருக்கிறது. அந்தக் கோவிலுக்குள் அந்தக் கண்மாய் இருக்கிறது. அந்தக் கண்மாயை ஆழப்படுத்தினால் கோவிலுக்கு வருகிற பொது மக்கள் எல்லாம் அந்தத் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அதோடு அங்கே இருக்கிற பகுதியிலுள்ள கால்நடைகளுக்கு எல்லாம் வசதியாக, அந்தக் கண்மாயை ஆழப்படுத்துகிறபோது மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி அவைகளும் பயன்படும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து, அந்தக் கண்மாயை நல்லவிதத்தில் ஆழப் படுத்தித் தருவதற்கு முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆழப்படுத்துவது என்று முடிவெடுத்து ஊராட்சி நிதியிலிருந்து எடுத்துச் செய்யவேண்டுமென்று ஊராட்சி ஒன்றியம் அறிவுறுத்தி இருக்கிறது. இதற்கு சுமார் 5,000 ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: தலைவர் அவர்களே, கரந்தமலை, அழகர்மலை, சிறுமலை போன்ற பகுதிகளில் கண்மாய்கள் அதிகமாக இருப்பதால், மழைக்காலங்களில் தண்ணீர் அதிகமாக வீணாகப் போகிறது. அந்த நிலையைப் போக்க அந்தக் கண்மாய்களை ஆழப்படுத்திவிவசாயிகளுக்கும். பொதுமக்களுக்கும் வசதி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்து தர முடியும்.

கொள்ளிடம் ஒன்றியத்தில் ஊராட்சிகள் இணைப்பு.

692—(*வினா எண். 2171)—திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுக்கா, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள ஆனைக்காரன் சத்திரம் பேரூராட்சியையும் கோபால் சமுத்திரம் ஊராட்சியையும் இணைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேற்றப் பெறும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, கொள்ளிடம் பேரூராட்சி ஊராட்சி ஒன்றியத்தில் ஆனைக்காரன் சத்திரம் பகுதியாகும். என்பது கொள்ளிடம் நகருக்கு கிழக்கே இருக்கிற ஊராட்சியின் கொள்ளிடம் நகரம் என்பது கோபாலசமுத்திரம் ஊராட்சிக்கு அதிகம் வருவாய் எல்லையில் இருக்கிறது. அந்த ஊராட்சிக்கு அதிகம் வருவாய் தரக்கூடிய கடைகள், சினிமா தியேட்டர் போன்ற இடங்கள் எல்லாம் அந்த ஊராட்சியின் எல்லையிலே இருக்கிறது. ஆனால் வருமானம் இல்லாத பகுதிதான் ஆனைக்காரன் சத்திரம் பேரூராட்சி என்பது. அகவே, ஆனைக்காரன் சத்திரம் பேரூராட்சியை, கொள்ளிடம் நகரம் என்று சொல்வதினால். அந்த நகரத்தோடு இணைத்தால் கோபாலசமுத்திரம் ஊராட்சியும் அதில் கட்டுப்படுகிறது. இரண்டையும் இணைத்தால் நல்ல வருவாய் வருவதற்கு, அந்தப் பகுதி மக்களுக்கு செலவு செய்யக் கூடிய அளவிற்கு நிதியைத் திரட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அரசு இதனை மறுபரிசீலனை செய்து இதனை இணைப்பதற்கு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலே நியாயம் இருக் கிறது என்றாலும், தேர்தலுக்காக எல்லா வேலைகளும் மும்முரமாக நடந்து கொண்டிருக்கின்றன. தேர்தல் நடக்க விருக்கிற நிலையில் வாக்காளர் பட்டியல் எல்லாம் தனித் தனியாக பிரித்து தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இணைப்பது என்பது சாத்தியமல்ல. இதைப் பின்னாலே அரசு பார்த்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த ஆனைக்காரன் சத்திரம் என்பது 14 வார்டுகளைக் கொண்ட பேரூராட்சி ஆகும். அதிலே இருக்கிற பகுதிகள் எல்லாம் மிகவும் பின்தங்கிய கிராமங்கள் தான். இந்த 14 கிராமங்களில் பின் தங்கிய நிலைமை இருக்கிறதால், அவர்களுக்கு வருமானம் இல்லாத காரணத்தால் தெரு விளக்குகள், தண்ணீர் வசதி, சாலை வசதி போன்றவைகளை செய்ய முடியாத அளவிற்கு அந்தப் பேரூராட்சியின் நிர்வாகம் இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் தேர்தலுக்கு பிறகு அதனைப் பார்க்கலாம். என்று சொன்னார்கள். என்னுடைய வேண்டுகோளானது, இப்படிச் செய்வதற்கு வாய்ப்பில்லையென்றால், அந்தப் பேரூராட்சியை இரண்டு ஊராட்சிகளாக மாற்றுவதற்காவது அரசு பின்னாலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரணமாக பேரூராட்சியாக இருக்கும்போது ஆண்டு ஒன்றுக்கு சம்பளமாக ரூ. 85,000 கொடுக்க வேண்டியிருக்கிறது. முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி, இலட்ச ரூபாய்க்கு குறைவாக வருமானம் வருகின்ற பேரூராட்சிகள் ஊராட்சிகளாக மாற்றப்பட வேண்டுமென்று அறிவித்தபடி, 66 பேரூராட்சிகள் அப்படி மாற்றப்பட்டிருக்கின்றன. இலட்சத்திற்கு மேலே இப்போது வருமானம் இருக்கிறது. ஆயினும் இப்போது நிதி பற்றாக்குறை இருப்பது அரசுக்குத் தெரியும். கடந்த 14 ஆண்டுகளாக வரியை உயர்த்தாமல் அப்படியே வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக இது இருக்கக் கூடும். தேர்தல் நடந்து முடிந்த பிறகு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் வந்த பிறகு, நிச்சயமாக வரியை உயர்த்தியே தீர வேண்டும். அப்போது நிதிப்பற்றாக்குறை தீருமென்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற இந்தப் பேரூராட்சிக்கு அருகிலுள்ள ஊராட்சிகளுக்கு இப்போது முடியாது என்று சொன்னேனே தவிர, முடியவே முடியாது என்று சொல்லவில்லை. எதிர் காலத்தில் நிச்சயமாக பரிசீலித்து, முடிவெடுக்கலாம் என்று உறுதி அளிக்கிறேன்.

கொடை ரோடு பேருந்து நிலையம்

693 (*வினா எண். 2773)—திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி கொடை ரோட்டில் பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படாமல் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பணி எப்போது தொடங்கப்படும்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் கட்டிக்கொடுக்க நிதி வசதி பெற்றவுடன் பணி தொடங்கப்படும்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடை ரோடு என்பது மதுரை-திண்டுக்கல்லுக்கு மையமான பகுதியாகும். அந்த இடத்தில் தற்போது பேருந்து நிலையம் இல்லாததால் அந்த பேரூராட்சியின் சார்பாக போடப்பட்ட தீர்மானம் அமைச்சர் அவர்களுக்கும், அரசுத் துறைக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை பரிசீலனை செய்து, கொடை ரோடில் பேருந்து நிலையம் அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, கொடை ரோட்டிற்கு பேருந்து நிலையம் அவசியம் என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. அதனால்தான், பேருந்து நிலையம் அமைப்பதற்காக புறம்போக்கு நிலம் 3 ஏக்கர் அன்ன



சமுத்திரம் கண்மாய்ப் பகுதியிலே இருக்கிறது. அது பொதுப் பணித் துறைக்கு சொந்தமான நிலமாக இருக்கிறது. அதை மாற்றித்தர வேண்டுமென்று கேட்கப் பட்டிருக்கிறது. ஆனால், போகக் கூடிய வழித்தடங்கள் தனியாருக்குச் சொந்தமான நிலங்களாக இருக்கின்றன. அவைகளை கையகப்படுத்தக் கூடிய வேலை நடந்து கொண்டிருக்கிறது. அது முடிந்த பிறகு, ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து பணம் கொடுத்து, அந்த பேரூராட்சி அதைக் கட்டலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒருங்கிணைந்த வளர்ச்சி நிதியிலிருந்து கட்டுவதாகச் சொன்னார்கள். மேலும் அங்கே பேருந்து நிலையம் கட்டுவது சம்பந்தமாக தனியாருக்கு இருக்கும் நிலம் சம்பந்தமாக நீதிமன்றம் ஒரு தீர்ப்பளித்துள்ளது. ஆகவே, இந்த கொடை ரோட்டிலிருந்து கொடைக்கானலுக்குப் போக கூடியவர்கள் வெளி மாநிலத்தவர்கள் அங்கே வந்து இறங்கி, இப்போது இருக்கின்ற பேருந்து நிலையத்திற்குச் சென்று பஸ் ஏறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்த கொடை ரோட்டில் பேருந்து நிலையத்திற்கு அரசு உடனடியாக நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த பேருந்து நிலையத்தை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சங்கடங்களை அரசு உணர்ந்திருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்ட உடன், ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டிக் கொடுப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னசமுத்திரத்திலே 3 ஏக்கர் நிலம் எடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அங்கே பஸ்கள் உள்ளேயும், வெளியேயும் செல்வதற்குக்கூட வழியில்லாமல் கடந்த பல ஆண்டுகளாக அந்த நிலையிலேயே இருக்கிறது. அதோடு தனியார் நிலங்களை கையகப்படுத்த இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது தனியாருக்கு சொந்தமான இடமென்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தனியாருக்கு சொந்தமான இடமானாலும்கூட, அந்தஇடம் அரசாங்கத்திற்குச் சொந்தமான இடம்; அரசாங்கத்தாலே பட்டா போட்டு கொடுக்கப்பட்டது. ஆகவே, அதற்கு உடனடியாக ஒரு சட்டத்தைப் போட்டு, அவர்களை அப்புறப்படுத்திவிட்டு, இப்போது வேலை ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை நிலத்தை பட்டா செய்து கொடுத்திருந்தால், 10 ஆண்டுகளுக்குள் அரசு அதை திருப்பி

எடுத்துக் கொள்ளலாம். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும். தவறாக பட்டா கொடுக்கப்பட்டிருந்தால், அதை ரத்து செய்ய மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் இருக்கிறது. எனவே, இதை அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை நகராட்சியில் திரையரங்கம் கட்டும் திட்டம்.

*694—(*வினா எண். 3887)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகராட்சியில் திரையரங்கம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப் பெற்று, திட்டம் செயலற்று இருப்பது அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, ஆம்.

(முற்பகல் 9-30)

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக் கோட்டை நகராட்சியில் திரையரங்கம் கட்டுவதற்கு 1974 ஆம் ஆண்டு அரசிடம் அனுமதி பெறாமல் குறைந்த பட்சம் அந்த நகராட்சியில் தீர்மானம் கூட அதற்காகப் போடப்படாமல்—முன்னாள் அமைச்சர்களாக இருந்த திரு மன்னை நாராயணசாமியும் திரு. அன்பில் தர்மலிங்கமும் அடிக்கல் நாட்டினார்கள். இப்போது பணியே நடைபெறவில்லை. அதோடு பல அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுவதற்கும் அடிக்கல் நாட்டப் பட்டது. நகராட்சியில் திரையரங்கு கட்டுவதற்காகத் தீர்மானம் கூடப் போடப்படவில்லை என்று நகராட்சியினர் சொல்கிறார்கள். அந்த பல அடுக்கு மாடிக் கட்டடத்தைக் கட்டுவற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது? அது கட்டப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 1974 ஆம் ஆண்டு அவசரம் அவசரமாக ஏன் கல்நாட்டு விழா நடத்தினார்கள் என்ற விவரம் என்னிடத்திலே இல்லை. அந்த நகராட்சியில் தீர்மானம்கூடப் போடாமல் ஏன் அடிக்கல் நாட்டினார்கள், அதற்குக் காரணம் என்ன என்பதை அவர்கள் தான் சொல்ல வேண்டும். இந்த அரசுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. பல மாடிக் கட்டடம் கட்டும் திட்டத்தைத் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. திட்டம் வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திரையரங்கம் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் திரையரங்கம் கட்டப்படவில்லை. நகராட்சியினால் நடத்தப்படும் திரையரங்கங்கள் எல்லாம் பெரும்பாலும் நட்டத்தில் தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன. பட்டுக்



கோட்டை நகராட்சியில் இப்போதே 7 திரையரங்கங்கள் இருக்கின்றன. இவைகளைத் தவிர இன்னும் 5, 6 திரையங்கங்கள் கட்டுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. இப்படி திரையரங்குகளை கட்டுவதைவிட, பட்டுக்கோட்டை பெருகி வருகிற நகராக இருப்பதால் திருமணக்கூடம் ஒன்று அங்கே கட்டப்பட வேண்டுமென்று நாங்கள் ப்ரப்போசல் அனுப்பியிருக்கிறோம். அதைக் கட்டிக் கொடுப்பதற்கு அரசு அனுமதி அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களிலே திரையரங்குகள் கட்டுவது கூட இலாபகரமாக இருக்காது என்பதால் அதை நிறுத்தி விட்டோம், ரத்து செய்து விட்டோம் என்று நான் 2, 3 நாட்களுக்கு முன்னாலே பதில் சொல்லியிருக்கிறேன். திரையரங்குகளை நகராட்சிகள் லாபகரமாக நடத்த இயலாது என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று அங்கே திருமணக் கூடம் கட்ட ப்ரப்போசல் அனுப்பியிருப்பார்களானால் நிச்சயமாக அதைப் பரிசிலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி அமைப்பு பற்றி ஆய்வு

695—(*வினா எண். 653)—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கல்வி அமைப்பில் புதுமைகளைப் புகுத்தவும், சீர்திருத்தங்களைக் கொண்டு வரவும் தமிழ்நாடு திட்டக்குழு ஒரு விசேஷ ஆய்வுக் குழுவை ஏற்படுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்

(ஆ) மாநில திட்டக்குழு முழுநேர உறுப்பினர் டாக்டர் கே. வெங்கடசுப்பிரமணியன் தலைமையில் 20 உறுப்பினர்களைக் கொண்ட விசேஷ ஆய்வுக் குழு ஒன்றை மாநிலத் திட்டக் குழு அமைத்துள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு திட்டக் குழுவின் விசேஷ ஆய்வுக்குழு என்ன என்ன பரிந்துரைகளை அரசுக்குக் கொடுத்துள்ளது. அவைகளில் எதை எதை அரசு நடைமுறைக்குக் கொண்டுவர இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் ஒரு கூட்டத்தை 7-3—85 அன்று கூட்டி ஆரம்ப நிலையில் விவாதம் நடத்தியிருக்கிறார்கள். இன்னும் சில கூட்டங்களை நடத்தியதற்குப் பிறகு அவர்களுடைய கருத்துக்களை அரசுக்குத் தெரிவிப்பார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழ்நாடு திட்டக் குழுவின் விசேஷ ஆய்வுக் குழு ஒரு சில கூட்டங்களை நடத்தி, கல்வியில் எப்படி எப்படி சீர்திருத்தம் செய்யவேண்டுமென்பதை ஆய்வு செய்து வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி அவர்கள் ஆய்வு செய்யும்போது மற்ற மாநிலங்களிலே கல்வியின் தரம் எப்படி யிருக்கிறது. அதிலிருந்து ஏதேனும் தமிழ்நாடு பின்பற்றலாமா என்பதையும் ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அந்த திட்டக் குழு திட்டத் துறையின் கீழ் வருகிற ஒன்றாகும். இருந்தாலும் அவர்கள் கல்வித் துறையினுடைய கருத்துக்களைத் தெரிந்து இந்தியாவிலே இருக்கிற, பல்வேறு மாநிலங்களிலே இருக்கிற, பல்வேறு கல்வி சீர்திருத்தங்களைக் குறித்துத் தெரிந்து மத்திய அரசாங்கத்தின் கருத்துக்களையும் தெரிந்த பிறகு, அதற்கு ஏற்ப தங்களுடைய விவாதங்களை நடத்தி, யோசனைகளைச் சொல்வார்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் துணைக் கண்டத்திலே தொழில் அறிவினை வளர்க்க வேண்டுமென்ற முறையிலே நல்ல நோக்கத்தோடு தமிழகத்திலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழில் கல்வி முறையைப் புகுத்தியிருக்கிறார்கள். அந்தப் புதிய திட்டத்திற்கு மத்திய அரசு கூடுதலாக நிதி ஏதாவது ஒதுக்கியிருக்கிறதா? அப்படி கூடுதலாக நிதியொதுக்கவில்லையென்றால் மைய அரசு இந்த சிறப்பு கல்வித் திட்டத்திற்கு சிறப்பு நிதியை ஒதுக்கவேண்டுமென்று கேட்டு மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு முதலமைச்சரின் வாழ்க்கைக் கல்விக்கான திட்டத்திற்கு மத்திய அரசிடமிருந்து [illegible] நாம் [illegible] இறோம்.



1985 ஜூலை 17]

தருமபுரியில் நீச்சல்குளம்.

696—(*வினா எண் 2237)—திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் தருமபுரியில் நீச்சல்குளம் கட்டும் பணி காலதாமதமாக நடைபெறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டில் இத்திட்டத்தை முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை வைக்கப் பெறுகிறது.

தருமபுரியில் நீச்சல்குளம் கட்ட மைய அரசும், மாநில அரசும் ரூ.7.50 இலட்சம் மானியம் 1982—83—ல் அளித்துள்ளது. (ரூ.50+7.00) இந் நீச்சல்குளம்கட்டுவதில் ஏற்பட்டகாலதாமதம் இந் நீச்சல்குளம் கட்டுவதற்காக முதலில் தேர்ந்தெடுக்கப் பட்ட இரண்டு இடங்களான பாலப்பகுட்டை மற்றும் வெள்ள கவுண்டன்பாளையம் ஆகிய இரு இடங்களும் நீச்சல்குளம் கட்டு வதற்கு தகுந்த இடங்கள் அல்ல என்று தீர்மானிக்கப்பட்டன. [illegible] இலக்கியம்பட்டியில் நீச்சல்குளம் கட்டுவதற்கு இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த நீச்சல்குளம் கட்டும்பணி தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இந்த கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயி லுள்ளது. இந்த கட்டுமான பணிகள் தொடர்பாக தருமபுரி மாவட்ட விளையாட்டு வளர்ச்சிக் கழகத்திற்கு ஏற்கனவே அளித்த ரூ. 7.50 இலட்சம் தவிர கூடுதலாக ரூ. 3.80 இலட்சம் அளிக்கவேண்டியுள்ளது. இது தொடர்பான கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையில் வைக்கப்பட்டு இருப்பது, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தில் உள்ள மாவட்டங்களில் குறிப்பாக இன்றைக்கு, தருமபுரி மாவட்டத்தில் விளையாட்டுத் துறைக்கு ஒரு ஸ்டேடியம் கட்டப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் நீச்சல்குளம் கட்டப்பட்டு வருகிறது. இந்த நீச்சல் குளம் எவ்வளவு சீக்கிரத்தில் முடிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்தக் கட்டுமானப் பணிகள் முடிவு அடையும் தருவாயில் உள்ளது என்ற விவரத்தை எடுத்துத் தந்திருக்கிறார்கள். கூடுதலாக 3.8 இலட்சம் தரவேண்டியிருக்கிறது என்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். இது தொடர்பான கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இந்த நீச்சல் குளத்திற்கு சுற்றுப்புறச் சுவர் உயரமாகக் கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த நீச்சல் குளம் நல்லபடியாக இயங்குவதற்குத் தேவையான அளவில், அந்தப் பொறுப்பில் இருக்கின்றவர்கள், அரசைக் கேட்பார்களானால், அதற்கும் அரசு ஆதரவு தரும்.

திரு. க. இரா. சின்னராசு: பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரத்தில் கட்டப்படுகின்ற நீச்சல்குளம் போன்று, தருமபுரி நகரத்தைப் போன்று இருக்கின்ற கிருஷ்ணகிரி நகரமும் இருப்பதால், கிருஷ்ணகிரியிலும் நீச்சல் குளம் கட்டுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் நீச்சல்குளம் கட்டும் திட்டத்தின் கீழ் இப்போது தருமபுரியில் கட்டப்பட்டு வருகிறது. முதலிலே இது முடிந்ததற்குப் பிறகுதான் மற்ற கிருஷ்ணகிரி போன்ற நகரங்களைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணை வினாப் பட்டியலில் உள்ள வினாக்கள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

### திருவாரூரில் இரயில்வே மேம்பாலங்கள்.

708 ஆ—(*வினா எண் 1437)—திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரில் கட்டப்பட்டு வரும் இரயில்வே மேம்பால வேலை எப்போது முடியும்?

(ஆ) அதன் மொத்த செலவு எவ்வளவு?

(இ) இதற்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர் அருகே இரண்டு இரயில்வே மேம்பாலங்கள் முறையே (1) நாகபட்டிணம்-கூடலூர்—மைசூர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 22/6-லும், (2) மயிலாடுதுறை-முத்துப்பேட்டை சாலையில் (மாவட்டப் பெருஞ்சாலை) கி. மீ. 41/8-லும் கட்டப்பட்டு வருகின்றன. இவ்விரண்டு பணிகளும் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விரு பணிகளுக்கும் ஆகும் செலவு முறையே ரூபாய் 55 இலட்சம், 44 இலட்சம் ஆகும்.





(இ) இவ்விரு இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகளுக்கு (நிலம் கையகப்படுத்துவதைத் தவிர்த்து) மதிப்பிட்டுத் தொகையில் 50 சதவீதம் விழுக்காடு மத்திய அரசின் மானியம் உண்டு.

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரயில்வே மேம்பாலம் 1975-லேயிருந்து கட்டப்பட்டு வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அங்கே நடக்கின்ற வேலைக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதற்கும் ஒப்பிட்டுப் பார்த்தால், நிச்சயமாக இது நடக்காது. முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு மாதத்தில் முடிப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அது முடிக்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலையில் இதை விரைவாகக் கட்டி முடிப்பதற்கு உரிய நடவடிக்கையை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கான பதிலை நாங்கள் கேட்கிறபோது, அங்கே இருக்கிற அதிகாரிகள் இந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்கிற உத்தரவாதத்தினை தந்திருக்கிறார்கள். இதை அரசு உத்தரவாதமாக எடுத்துக்கொண்டு ஒரு ஆண்டு காலத்திற்குள்ளே இதை முடித்துத் தரவேண்டும் என்று அங்கே இருக்கின்ற அதிகாரிகளை வலியுறுத்துவதற்கு தயாராக இருக்கிறது. இது மிகப் பெரிய பணி என்பதை நாம் கவனித்தாக வேண்டும். எனவே எவ்வளவு விரைவாக முடிக்க வேண்டும் என்று உறுப்பினர் அவர்கள் அக்கறை காட்டுகிறார்களோ, அந்த அளவிற்கு அரசாங்கமும் அக்கறை காட்டி விரைவாக முடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விரைவான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னார்கள். இப்போது திருவாரூர் நகரத்தில் இருக்கக்கூடிய அந்த ரோடுகள் மிகவும் பாழடைந்த நிலையில் இருக்கின்றன. இதனால் போக்குவரத்து மிகவும் சீர்கேடு அமைந்து இருக்கிறது. எனவே தயவு செய்து, அமைச்சர் அவர்கள் இதை உடனடியாகப் பார்த்து, விரைவில் முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது அங்கே கட்டப்படுகின்ற பாலத்தைப் பற்றிய கேள்வி. எனவே இதைப் பற்றி தனியாக எழுதிக் கொடுத்தால், அங்கே என்ன நிலையிருக்கிறது என்பதைப் பார்த்து, அந்த விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### நம்பியூரில் ஜீவா போக்குவரத்துக் கிளை நிலையம்

708 இ—(*வினா எண். 3889)—திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜூலை 17

(அ) பெரியார் மாவட்டம், பவானிசாகர் தொகுதி நம்பியூரில் ஜீவா போக்குவரத்துக் கிளை நிலையக் கட்டிட வேலை கடந்த 4 மாத காலமாக நிறுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது வேலை துவங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தற்பொழுது வேலை துவங்கப்பட்டுள்ளது.

திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்சமயத்தில் வேலை துவங்கப்படுவதாக அறிவித்து இருக்கிறார்கள். இதனுடைய மதிப்பீடு எவ்வளவு? அங்கேயிருந்து எந்தெந்தப் பகுதிகளுக்கு பஸ் விடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, அங்கே 4½ லட்சம் செலவில் அதைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வேலைகள் நடந்து கொண்டு இருக்கின்றன. அங்கேயிருந்து ஏற்கனவே 12 பேருந்துகள் ஓடிக்கொண்டு இருக்கின்றன. அந்த 12 பேருந்துகளுக்காகத்தான் அந்த டெப்போ கட்டப்படுகிறது. அந்த 12 பேருந்துகளும் அங்கே வைத்து பராமரிக்கப்படும்.

நெல்லிக்குப்பம்—கடலூர் மாணவர் பேருந்து.

708—(*வினா எண் 3911)—திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லிக்குப்பம் நகரத்திலிருந்து கடலூர் செல்லுகின்ற கல்லூரி, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு சிறப்பு பேருந்து (Students Special) விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, நெல்லிகுப்பத்திலிருந்து கடலூர் வரையிலான தடத்தில் போக்குவரத்து வசதிகள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்கு போதுமான அளவில் உள்ளதால் சிறப்பு பேருந்துகளை இயக்கவேண்டிய அவசியம் இல்லை.

(முற்பகல் 9-40)

திரு. துரை அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பம் நகரம் வளர்ந்து வருகின்ற ஒரு நகரம். ஏறத்தாழ 60 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட அந்தப் பகுதியில் இருந்து கடலூர் சென்றுதான் தந்தை பெரியார் கலைக் கல்லூரிக்கும் கந்தசாமி நாயுடு பெண்கள் கல்லூரிக்கும் பிளஸ் 2 படிக்க மாணவ மாணவியர்கள் செல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது. இதனால் காலை நேரங்களிலும் மாலை நேரங்களிலும் நெரிசல் இருக்கின்ற



1985 ஜூலை 17]

காரணத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காலையில் ஒரு முறையும், மாலையில் ஒரு முறையும் அந்த மாணவர்கள் நலன் கருதி மாணவர்களுக்கு சிறப்புப் பேருந்து விட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஏறத்தாழ 400 புறநகர் பேருந்துகள் 400 தடவையும், நகர பேருந்துகள் 198 முறையும் சென்று வருகின்றன. பள்ளி நேரத்தில் காலை 8 மணி முதல் 10 மணி வரை 17 முறை புறநகர் பேருந்தும், 10 முறை நகர பேருந்தும் சென்று வருகின்றன. அதேபோல் மாலையில் 4 மணியிலிருந்து 6 மணிக்குள் 22 முறை புறநகர் பேருந்தும், 12 முறை நகர பேருந்தும் சென்று கொண்டிருக்கிறது. இவ்வளவு வசதியும் இருக்கிறபோது தனியாக பேருந்து விடவேண்டும் என்று சொன்னால் அது திரும்பி வருகிறபோது காலியாகத்தான் வர வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் இப்போது இருக்கின்ற பேருந்துகளையே அவர்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

மேற்கு சைதை தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவுச் சங்கம்.

697—(*வினா எண். 3742)—திரு. சா. துரைசாமி: மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு சைதை தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவு (சங்க எண். XNC 719) சங்கத்திற்கு சொந்தமான மூன்று ஏக்கர் நிலத்தை கடந்த 12 வருட காலமாக உறுப்பினர்களுக்கு வழங்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன?

(ஆ) இச்சங்கம் செயல்படாமல் உள்ளதால், நிலம் வழங்கப்படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா;

(இ) விரைவில் மேற்படி நிலத்தை சங்க உறுப்பினர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவர் அவர்களே,

(அ) மேற்கு சைதை தாழ்த்தப்பட்டோர் கூட்டுறவு வீட்டு மனை சங்கம் டி.எஸ்.எண், 23, பிளாக்கு.எண். 12 சைதை தாலுக்காவில் உள்ள 16 மனைகளை 23-11-79 அன்று நில உரிமையாளரிடம் செய்து கொண்ட ஒப்பந்தப்படி வாங்கும் பொழுது, தமிழ்நாடு நகர நில உச்சவரம்பு சட்டம் நடைமுறைக்கு வந்ததாலும், பதிவுத்துறையினரால் வருமான வரி விதி விலக்குச் சான்றிதழ் கோரப்பட்டதாலும் ஒப்பந்தப்படி மனையினை வாங்க இயலாதநிலை ஏற்பட்டு விட்டது. மேற்படி இடத்தினை நகர்ப்புற நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதி விலக்கு பெற முடியாததால் மனையினை பிரித்து வழங்காமல் நிலுவையில் உள்ளது.

(ஆ) ஆம்.

(இ) அரசின் வருவாய்த்துறை இதுகுறித்து மீண்டும் பரிசீலனை செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களுக்கு என்று அந்த சங்கத்தை அமைத்து விட்டு மனை இல்லாத ஆதி திராவிடர்களுக்கு வழங்க வேண்டும் என்ற அந்த முறையை விரைவாக நடைமுறைப் படுத்தி அந்த சங்கம் முறையாக செயல்படுத்தப்படாமல் அந்த சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பவர்கள் பெரும்பாலானவர் கள் ஆதி திராவிடர்கள் இல்லை என்ற ஒரு கருத்து நிலவுகிறது. எனவே, அந்த விவரம் அறிந்து விசாரித்து உரிய முறையில் ஆதி திராவிடர்களுக்கு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த சங்கம் துவங்கப்பட்டபோது ஆதி திராவிடர்களுக்காக துவங்கப்பட்டச் சங்கம் என்று குறிப்பில் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகிற கருத்தின் அடிப்படையில் ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள் அந்த சங்கத்தில் இருந்தால் நிச்சயமாக அது குறித்து விசாரித்து அரசு நல்ல முடிவு எடுக்கும். விரைவில் இந்த சங்கத்திற்கு தேவையான நிலங்களை அரசு கையகப்படுத்த முயற்சிகள் எடுத்துக்கொண்டு இருக்கிறது. ஏற்கனவே அரசைப் பொறுத்த வரையில் வீட்டு வசதித்துறையைச் சேர்ந்த ஹவுசிங் டி.ஆர். அவர்கள் வருவாய்த் துறையை அணுகி விரைவாக அந்த நிலத்தை வீட்டு வசதித் துறைக்கு ஒதுக்கும்படியான ஒரு முயற்சியை எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அடுத்து இன்னொரு கருத்தும் அரசிடம் இருக்கிறது. அரசு அதை கையகப்படுத்திய பிறகு பரிசீலனைச் செய்கின்ற கருத்தும் இருக்கிறது. இதை எல்லாம் எவ்வளவு விரைவாக செய்ய முடியுமோ அவ்வளவு விரைவாக செய்ய அரசு உதவுகின்ற தன்மையில் நல்ல முடிவை எடுக்கும்.

திரு. சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, அந்த தாழ்த்தப்பட்டோர் நலச் சங்கத்தில் புதிதாக தாழ்த்தப்பட்ட உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? ஏன் என்றால் ஏற்கனவே, அதில் தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லாத காரணத் தால் அந்த விவரம் அறிந்த பிறகு அதில் உரிய வீட்டு மனை இல்லாத தாழ்த்தப்பட்டவர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வதற்கும், அவர்களுக்கு அந்த மனை கிடைப்பதற்கும் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொத்தம் இந்த நிலம் எவ்வளவு என்று பார்த்ததற்குப் பிறகு ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் ஆதி திராவிடர்கள் அல்லாதவர்கள் உறுப்பினர்களாக இருந்தால் அதைப் பற்றி பார்த்து அவர்களை எடுத்துவிட்டு மீதியை மற்றவர்களுக்கு இருக்கும் மனையின் அளவை அனுசரித்த புதிய உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதை தெரிவித்துக்கொள் கிறேன்.



மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலகங்கள்.

698—(* வினா எண். 1778)—திரு. கோ. இரகுபதி: மாண்பு மிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்களை வருவாய்த்துறை நிர்வாகத்திலிருந்து பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர்களை வருவாய்த் துறை நிர்வாகத்திலிருந்து பிரிக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் ஆதிதிராவிட மக்களுக்கு தனி ஒரு துறையை அமைத்து, அங்கு ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப்பட்டா போன்றவைகள் எல்லாம் துரிதப் படுத்திக் கொடுப்பதற்கு ஏறக்குறைய இரண்டு ஆண்டுகளாக அரசின் குறிப்பில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, 1985-86-லே இந்தத் துறை தனித்து செயல்பட முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எ அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, ஆதிதிராவிடர்கள் நலத்தைக் கருத்தில் காண்டு, 18 மாவட்டங்களில், வருவாய்த் துறையைச் சேர்ந்த துணை ஆட்சியர் மூலம் மாவட்ட ஆதிதிராவிடர் அலுவலர்கள் அந்த் துறையிலே சிறப்பாகப் பணிபுரிந்து வருகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

திரு. கோ. இரகுபதி: பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே ஆதிதிராவிடர் துறையிலே இருக்கிற அதிகாரிகள்— வருவாய்த் துறையிலிருந்து ரிட்டயர் ஆகின்ற சூழ்நிலையில் இருக்கிற அதிகாரிகள் தான் மாவட்ட நல அதிகாரிகளாக நியமிக்கப்படுவதாக அங்கே இருக்கிற நிலைமைகளிலிருந்து தெரிய வருறது. ஆகவே, ஆதிதிராவிடர்களுடைய நலத்தைக் கருதி, வேகப்படுத்துகின்ற நிலையில், இளைஞர்களாக, வேக முடைய அதிகாரிகளாக, டிஸ்டிரிக்ட் வெல்ஃபேர் ஆபீசர்களை நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கூட 4 மாவட்டங்களில், ரெக்ரூட்மென்ட்டிலிருந்து, ப்ரமோஷனிலே இருக்கிறவர்களைப் போடுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடம் சொல்லி ஏற்பாடு செய்து, இப்போது கூட திருச்சி மாவட்டத்திலே ஒரு இளைஞரை, சிவசூரியன் என்பவரை ஆதிதிராவிட அதிகாரியாகப் போட்டு செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

[1985 ஜூலை 17

### தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் வழக்குகள்

699—(*வினா எண். 2181)—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983-84 ஆம் ஆண்டில் தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகள் எத்தனை?

(ஆ) அவற்றில் தண்டனை வழங்கப்பட்டவை, தள்ளுபடி செய்யப்பட்டவை முறையே எத்தனை?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே,

| | | 1983 | 1984 |
|---|---|---|---|
| (அ) | பதிவு செய்யப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | 1205 | 1402 |
| (ஆ) | அவற்றில் தண்டனை வழங்கப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. | 37 | 25 |
| | விடுதலை செய்யப்பட்ட வழக்கு களின் எண்ணிக்கை. | 674 | 512 |

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 1983—84 ஆம் ஆண்டுக்கான தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகளில் விடுதலை செய்யப்பட்ட வழக்குகள், 1983 ஆம் ஆண்டு 674 என்றும், 1984—ல் 512 என்றும், தண்டனை பெற்ற வழக்குகள் முறையே 37, 25 என்றும் சொல்லி இருக்கிறார்கள். பதிவான வழக்குகள் 1205, 1402 என்று ஆக, 2600 வழக்குகள் பதிவானதில், இரண்டு ஆண்டுகளில் ஆயிரம் வழக்குகள் தான் விசாரிக்கப்பட்டு விடுதலை, தண்டனை என்ற, வகையில் தெரிகின்றது. பாக்கி வழக்குகள் பற்றி ஏன் இந்த நிலை, என்ன காரணம்? ஏழை மக்கள் அச்சுறுத்தப்படுகிறார்களா? தாழ்த்தப் பட்டவர்கள் பயம் காட்டி வழக்குகளைத் திரும்பப் பெற நிர்ப்பந்திக்கப்படுகிறார்களா? அதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது? இல்லையெனில் மேலும் விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்;

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், அச்சுறுத்தப்படவில்லை. அங்கே காவல்நிலையத்தில் இரண்டு பேர்களையும் சேர்த்து பேசி, காம்ப்ரமைஸ் செய்து சமாதான முறையில் வழக்குகள் தீர்த்துக் கொள்ளப்படுகின்றன. இன்னும் துரிதமாக்க இந்தத் துறை மூலம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்,



1985 ஜூலை 17]

### தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கான உதவித் தொகை

700—(*வினா எண் 2859)—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 90 விழுக்காடு படிப்பு நாட்கள் இல்லாத தாழ்த்தப் பட்ட மாணவர்களுக்கு உதவித்தொகை நிறுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே

(அ) ஆம்.

(ஆ) முந்தைய கல்வி ஆண்டின் பள்ளி/கல்லூரி வேலை நாட்களில் 90 விழுக்காடு வருகைப் பதிவு தராத மாணவ/மாணவியருக்கு, உதவித் தொகை வழங்கப்படுவதில்லை. இருப்பினும், அரசு மாணவ, மாணவியருக்கோ அல்லது அவரின் இல்லத்தில் உள்ளவருக்கோ ஏற்படக்கூடிய ஆபத்துக்கள், எதிர் பாராத நோய் மற்றும் துயர நிகழ்ச்சிகள் ஏற்படும் பட்சத்தில், 90 விழுக்காடு வருகை நாட்கள் வருதல் வேண்டும் என்ற விதியினை, 5 விழுக்காடு வரை தளர்த்த, கல்வி நிலையத் தலைவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(முற்பகல் 9-50)

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, இந்த உத்தரவை கடந்த ஏப்ரல் மாதக் கடைசியில் தான் அனுப்பியிருக்கிறார்கள். அந்த மாணவர்கள் லீவில் சென்று விட்டார்கள். இப்போது அந்த நிர்வாகிகள், மாணவர்கள் எல்லாம் சேர்ந்து இருக்கிறார்கள். அவர்கள் 2-ஆவது, 3-ஆவது ஆண்டு கல்லூரியில் படிக்கிறார்கள், மனிதாபிமானத்துடன் கல்லூரியில் சேர்ந்திருக் கிறார்கள்.. அவர்களுக்கெல்லாம் ரினிவல் கிடைக்காது என்று தெரிகிறது. கல்லூரி நிர்வாகத்தினர் அவர்களை வெளியே அனுப்பிவிடுவார்கள். இரக்க சிந்தனையோடு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதில் தலையிட்டு, இந்த ஆண்டு அவர்கள் பாதிக்காத அளவுக்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு அவர்கள் கல்லூரியில், அப்படி பிரச்சினை ஏற்பட்டாலும், இந்த ஆண்டு கூட அந்த 5 விழுக்காடு—90 என்பது 85 ஆக ஆக்கப்பட்டு—இரக்க உணர்வோடு தான் செய்யப்பட்டிருக்கிறது. இதை ஹைகோர்ட்டில் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்களின் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக வரவேற்கக் கூடிய ஒன்று என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட மாணவர்களுக்கு பாதிப்பு நேர்ந்தால் அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

1985 ஜூலை 17

## புதிய மீன்பிடி துறைமுகம்.

*701—(*வினா எண் 2932ஏ) — திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*தரங்கம்பாடி அல்லது பூம்புகாரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?*

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, இல்லை.

திரு. என். விஜயபாலன் : தலைவர் அவர்களே, தரங்கம்பாடி பூம்புகாரைச் சுற்றியுள்ள கடற்கரை ஓரத்தில் 20,000-க்கும் மேற்பட்ட மீனவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்கின்ற வகையில், மீன்பிடி துறைமுகம் ஒன்றை அமைக்க ஏற்பாடு செய்வதற்கு புரட்சித் தலைவர் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். ஆர்.கோவேந்தன் : தலைவர் அவர்களே, தரங்கம்பாடியில் மீன்பிடி படகுகள் தங்குவதற்கான தோணித் துறையை ஏற்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, அதற்காக சுமார் ரூ. 400 இலட்சத்திற்கு மேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. அப்போது அங்குள்ள மீன்பிடி படகுகளின் எண்ணிக்கையைக்கொண்டு, அங்கு பிடிக்கப்பட்ட மீன்களின் அளவு, அந்தப் பகுதியில் உள்ள மீனளம் ஆகியவற்றை ஒப்பு நோக்குமிடத்து, மேற்படி தோணித் துறையைக் கட்டுவது தேவையில்லை என்றும், அதற்குப் பதிலாக உள்வசதிகளை மீன் விற்பனைக் கூடம், குளிர் பதனம் மற்றும் பனிக்கட்டி நிலையம், குடிநீர் வசதி போன்றவற்றைச் செய்து தரலாம் என்றும் பெங்களூரில் உள்ள மத்திய அரசின் மீன்துறை கரையோர பொறியியல் இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இந்திய அபிவிருத்தி மற்றும் மக்கள் நல இயக்ககம் நடவடிக்கை எடுக்கும். இக்கிராமத்தில், மக்கள் நல்வாழ்வுக்கான திட்டங்கள் என்ற வகையில் விற்பனைக் கூடம், குளிர் பதன நிலையம், பனிக்கட்டி நிலையம் ஆகியவற்றை 'டானிடா' உதவியுடன் அமைக்க நடவடிக்கை எடுத்துவருகிறது. ஆகவே மீனளத்துறை, தரங்கம்பாடியில் மீனவர்களுக்குத் தேவையான சமுதாய நலக் கூடம், மின் வசதிகள், தண்ணீர் வசதிகள் போன்றவற்றை செய்து தர, ரூ. 4.50 இலட்சத்திற்கான திட்டம் ஒன்றை தயாரித்து அனுப்பியுள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் சோழர் காலத்தில் உலகத்தின் பல்வேறு நாடுகளோடு வாத்தகத் தொடர்புகொண்டு, வர்த்தகத் துறைமுகமாக இருந்தது என்று வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. அந்த வரலாற்றுச் சான்றுகளை நிரூபிக்கின்ற வகையில் மீன்பிடி துறைமுகம் அமைக்கும் வகையில், புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சியில் புதிய படகுத் துறையை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா?



1985 ஜூலை 17]

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, பூம்புகாரில் கடற்பகுதி கொந்தளித்துள்ளதாகவும், மீன்பிடி விசைப் படகுகள் குறைந்த எண்ணிக்கையில் உள்ளதாலும், தோணித் துறை கட்டும் சாத்தியக் கூறுகள் இல்லை. இருந்தாலும் மீனவர்களின் வசதிக்காகவும், மேம்பாட்டிற்காகவும், கட்டிடம், மின்வசதி, குடிநீர் வசதி, சாலைகள், படகுகளை பழுதுபார்க்கும் கூடம் ஆகியவைகளை செய்து தர ரூ. 5 இலட்சத்திற்கான திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. மத்திய அரசின் நிர்வாக ஒப்புதல் பெற்று, ஆணை பிறப்பிக்கப்படும்.

## திருவல்லிப்புத்தூர் திருவண்ணாமலையில் பனை மூலப்பொருள் தொழிற்சாலை.

*702—(*வினா எண் 859)—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருவில்லிப்புத்தூரில் திருவண்ணாமலை (என்னும்) வெல்லம் மற்றும் கம்பு உற்பத்தியாளர் கூட்டுறவு சம்மேளனத்திற்குச் சொந்தமான 120 ஏக்கர் நிலத்தில் பனையில் கிடைக்கும் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் யாது?*

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் தொகுதியில், திருவில்லிப்புத்தூர் ஒன்றியம் ஒரு வறட்சியான பகுதி. தொழில் வளர்ச்சியில் மேலும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. மூலப்பொருளாக பனைப் பொருட்கள் அதிகமாக இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், அங்கேயுள்ள பதனீர் மிகவும் ருசியாகவும், தித்திப்பாகவும் இருக்கும். அதுபோலவே, நுங்கும் நன்றாக இருக்கும். ருசியாகவும் இருக்கும். அதுமட்டுமல்ல, வெளிநாட்டுப்பயணிகள் கூட அடிக்கடி இந்த பதனீரை சாப்பிட வருகிறார்கள். இதற்கு வேண்டிய மூலப்பொருட்கள் அங்கே அதிகமாக இருப்பதால் பெரிய அளவிற்குத் தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா? இதற்கு முன்னால் இருந்த அமைச்சரவர்கள் அங்கே தொழிற்சாலை அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தாரே, தாங்கள் ஏன் இப்படிக் கூறுகிறீர்கள் என்று தெரியவில்லை. எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நல்ல பதிலை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 17

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் பகுதியில் உள்ள வாய்ப்புக்களையும் வசதிகளையும் கருத்திற்கொண்டு தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மூலமாக திருவில்லிப் புத்தூர் பகுதியில் உள்ள 640 மரம் ஏறும் தொழிலாளர்களும் அன்னாரின் குடும்பத்தினரும் பயனடையத்தக்க வகையில் ரூ. 29.91 இலட்சம் மதிப்பீட்டில் பனைப்பொருள் உற்பத்தி மையம், அமைப்பதற்கான திட்டம் ஒன்றினை உருவாக்கி அரசிற்கு (ஊரக வளர்ச்சித் துறை) சமர்ப்பித்திருக்கிறது. இத்திட்டத்தில் பனை மரம் ஏறுவதற்கான பயிற்சியினை மரம் ஏறும் தொழிலாளர்களின் இளைய தலைமுறையினருக்கு அளிக்கவும் வகை செய்யப்பட்டிருந்தது. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்துக்கான மத்திய அரசின் விதிமுறைகளின்படி, இத்திட்டத்துக்கு அரசு, 50 சதவிதம் மானியம் தான் வழங்க இயலும். மீதமுள்ள 50 சதவிதம் திட்டச் செலவினத்தைப் பொறுத்தவரை, வியாபார வளர்ச்சிப் பணிகளோடு தொழில் மேம்பாட்டுத் திட்டங்களையும் மாநில இணையம் நிறை வேற்றி வருவதால், மேற்படி திட்டத்தை நிறைவேற்ற தனது சொந்த நிதியிலிருந்தும் முதலீடு செய்ய இணையத்திற்கு இயலாது. வங்கிகளோ (அல்லது) அகில இந்திய கதர் கிராமத் தொழில் ஆணையக் குழுவோ இத்திட்டத்தை நிறைவேற்ற பெருந்தொகையினை மாநிலப் பனை வெல்ல இணையத்துக்கு கடனாக வழங்கவும் முன்வரவில்லை என்று தெரிவிக்கப் பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பனைபொருள் உற்பத்தி மையம் ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். அது சிறிய அளவிற்கு ஆரம்பிக்கப்படுகிறது. அதற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இருந்தாலும் அங்கே பெரிய அளவிலே தொழிற்சாலை வைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே பதில் கூறுகின்ற நேரத்தில் நான் இவ்வினாவிற்குப் பதில் அளித்திருக்கிறேன். இத்திட்டத்திற்கு அரசு 50 சதவிதம் மானியம்தான் கொடுக்க வேண்டும்; மாநில இணையம் 50 சதவிதத்தை இந்தத் திட்டத் திற்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாநில இணையத்திற்கு. 50 சதவிதம் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வேண்டிய நிதி முதலீடு இல்லாமல் இருப்பதால் மாண்புமிகு உறுப்பினரவர்கள் கருத்திற்கு ஏற்ப இந்தத் திட்டத்தை, பனைப்பொருள் உற்பத்தி மையத்தை பொருளாதார ரீதியாக மிகவும் நலிந்த நிலையில் உள்ள மரம் ஏறும் பிற்பட்ட சமூகத்தினரின் நலன்களைக் கருத்திற் கொண்டு, பனைத் தொழில் சீர்குலைந்து அழிந்து விடாமல் பாதுகாக்கவும்,



1985 ஜூலை 17]

சிறிய முதலீட்டுடன் சிறிய அளவிலாவது இந்த பனை ஏறும் பயிற்சித் திட்டம் உள்ளிட்ட "பனைப் பொருள் உற்பத்தி மையத்தைச் சிறிய அளவிற்கு ஆரம்பிக்க ஆலோசித்து வருகிறது. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செருப்புத் தைக்கும் தொழிலாளர்களுக்கு கடைகள்.

703—(*வினா எண் 1568)—திரு. சா. துரைசாமி : மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் கடந்த ஆண்டு செருப்புத் தைக்கும் தொழிலாளிகள் எவ்வளவு பேர் களுக்கு கடைகள் வழங்கப்பட்டன?

(ஆ) ஆண்டு ஒன்றுக்கு எத்தனை பேர்களுக்கு கடைகள் வழங்கப்பட உள்ளது?

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) 1981-82-ம் ஆண்டு, அரசு காலணித் தொழிலாளிகளுக்கு மானியமாக ஒப்பளித்த 500 பெட்டிக் கடைகளும், முழுமையாக வழங்கப்பட்டன.

1982-83-ம் ஆண்டு காலணித் தொழிலாளர்களுக்கு பெட்டிக் கடைகள் ஏதும் வழங்கப்படவில்லை. 1983-84-ம் ஆண்டு அரசு ஒப்பளித்த 500 பெட்டிக் கடைகளில் இதுவரை 347 வழங்கப்பட்டுள்ளன.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, இந்தப் பெட்டிக் கடைகள் என்ன அடிப்படையில் அந்தத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பொழுது வழங்கப் பட்டிருக்கின்ற எண்ணிக்கையின் அளவைப் பார்க்கின்றபொழுது இது மிகக் குறைவாக இருக்கிறது. எனவே, அதை அதிகப்படுத்து கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா? குறிப்பாக சென்னை மாவட்டத்திற்கு இந்தப் பெட்டிக்கடைகளை அதிகமாக ஒதுக்கினால் நலமாகவும் இருக்கும், சரியான வகையிலே பயன் படுத்தவும் முடியும் என்பதைக் கருத்திற்கொண்டு சென்னை மாவட்டத்திற்கு அதிக அளவிற்கு ஒதுக்குவதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இந்தப் பெட்டிக் கடைகள் என்ன தகுதி அடிப்படை

களில் வழங்கப்படுகின்றன என்று இங்கே வினாவாகக் கேட்டிருக் கிறார்கள். இந்தப் பெட்டிக் கடைகள் வழங்குகின்ற நேரத்தில், அந்தப் பெட்டிக் கடைகளை வாங்குகின்றவர்கள் அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். நீண்டகாலமாக அவர்கள் காலணித்தொழிலைச் செய்பவராக இருத்தல் வேண்டும். மேலும், சொந்தக் கடை இல்லாமலும், சாலை ஓரத்தில் காலணி செய்தல், மற்றும் பழுதுபார்ப்பவராக இருத்தல் வேண்டும். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் குடும்பத்தினைச் சேர்ந்த வராக இருக்க வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

மேலும், இந்தப் பெட்டிக் கடைகள் அதிகரித்துக் கொடுக்கப் படவேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக் கிறார்கள். 1984-85-ல் 750 பெட்டிக் கடைகள் வழங்கலாம் என்ற செயற்குறிப்பினை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது அரசின் பரிசீலனை யில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலுள்ள காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு 1984-85 ஆம் ஆண்டில் 50 பெட்டிக் கடைகள் வழங்கப்பட்டிருக் கின்றன. மேலும், அதிகரிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப் பினருடைய கருத்தை ஏற்று, அவ்வாறு சென்னையில் அதிகமாக காலணி தைக்கும் தொழிலாளர்கள் தகுதி அடிப்படையில் இருந்தால், அரசு பரிசீலனை செய்து, அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது வழங்கப்படுகின்ற கடைகளில், அதன் முன் பகுதியில், தமிழக அரசின் கொள்கை விளக்கங்களை, குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின் மது விலக்குக் கொள்கையைப்பற்றியும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றியும், சத்துணவைப் பற்றியும் விளம்பரப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இதுபோன்ற காலணி தைக்கும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பெட்டிக்கடைகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டங்களை செயல்படுத்துகின்ற வகையில்தான் வழங்கப் படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிற கேள்வியில் உள்ளதை அரசு பரிசீலனை செய்யும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.



திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு சட்டப்பேரவை தலை நாயகர் அவர்களே, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக, செருப்புத் தைக்கின்ற தொழிலாளர்களுக்கு வழங்கப் படுகின்ற கடைகள், நெடுஞ்சாலைகள் ஓரமாக இருக்கிற நேரத்தில், அவற்றை அப்புறப்படுத்தி இருக்கிறார்களே, அவர் களுக்குப் பாதுகாப்பான இடம் தருவார்களா? அல்லது மீண்டும் அதே இடம் தருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தக் காலணி தைக்கும் தொழிலாளர்கள் இதுபோன்ற பெட்டிக் கடைகள் வைக்கின்ற நேரத்தில், நகராட்சி, மாநகராட்சி ரோடுகளுக்கு இடைஞ்சலாக இல்லாமலும் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இல்லாமலும் இருக்கிற வகையில், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் அதிகாரிகள், அது போன்ற இடங்களை செலக்ஷன் செய்து, அதுபோன்ற இடங்களில் வைக்கின்ற ஏற்பாடு செய்யப் படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலணிகள் தைக்கும் தொழிலாளர்களுக்காகச் சென்னை மாநகரத்திலேயே ஒரு தொழில் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி விசயலட்சுமி பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கடந்த ஆண்டு செருப்புத் தைக்கும் தொழிலாளிகள் எவ்வளவு பேர்களுக்கு பெட்டிக்கடைகள் வழங்கப்பட்டன' என்பதும், ஆண்டு ஒன்றுக்கு எத்தனை பேர் களுக்கு பெட்டிக் கடைகள் வழங்கப்பட உள்ளன என்பதும் மூலக் கேள்வி, ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு காலணி தொழிலாளர்களுக்கு ஒரு தொழில் கூடம் அமைக்க அரசு முன்வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதை அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ராமகிரி கிராமத்தில் நீர்த்தேக்கம்.

704—(*வினா எண் 1344)—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம் ராமகிரி கிராமம் ச.எண். 49, 59-ல் கட்டப்பட்ட நீர்த்தேக்கம் உடைந்து பல ஆண்டுகளாகியும் சீர் செய்யப்படாமல் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் ; தலைவர் அவர்களே,

(அ) வேடசந்தூர் வட்டம் ராமகிரி கிராமம் ச. எண். 49-59-ல் கட்டப்பட்ட நீர்த்தேக்கம் உடைந்துவிட்டது என்றும் அதை சீர் செய்யவேண்டும் என்றும் 1985-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அரசுக்கு முறையீடு வந்தது.

(ஆ) இதை ஆய்வு செய்து தகுந்த திட்டம் விரைந்து வகுக்க தள அதிகாரிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ராமகிரி நீர்த்தேக்கம் உடைந்திருக்கிறது. இந்த அணை ஏறத்தாழ 400 ஆண்டுகளுக்கு முன்பு இரும்புருக்கி சாம்பன் என்ற அரசனால் கட்டப்பட்டது. அந்த அணையை பழுதுபார்க்க வேண்டுமென்று பல்வேறு இடங்களிலிருந்து கோரிக்கை கொடுக்கப்பட்டாலும், அந்த அணை முழுவதுமாக பாதிக்கப்படவில்லை. ஒரு சிறிய உடைப்பு ஏற்பட்டிருக்கிறது. 400 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட அணையாக இருந்தாலும் நவீன அடிப்படையில் கட்டப்பட்டதுபோல் இருக்கிறது. அதிக அளவில் அது பழுதுபடவில்லை. ஆகவே ஒரு குறிப்பிட்ட காலவரையறையை நிர்ணயித்து, அதற்குள் பணியை முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் என்னிடத்தில் சொன்னபோதும் சரி, எழுத்து மூலமாகத் தந்தபோதும் சரி, அவர்கள் இந்த அணைக்கட்டைப் பற்றி தெளிவான வரலாற்றை, சான்றுகளை தந்திருக்கிறார்கள். அந்த வகையில் இது தமிழக வரலாற்றை பெருமைப்படுத்தக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்தவகையில் ஏற்கெனவே இந்தத் திட்டம் அமைந்திருப்பதால் ஆய்வு நடத்துவதில் காலதாமதம் இருக்காது என்று கருதுகிறேன். இருந்தாலும் அரசு உரிய அறிவுரை வழங்கி, அரசுக்கு விரைந்து அறிக்கை அனுப்ப முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கரண்டை இரட்டைக்குளம்.

705—(*வினா எண் 1495)—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கரண்டை இரட்டைக்குளம் மேடுபட்டுவிட்டதாக அரசுக்குத் தகவல் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?



1985 ஜூலை 17]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப், தலைவர் அவர்களே

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : தலைவரவர்களே, நான் இந்த வினாவை எழுப்பிய பிறகு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்த குளத்திற்குச் சென்று அளந்து பார்த்து, அந்தப் பகுதி மக்களுக்கு குளத்தை ஆழப்படுத்தித் தருகிறோம் என்று உறுதி தந்திருக்கிறார்கள். உடனே அந்தப் பகுதி மக்கள் அந்தக் குளத்தை ஆழப்படுத்தி விட்டதைப் போல நினைத்துக்கொண்டு என்னிடம் வந்து நன்றி தெரிவித்தார்கள். அப்போது நான் சொன்னேன், அவ்வளவு சுலபமாக அதிகாரிகள் செய்ய மாட்டார்கள், அவர்கள் சொன்னதை நம்ப வேண்டாம் என்று. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தக்குளம் மேடுபடுத்தப்படவில்லை என்று கூறினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்திற்கு வரும்போது அந்த குளத்தை நேரடியாகப் பார்வையிட்டு, உரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, ஏற்கெனவே அந்தக் குளத்தைப்பற்றி நான் ஓரளவுக்கு அறிந்திருக்கிறேன். இன்னும் சொல்லப் போனால் வரத்துக் கால்வாயாக இருந்தாலும் சரி, குளத்து வெள்ளத்தால் பயன்பெற்று ஆயக்கட்டுதாரர்கள் சாகுபடி செய்கின்ற உற்பத்தியைப் பார்த்தாலும் சரி எல்லாம் சரியாக இருப்பதாகத்தான் தகவல் வந்திருக்கிறது. குளத்தின் கொள்ளளவு குறைந்திருந்தால், அதனால் ஏற்படுகின்ற பயனும் குறைந்திருக்கும். அந்தப் பயன் குறையாத காரணத்தால் அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற கருத்துக்கள் உண்மை என்று வலியுறுத்தக்கூடிய அளவுக்கு ஆதாரங்கள் இருக்கின்றன என்பதைச் சொல்லி, வரத்துக் கால்வாயும் சரியாக இருக்கிறது. கொள்ளளவும் சரியாக இருக்கிறது, பாசன நிலத்திற்கு பாசன இடைவெளியும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில் இது தேவையான திட்டம் என்று கருதி அரசு பணிகளை மேற்கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உப்பனாற்றின் கரைகள் அகலப்படுத்தல்.

706—(*வினா எண் 2168)—திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தாலுக்காவில் திருநகரி என்னும் ஊருக்கு அருகில் ஓடி கடலில் கலக்கும் உப்பனாற்றின் இரு கரைகளையும் அகலப்படுத்தி சீர்செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்துள்ள நடவடிக்கை விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல பள்ளத்தாக்குகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் எல்லா பள்ளத்தாக்குகளிலும் நீர்ப் பாசனத் திட்டங்களை அமைப்பது என்பது இயலாத காரியம். இன்னும் சொல்லப்போனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய எண்ணத்தில் சிலவற்றைப் பொறுத்தவரையில் நல்ல திட்டமாக அமையக் கூடும் என்று தோன்றுகின்ற நிலைமையில் அதுபற்றி அவர்கள் வெளிப்படுத்தியிருக்கக் கூடும். அதை எல்லாம் அரசினுடைய செயல்முறைத் திட்டங்களாக ஆக்கி நிறைவேற்றிட முடியாது. என்றாலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைக்கு இணங்க ஆய்வு நடத்த அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூரில் இயங்கி வந்த பரம்பிக்குளம் ஆயக்கட்டு பகுதி அலுவலகம்.

708—(* வினா எண். 2747)—திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் இயங்கி வந்த பரம்பிக்குளம், ஆளியாறு திட்ட ஆயக்கட்டு பாசன விரிவாக்கத் திட்ட அலுவலகத்தை மூடியதற்கான காரணம் என்ன ?

(ஆ) மீண்டும் திருப்பூரில் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஆயக்கட்டு விரிவாக்கக் கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அனைத்து பணிகளும் ஏறக்குறைய முடிவடைந்து விட்டதால் அக்கோட்டமும் அதன் கீழ் இருந்த மூன்று உபகோட்டங்களில் இரண்டுஉபகோட்டங்களும் 28-2-1985 பிற்பகல் முதல் மூடப்பட்டது. எஞ்சியுள்ள ஒரு உபகோட்டம் இக்கோட்டத்தின் மீதமுள்ள பணிகளை முடிக்கும் பொருட்டு காங்கேயம் ஆயக்கட்டு விரிவாக்கக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் இயங்கி வந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு பாசன விரிவாக்கத்திட்ட அலுவலகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பகுதி மூடப்பட்டு விட்டதாகவும் இன்னும் ஒன்றுதான் செயல்பட்டு வருவதாகவும் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக் கொள்ள விரும்புவது பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்காக எவ்வளவு ரூபாயில்





திட்டம் போடப்பட்டது ? இப்போது எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கின்றது. வேலை கொஞ்சம் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வேலை எவ்வளவு நாட்களுக்குள் நிறைவேறும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அலுவலகம் மூடப்பட்டது பற்றிய ஒன்றாகும். அந்த முறையில் அந்த விவரங்கள்தான் தற்போது என்னிடத்தில் இருக்கின்றன. அலுவலகத்தை மூடியதற்கு வேறு எந்தவிதமான காரணமும் கிடையாது. அந்தப் பணிகள் முடிந்துவிட்டன. ஆகவேதான் அலுவலகம் மூடப்பட்டுவிட்டது என்பது மிகத் தெளிந்த ஒரு பதிலாகும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ஏறக்குறைய முடிவுஅடைந்துவிட்டது என்றுதான் சொன்னார்கள். அவர்களுடைய இந்தப் பதிலிலிருந்தே அந்தப் பணி இன்னும் முடிவு அடையவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் அவசர கோலத்தில் அவற்றை அகற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் பல்லடம் கிராமம் போன்ற உட்புறகிராமங்களில் இருந்து வருகிறவர்கள் பி.ஏ.பி. அலுவலகம் திருப்பூரில் இருந்தால்தான் வந்து செல்வதற்கு நடைமுறையில் வசதியாக இருக்கும் என்பதால் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, திருப்பூரிலேயே அந்த அலுவலகத்தை திறக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே: அலுவலகங்களை நியமிக்கும்போது, முதலில் களப் பணிகளை மேற்கொள்ளுவதற்காகவும், அந்தப் பணிகளை முடிப்பதற்காகவும், முடிந்ததற்குப் பிறகு கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்காகவும் நியமிக்கப்படுகின்றன. அங்கே பணிகள் ஏறக்குறைய முடிவு அடைந்துவிட்டது என்று நான் சொன்ன நேரத்தில் நேரிடையாக நடக்கின்ற களப் பணிகளை சொல்லவில்லை. நேரிடையாக நடக்கின்ற பணிகள் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய பணிகள், ஓரளவு முடிவு அடைந்துவிட்டதன் காரணமாகத்தான் அந்த அலுவலகம் மாற்றப்பட்டுவிட்டது. ஆனாலும் கணக்கு வழக்குகளை முடிப்பதற்காக வேண்டி ஒரு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலையில் பொதுப்பணித்துறையின் மொத்த பிரிவுகளும் அங்கே தனியாக தேவையில்லை என்ற முடிவில்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பூம்புகார் கடற்கரைக்கு தடுப்புச் சுவர்கள்.

7082—(* வினா எண். 2280)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே
(அ) ஆம்.

(ஆ) இப்பணிக்கு அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி செயல் பாட்டுக்கு எடுத்துக் கொள்ள தள அதிகாரிகளால் தகக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. க. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, இந்த உப்பனாற்றுக்கரை, என்பது ஒவ்வொரு ஆண்டும் பெய்கின்ற அதிகமான மழையின் காரணமாக தஞ்சை, திருச்சி மாவட்டங் களிலிருந்து தண்ணீர் வந்து சேர்ந்து, கடலில் சென்று கலக்கும் இடம் வரையில் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் இருக்கிறது. சரியான முறையில் கரை இல்லாததால் அதிகமாக வெள்ளம் வருகிறபோது நெற்பயிர்களும் பாதிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு டிசம்பரில் கூட அதிகமாக மழை பெய்து பெரும் சேதம ஏற்பட்டது. அப்போது மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே வந்து ஹெலிகாப்டர் மூலமாக பார்வையிட்டு, அந்தப் பகுதி மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கிய பெருமை கூட உண்டு. இப்படி ஒவ்வொரு ஆண்டும் பாதிப்பு ஏற்படுகின்ற நிலைமை இருக்கிறது. எனவே திருநகரி என்று சொல்லக்கூடிய ஊரிலிருந்து கிழக்கே கடலில் கலக்கும் இடம் வரையில் ஏறத்தாழ 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பழுது பார்த்து, நிரந்தரமாக நல்லமுறையில் கரை அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தீவிர நடவடிக்கை எடுப்பார் களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் எந்தப் பகுதியிலே இப்பேர்ப்பட்ட சேதங்கள் ஏற்பட்டாலும் உடனடியாக நேரடியாகப் பார்த்து அதற்குரிய பரிகாரத்தைக் காணக் கூடிய அளவில் தான் தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் திட்டங்கள் எல்லாம் அமைந்திருக்கின்றன என்பதையும் அவர்களே நேரடியாக அப்பேர்ப்பட்ட பாதிப்புக்கு இலக்கான பகுதிகளுக்கு விரைந்து சென்று பார்வையிடுகிறார்கள் என்பதைத் தமிழகம் அறியும். அந்த வகையிலே தான் இந்தப் பகுதியிலும் சீரான ஒரு திட்டத்தை வகுக்க வேண்டும் என்ற அவர்களுடைய மேலான ஆணைக்கிணங்கதான் இன்று ஒரு திட்டத்தை உருவாக்க வேண்டும் என்ற உத்தரவு தமிழக அரசால் அதிகாரிகளுக்கு இடப் பட்டிருந்தது. அந்த முறையில் உப்பனாற்றில் இரு கரையினையும் அகலப்படுத்தி சீர் செய்ய காவிரி டெல்டா சீரமைப்புத் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் செயலாற்ற திட்டமிடப்பட்ட பல்வேறு பட்டியல்களில் இந்தத் திட்டத்தையும் சேர்த்து அரசின் ஒப்புதலுக்காகத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள். அரசு உரிய ஆய்வினை நடத்தி, தர வேண்டிய ஒப்புதலைத் தந்ததற்குப் பிறகுதான் மேற்கொண்டு பணிகளைச் செய்ய முடியும்.



1985 ஜூலை 17]

திரு. க. பாலசுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளின் ஆய்வுக்குப் பிறகு அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று சொன் னார்கள். ஆனால், இன்னும் மூன்று, நான்கு மாதங்களில் அதிகமான மழை பெய்யக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு இந்த ஆண்டு கூட வெள்ள அபாயம் அந்தப் பகுதியிலே ஏற்படக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. ஆகவே அந்தக் கரையிலே மிகவும் மோசமாகப் பழுதான இடத்தையாவது விரைவில் இன்னும் இரண்டு மூன்று மாதங்களில் சீர் செய்ய அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரிகள் ஆய்வுக்கு இந்தத் திட்டம் விடப்பட்டி ருப்பதாக நான் சொல்லவில்லை. அதிகாரிகள் உரிய ஆய்வு நடத்தித்தான் தலைமைப் பொறியாளர் (பாசனம்) மூலமாக ஒரு திட்டத்தினைத் தமிழக அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியிருக் கிறார்கள் என்று சொல்லி இருக்கிறேன். எனவே மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

மத்தாளப் பள்ளம் அணை.

707—(* வினா எண் 2236)—திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பென்னாகரம் வட்டம், இராமகொண்டஅள்ளி கிராமம் அருகே உள்ள மத்தாளப் பள்ளம் அணை கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இராமகொண்டஅள்ளி என்ற கிராமம் மேட்டூர் அணையின் கரையிலே இருக்கின்ற கிராமம் ஆகும். எனவே அங்கே அருகே இருக்கின்ற மத்தாளப் பள்ளம் கிராமத்தில் பி. டபிள்யூ. டி. மூலமாக அதிகாரிகள் பார்த்து அங்கே ஒரு அணைத் திட்டம் அமைக்கலாம் என்று என்னிடத்திலே சொன்னார்கள். அந்தக் கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்களும் அதற்கான விண்ணப் பத்தை என்னிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். எனவே, அது பற்றி மறுபரிசீலனை செய்ய ஆய்வு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1985 ஜூலை 17

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பல பள்ளத்தாக்குகள் எல்லாம் இருக்கின்றன. இருந்தாலும் எல்லா பள்ளத்தாக்குகளிலும் நீர்ப் பாசனத் திட்டங்களை அமைப்பது என்பது இயலாத காரியம். இன்னும் சொல்லப்போனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஆங்காங்கு இருக்கின்ற நேரத்தில் அவர்களுடைய எண்ணத்தில் சிலவற்றைப் பொறுத்தவரையில் நல்ல திட்டமாக அமைய கூடும் என்று தோன்றுகின்ற நிலைமையில் அதுபற்றி அவர்கள் வெளிப்படுத்தியிருக்கக் கூடும். அதை எல்லாம் அரசினுடைய செயல்முறைத் திட்டங்களாக ஆக்கி நிறைவேற்றிட முடியாது. என்றாலும் இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கைக்கு இணங்க ஆய்வு நடத்த அரசு ஆணையிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூரில் இயங்கி வந்த பரம்பிக்குளம் ஆயக்கட்டு
பகுதி அலுவலகம்.

708—(* வினா எண். 2747)—திரு. பொ. உத்திராபதி மற்றும் திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகரில் இயங்கி வந்த பரம்பிக்குளம், ஆளியாறு திட்ட ஆயக்கட்டு பாசன விரிவாக்கத் திட்ட அலுவலகத்தை மூடியதற்கான காரணம் என்ன ?

(ஆ) மீண்டும் திருப்பூரில் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே (அ) மற்றும் (ஆ) திருப்பூர் ஆயக்கட்டு விரிவாக்கக் கோட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட அனைத்து பணிகளும் ஏறக்குறைய முடிவடைந்து விட்டதால் அக்கோட்டமும் அதன் கீழ் இருந்த மூன்று உபகோட்டங்களில் இரண்டு உபகோட்டங்களும் 28-2-1985 பிற்பகல் முதல் மூடப்பட்டது. எஞ்சியுள்ள ஒரு உபகோட்டம் இக்கோட்டத்தின் மீதமுள்ள பணிகளை முடிக்கும் பொருட்டு காங்கேயம் ஆயக்கட்டு விரிவாக்கக் கோட்டத்துடன் இணைக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் இயங்கி வந்த பரம்பிக்குளம்-ஆளியாறு திட்ட ஆயக்கட்டு பாசன விரிவாக்கத்திட்ட அலுவலகத்தைப் பொறுத்த வரையில் பெரும்பகுதி மூடப்பட்டு விட்டதாகவும் இன்னும் ஒன்றுதான் செயல்பட்டு வருவதாகவும் சொன்னார்கள். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக் கொள்ள விரும்புவது பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்திற்காக எவ்வளவு ரூபாயில்



1985 ஜூலை 17]

திட்டம் போடப்பட்டது ? இப்போது எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட்டு இருக்கின்றது. வேலை கொஞ்சம் பாக்கி இருப்பதாகச் சொன்னார்கள். அந்த வேலை எவ்வளவு நாட் களுக்குள் நிறைவேறும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அலுவலகம் மூடப்பட்டது பற்றிய ஒன்றாகும். அந்த முறையில் அந்த விவரங்கள்தான் தற்போது என்னிடத்தில் இருக்கின்றன. அலுவலகத்தை மூடியதற்கு வேறு எந்தவிதமான காரணமும் கிடையாது. அந்தப் பணிகள் முடிந்துவிட்டன. ஆகவேதான் அலுவலகம் மூடப்பட்டுவிட்டது என்பது மிகத் தெளிந்த ஒரு பதிலாகும்.

திரு. கு. சுப்பராயன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிறபோது ஏறக்குறைய முடிவு அடைந்துவிட்டது என்றுதான் சொன்னார்கள். அவர்களுடைய இந்தப் பதிலிலிருந்தே அந்தப் பணி இன்னும் முடிவு அடையவில்லை என்பது தெளிவாகிறது. ஆகவே அப்படிப்பட்ட நிலையில் அவசர கோலத்தில் அவற்றை அகற்ற வேண்டிய அவசியம் இல்லை. மேலும் பல்லடம் கிராமம் போன்ற உட்புறகிராமங்களில் இருந்து வருகிறவர்கள் பி.ஏ.பி. அலுவலகம் திருப்பூரில் இருந்தால்தான் வந்து செல்வதற்கு நடைமுறையில் வசதியாக இருக்கும் என்பதால் அரசு மீண்டும் மறுபரிசீலனை செய்து, திருப்பூரிலேயே அந்த அலுவலகத்தை திறக்க முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே: அலுவலகங்களை நியமிக்கும்போது, முதலில் களப் பணிகளை மேற்கொள்ளுவதற்காகவும், அந்தப் பணிகளை முடிப்பதற் காகவும், முடிந்ததற்குப் பிறகு கணக்கு வழக்குகளைப் பார்ப்பதற்காகவும் நியமிக்கப்படுகின்றன. அங்கே பணிகள் ஏறக்குறைய முடிவு அடைந்துவிட்டது என்று நான் சொன்ன நேரத்தில் நேரிடையாக நடக்கின்ற களப் பணிகளை சொல்ல வில்லை. நேரிடையாக நடக்கின்ற பணிகள் பொதுமக்களுக்கு நன்மை தரக்கூடிய பணிகள், ஓரளவு முடிவு அடைந்துவிட்டதன் காரணமாகத்தான் அந்த அலுவலகம் மாற்றப்பட்டுவிட்டது. ஆனாலும் கணக்கு வழக்குகளை முடிப்பதற்காக வேண்டி ஒரு அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த நிலையில் பொதுப்பணித்துறையின் மொத்த பிரிவுகளும் அங்கே தனியாக தேவையில்லை என்ற முடிவில்தான் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

பூம்புகார் கடற்கரைக்கு தடுப்புச் சுவர்கள்.

7082—(* வினா எண். 2280)—திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட, வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1985 ஜூலை 17

(அ) பூம்புகார் தொகுதியை சுற்றியுள்ள கடற்கரை ஓரங்களில் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தலைவர் அவர்களே,

(அ) அப்படியொரு திட்டம் அரசிடம் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பூம்புகார் என்கிற ஊர் சிலப்பதிகார சம்பவங்கள் நிகழ்ந்த கண்ணகி கோவிலுடைய வரலாற்று சிறப்புமிக்க ஊர். அந்த ஊர் கடல் அரிப்பால் தண்ணீர் வர வர, தண்ணீரிலே மூழ்கக் கூடிய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் அந்த பூம்புகார் நகரைச் சுற்றி ஒரு தடுப்புச் சுவர் கட்டுவதற்கு அரசு முன்வருமா ? அந்த ஊர் பாதிக்காத அளவுக்கு காப்பாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : தஞ்சை மாவட்டத்தில் கடற்கரை ஓரம் அமைந்துள்ள தரங்கம்பாடி கிராமம்தான் கடல் அரிப்பால் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள . தரங்கம்பாடி கிராமத்தையும் அருகில் உள்ள பூம்புகார் கிராமத்தையும் தலைமைப் பொறியாளர் (சிறு பாசனம்) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, அப்படி ஆய்வு செய்த நேரத்தில் தரங்கம்பாடி கிராமம் கடல் அரிப்பினால் அதிகமாக பாதிக்கப்பட்டு உள்ளது என்று அறிந்து அதற்கு மதிப்பீடுகள் தயாரிக்க அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் பக்கத்திலே இருக்கிற பூம்புகார் நகரத்திற்கு ஆபத்து என்று நாம் கருதக்கூடிய அளவுக்கு கடல் அரிப்பால் பாதிப்பு இல்லை என்ற முடிவிற்கு கருத்துரைகளை தல அதிகாரிகள் அனுப்பியிருக்கிற காரணத்தினால் தான் அந்த திட்டம் மேற்கொள்ளப்பட முடியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். விஜயபாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் கிட்டத்தட்ட 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் கடற்கரை ஓரத்தில் இருந்த, இன்றைக்கு பல்வேறுபட்ட காரணங்களினால் நெருக்கமாக மீனவ மக்கள் வாழ்கின்ற அளவுக்கு அந்தப்பகுதி நெருக்கமாக இருந்துக் கொண்டிருக்கிறது. அவர்களுக்கு மழை, வெள்ளம், புயல் போன்ற காலங்களில் பாதிப்பு அதிகமாக ஏற்படுகிற காரணத்தினால் அந்த தடுப்புச் சுவர் வேண்டுமென்று நீண்டகலமாக அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை எழுப்பி வருகிறார்கள். அவர்களுடைய நல்வாழ் விற்காக இந்தத் திட்டம் அவசியம் தேவை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை மறு பரிசீலனை செய்து அதைக் கட்டிக் கொடுப்பதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1985 ஜூலை 17]

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படும். தேவையாயின் பூம்புகார் பகுதிக்கு தகுந்த நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களின் அனுமதியோடு, அவர்களின் ஆலோசனைகளை மேற்கொண்டு, அரசு மேற்கொள்ளும்.

திரு. கே. வி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் ஓரப் பகுதியில் இருக்கும் இடங்களான அண்ணா நகர், கிருஷ்ணா குப்பம் போன்ற பகுதிகள் கடல் அரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய கடல் ஓரப் பகுதிகளில் இருக்கும் இடங்கள் எல்லாம் எங்கெல்லாம் இருக்கிறதோ, அவைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவா, இல்லையா என்று உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த முறையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் சுட்டிக் காட்டப்பட்டிருக்கக் கூடிய பகுதிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கின்றனவா என்று ஆராய்கிறபோது, அவற்றைப் பாதுகாக்கின்ற வகையிலே மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் உரிய வகையில் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்.

### (அ) தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விடுதல்.

(முற்பகல் 10.20)

திரு. பொ. உத்திராபதி : தலைவர் அவர்களே, மேட்டூர் அணை திறக்கப்பட்டு தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு தண்ணீர் விடப்பட்டது என்று வேகமாக அறிக்கை விட்டார்கள். தற்போது மேட்டூர் அணையில் தண்ணீர் வரத்து 3,500 கன அடியாக குறைந்துவிட்டது. ஆகவே கர்நாடக அரசோடு பேச்சுவார்த்தை நடத்தி வேகமாக விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுக்க அரசு பரிசிலித்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : You give a separate notice. Then only the Hon. Minister can give a reply.

## 3. ஒழுங்குப் பிரச்சினை.

### நீதிமன்றத்திலுள்ள வழக்கு குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, இந்த அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை குறித்த ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன்.

* *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இப்போது வேண்டாம்.**

திரு. அ. ரகுமான்கான் : நான் என்ன சொல்கிறேன் என்பதை கேட்டுவிட்டுச் சொல்லுங்கள். இது சபை சம்பந்தப்பட்ட பிரச்சினை....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வருவதிலே எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எனக்கும் தெரியும் நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று In the interest of the dignity of the House, I am requesting you not to raise that issue now.

திரு. அ. ரகுமான்கான் : நீங்கள் எதை நினைத்துச் சொல்கிறீர்களோ அதைத்தான் நான் சொல்வேன் என்பதல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : It is a delicate issue. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று அதை எழுப்ப வேண்டாம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, Point of ord.r c n not be claimed as a matter of right. அவர்கள் சொல்லும்போது தேவையில்லை என்று தீர்ப்பளித்துவிட்டீர்கள். அதற்குப் பிறகு அவர்கள் எதுவும் சொல்வதற்கில்லை. ஒத்தி வைப்புத் தீர்மானமோ, கவனஈர்ப்புத் தீர்மானமோ என்றால் உறுப்பினர்களுக்கு அதில் உரிமை இருக்கிறது. இதில் அந்த உரிமை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையில் நடைபெறும் நடவடிக்கையை ஒட்டித்தான் இருத்தல் வேண்டும். இப்போது வினாக்கள்-விடைகள் நேரம் முடிந்திருக்கிறது. இன்னும் அவையின் நிகழ்ச்சிகள் எதுவும் துவங்கப்பெறவில்லை. (குறுக்கிடு) டெக்னிக்கலாக இதை நான் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இங்கே நாம் ஒரு முடிவெடுத்து, அந்த முடிவு நிறைவேற்றப்படாத கட்டம் இருக்குமானால், நிறைவேற்றப்படாத நிலைமை இடையிலே பல நாட்கள் ஆகிறபோது, அதுபற்றி தங்களுடைய கருத்து அல்லது தாங்கள் எடுத்துக்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளைப் பற்றி கேட்பதற்கு ஒரு நியாயமான உரிமை இருக்கிறது. இது அவை சம்பந்தப்பட்ட பிரச்னை என்ற அடிப்படையில், பாயின்ட் ஆப் ஆர்டரில் வராது என்றால், இங்கே வருகிற எதுவுமே பாயின்ட் ஆப் ஆர்டரில் வரவில்லையென்றால், பாயின்ட் ஆப் ஆர்டரில் யாரும் பேசுவதை அனுமதிக்க முடியாது என்ற நிலைமை எனக்கே கூட ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது அவையின் நடவடிக்கைகளை ஒட்டி இருத்தல் வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நான் கேட்பதை இன்னதென்று தெரிந்து கொள்ளாமல் நீங்கள் உத்தரவு போட்டு என்ன பிரயோஜனம் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் தான் ரொம்பவும் தெளிவாகச் சொன்னேன். Point of order ஆர்டர் எழுப்பக் கூடாது என்று சொல்லவில்லை. ஓர் உறுப்பினர் தம் can not be claimed as a matter of right. எழுப்பித் தான் தீருவேன் என்பதற்கு பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பித் தான் பாயின்ட் ஆப் ஆர்டர்களே எழுப்புக் கூடாது உரிமை இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் ஆகவே பிரச்னை என்னவென்றால், என்று சொல்லவில்லை. அதற்கு தாங்கள் அந்த உறுப்பினர் தெரிவித்து விட்டார்கள். மேலும் பேசுவேன் என்று ஒரு தீர்ப்புக் கொடுத்துவிட்டீர்கள். வற்புறுத்துவது என்ன அந்த உறுப்பினர் திரும்பத் திரும்ப நியாயம் என்று தான் கேட்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது நடைமுறையில் இங்கே நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறபோது அதிலே ஏதாவது குறைபாடு அல்லது மாறுபாடு ஏற்பட்டால்தான் எழுப்பப்பட வேண்டுமென்பது விதி. ஆனால் நடைமுறையிலே எப்படியாகி இருக்கிறது என்றால், ஓரோ அவரில் சில பிரச்சனைகளை தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர இது பயன்படுத்தப் படுகிறது. அப்படி இந்த அவையில் நூற்றுக்கணக்கான முறைகளில் பயன்படுத்தப்பட தலைவர் அவர்கள் அனுமதித்திருக் கிறார்கள். இப்போதும் கூட மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் உறுப்பினர் என்ற முறையில் சட்டமன்றத்தினுடைய உரிமை என்ற முறையில் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். ஒரு வேளை அவர் சொல்கிற கருத்து தவறு என்றால், தாங்கள் முடிவிலே, அது தவறு, அதற்கு இந்த அவையிலே நற்போது பதில் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்று கூட தாங்கள் சொல்லலாம். ஆனால் எழுப்புகிறபோதே, திரு. ரகுமான்கான் எழுந்தாலே.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அப்படி நீங்கள் நினைக்கவேண்டாம். அவர்கள் எழுப்பினார் என்று நான் இப்படிச் சொல்லவில்லை. (குறுக்கீடு.)

* * *

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, சீரோ அவரைப் பற்றி மட்டும் ஒரு விளக்கம் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். ஏன் என்றால் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் கிளப்பியிருக்கிறார்கள். இதுபற்றி அலுவல் ஆய்வுக் குழுவிலே நாம் பேசியிருக்கிறோம். இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடரில் அல்ல. இதற்கு முன்பே பேசியிருக்கிறோம். பொதுமக்களை பாதிக்கக்கூடிய, பொது மக்கள் சம்பந்தப்பட்ட முக்கியமான பிரச்சனைகளைப் பற்றி — Issues of public importance — எதிர்க் கட்சியைச் சார்ந்த முன் வரிசையிலே இருக்கின்ற தலைவர்கள் எழுந்து கேட்டு அரசாங்கத்தின் தரப்பிலேயிருந்து பதிலைப் பெற்று, பொதுமக்களுக்கு சில விளக்கங்களைத் தருவதற்கு வாய்ப்பு தரும் என்ற வகையிலேதான் நாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே இதைப்பற்றி பேசியிருக்கிறோமே தவிர, ஒவ்வொரு பிரச்சனையிலும் ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்து சீரோ அவரைப் பயன்படுத்த ஆரம்பிக்க முன்வருவார்களேயானால் இது பாயின்ட் ஆப் ஆர்டராகவும் இருக்காது, சீரோ அவராகவும் இருக்காது, அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்து முடிவுக்குக் பொருத்தமாகவும் இருக்காது.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதை முழு அளவிலே ஒப்புக்கொள்கிறேன். முழு அளவிலே என்றால், நூற்றுக்கு நூறு என்ற அளவிலே ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இங்கே திரு. உத்திராபதி அவர்கள் முன் வரிசையிலேதான் இருக்கிறார்கள். அவர்கள் எழுப்பிய பிரச்சனை பொதுமக்கள் சம்பந்தப்பட்ட மிகப் பெரிய பிரச்னை, தஞ்சை மாவட்டம் முழுவதும் பாதிக்கப்பட்டு இருக்கிற ஒரு பிரச்சனை. இதற்கு பதிலோ, ஒரு விளக்கமோ சொல்வதற்குக்குக் கூட இந்த அவையிலே முன்வரவில்லை....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காகத்தான் உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது, முன்னறிவிப்பு கொடுத்துவிட்டுச் சொல்வது நல்லது. பெரிய மேட்டர்களைப் பற்றி. முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு எழுப்பினால் அமைச்சர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும். (குறுக்கீடு). * * *

---

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



(முற்பகல் 10–30)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் மூலம் நான் தெரிந்து கொள்ள விரும்புவது, நீதிமன்றத்திற்கும் சட்டமன்றத்திற்கும் இடையே ஒரு கருத்து வேறுபாடு வளர்கின்ற அளவுக்கு விவாதங்கள் வளர்த்துக் கொண்டு போவது சரியல்ல. இதில் நீங்கள் எடுத்த முடிவு தான் சரியான முடிவாக இருக்க முடியும். தயவுசெய்து நான் உங்களைக் கேட்டுக்கொள்ளுவது மேற்கொண்டு இதை வளர்த்து ஒரு காண்ட்ரோவர்ஷியல் இஸ்ஸியூவாக ஆக்க வேண்டாம் என்பதை மிக பணிவன்போடு கேட்டுக்கொண்டு அமைகிறேன். தயவுசெய்து அதை செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர் ஒற்றுமை ஆசிரியர் மீது உரிமை நடவடிக்கை எடுத்து இந்த அவையே இரண்டு வார காலம் அவருக்கு சிறைத் தண்டனை விதிக்கலாம் என்று தீர்மானித்தது. அதன்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முறைப்படி காவல் துறைக்கு அவரை கைது செய்யும்படியாக பெரிய சிறைச் சாலை அதிகாரிகளுக்கு அவரை 2 வார காலம் சிறையில் வைக்கும்படியும் உத்திரவிட்டிருக்கிறார்கள். அன்றே நான் பேசுகிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டபோது விளக்கம் தந்தேன். அவர் தலைமறைவாக இருக்கிறார். காவல்துறையினர் அவரை கண்டுபிடிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள், அவர்கள் கண்டுபிடிக்கப்பட்டு இங்கே நிறைவேற்றப்பட்ட சட்டத்தை முறைப்படி நிறைவேற்றப்படும். அவர் 2 வார காலம் சிறையில் அடைக்கப்படுவார். அதுவரை யில் தான் இந்த அவையை பொறுத்து இருக்கிற நிலைமைகளை தாங்கள் தற்போது எடுத்துச் சொல்லலாம். மற்றவற்றை இப்போது எழுப்புவது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமை, கண்ணியம் பற்றி நான் பேசியது உட்பட, திரு. ரகுமான்கான் எழுப்பியது அவை நடவடிக்கை குறிப்பில் ஏற்ற வேண்டாம். எதற்காகச் சொல்கிறேன் என்பதை நீங்கள் உணர்ந்து கொண்டு இருப்பீர்கள் என்று நினைக்கிறேன். பிளீஸ் எல்ப் மீ.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்துக்கொள்கிறேன்......

2. தகவல் கோரல் (தொடர்ச்சி).

(ஆ) உறுப்பினர்களுக்கு முன்கூட்டி வழங்கப்பெற வேண்டிய விளக்கக் குறிப்புகள்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மன்றத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு நீங்கள் ஒரு அறிவுரையை ஆலோசனையாக சொல்லியிருக்கிறீர்கள். அதாவது இந் மன்றத்தில் பேசப்படுகின்ற மானியக் கோரிக்கைகள் பொறுத்து அது சம்பந்தப்பட்ட விளக்க அறிக்கைகளை எல்லாம் குறைந்தபட்சம் 4 நாட்களுக்கு முன்பே உறுப்பினர்களுக்குத் தரவேண்டும் என்று கூறியும் கூட நாளைக்கு விவாதிக்கப்பட இருக்கின்ற மின்சாரவாரியம் சம்பந்தப்பட்ட அறிக்கைகள் இதுவரையில் வந்து சேரவில்லை. இன்று இரவு கொடுத்தால் எப்படி? அப்போது விளக்கு எல்லாம் அணைந்து விடும்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

திருச்சி மாவட்டம், வேப்பந்தட்டை கிராமத்தில் நடைபெற்ற துப்பாக்கி சூட்டினால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. சுப்பராயன், பொன் முத்துராமலிங்கம், டாக்டர் க. நல்லமுத்து, திருவாளர்கள், என். எஸ். வி. சித்தன், டி. ஆர். வேங்கடரமணன், க. பாலன், மா. மணிமாறன், ப. பொன்னுரங்கம், கோ. வீரய்யன், எம். செல்லமுத்து, எஸ். இராசாராமன், டாக்டர் ந. மாசிலாமணி, திருவாளர்கள் வி. பி. சிந்தன், கி. கிருஷ்ணமூர்த்தி, ஜே. ஹேமச்சந்திரன், பொ. உத்திராபதி, ஆ. கா. அ. அப்துல் சமத் ஆகியோர், "திருச்சி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், வேப்பந்தட்டை கிராமத்தில் 12-7-1985 அன்று மாலை போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் மரணம், நூற்றுக் கணக்கானவர் காயம் அடைந்ததால் ஏற்பட்ட பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் க. நல்லமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-7-1985 அன்று மாலை திருச்சி மாவட்டம், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி, வேப்பந்தட்டை கிராமத்தில் போலீசார் பொதுமக்கள் மீது சுடப்பட்டது சம்பந்தமாகவும், நூற்றுக்கணக்கானவர்கள் காயம் பட்டு, படுகாயம் பட்டது சம்பந்தமாகவும், நூற்றுக்கணக்கான அப்பாவி விவசாய மக்களை போலீசார் கைது செய்தது சம்பந்தமாகவும், சித்ரவதை செய்யப்பட்டது சம்பந்தமாகவும், வேப்பந்தட்டை பகுதி மக்கள் மான பங்கம் படுத்தப்பட்டது சம்பந்தமாகவும்



விவசாயிகளின் வாகனங்களை, டிராக்டர்களை போலீசார் அடித்து நொறுக்கப்பட்டது சம்பந்தமாகவும் எனக்கு தொகுதி மக்கள் வாயிலாக செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன.

கலவரம் நடந்த 12-7-85 அன்று சட்டமன்ற நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருந்த காரணத்தினால், 13-7-85 காலை 8 மணிக்கு துப்பாக்கிச் சூடு நடந்த வேப்பந்தட்டை கிராமத்திற்குச் சென்றேன். துப்பாக்கிச் சூடு நடந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. பொதுமக்கள் மிகவும் பதட்ட நிலையில் இருந்தனர்.

துப்பாக்கிச்சூட்டுக்கு இரையான மரவநத்தம் பழனிமுத்துவின் உடலை பெரம்பலூர் அரசாங்க மருத்துவமனையிலே போய், பார்த்தேன். இரண்டு குண்டுகள் அவர் மார்பிலே துளைத்து விட்டு இருப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தேன். அரசாங்க வாகனங்கள் தீக்கிரையாக்கப்பட்ட காட்சியைக் கண்டு வேதனை அடைந்தேன். பின்னர், பதட்ட நிலையிலுள்ள பொதுமக்களுக்கு ஆறுதல் கூறினேன். குண்டடி பட்ட மற்றவர்களின் விவரங்கள் இன்னமும் எனக்கு கிடைக்கவில்லை.

அரசாங்க அதிகாரிகள், உதவி கலெக்டர் உள்பட பலர் காயம் பட்டு திருச்சி அரசாங்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை நான் மருத்துவமனையில் சென்று நேரில் பார்த்தேன். ஆறுதல் கூறினேன். அவர்கள் விரைவில் குணம் அடைய ஆவன செய்யுமாறு மருத்துவ அதிகாரிகளை வேண்டிக் கொண்டேன். வேப்பந்தட்டையில் நடந்தது என்ன என்பதைப்பற்றி இங்கே சுருக்கமாகக் கூற விழைகிறேன்

வேப்பந்தட்டை ஒன்றியப்பகுதியைச் சேர்ந்த மக்கள், நெய்குப்பை, மரவநத்தம், என். புதூர், தொண்டப்பாடி, வி. களத்தூர். மெற்குணம் போன்ற பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தங்கள் கிராமங்களுக்கு பஸ் வசதி, சாலை வசதி, குடிநீர் வசதி, வீட்டு வசதி போன்ற தேவைகளை முன் வைத்து பல ஆண்டுகளாகப் போராடி வருகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நான் சட்டமன்ற உறுப்பினராக பதவி ஏற்ற நாளிலிருந்து மக்கள் கோரிக்கைகளை அதிகாரிகளிடத்திலும் எடுத்துக்கூறி கோரிக்கைகள் கொடுத்த வண்ணம் உள்ளேன். குறிப்பாக, பஸ் வசதி வேண்டி தீவிர முயற்சிகளில் நான் ஈடுபட்டுள்ள நிலையில் மக்கள் பொறுமையிழந்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். துண்டுப் பிரசுரம் வாயிலாகக் கேள்விப்பட்ட நான் 6-7-1985 அன்று கலெக்டரை நேரில் சந்தித்து வேப்பந்தட்டை பகுதியை சேர்ந்த மக்கள் தங்களுக்கு பஸ் வசதி வேண்டி பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். ஆகவே, தாங்கள் தயவுசெய்து, மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் குறைகளைப்பரிவுடன் கேட்டு ஆவன செய்யவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளேன்.

பொதுமக்கள் சார்பில் நான் கடந்த 6, 7 மாதக் காலமாக பஸ் வசதி வேண்டி, கலெக்டர் அவர்களையும், போக்குவரத்துத் துறை அதிகாரிகளையும் பல முறை நேரில் சந்தித்து விண்ணப்பங்கள் கொடுத்த வண்ணம் உள்ளேன். நான் இது வரை மக்கள் பிரச்சினைகளுக்காக அரசு அதிகாரிகளைச் சந்தித்து விவாதித்தது எல்லாம், இன்று விழலுக்கு இறைத்த நீராக ஆகிவிட்டது.

பொதுமக்கள் தங்கள் பஸ் மறியல் போராட்டம் பற்றி 4-7-85 அன்று மாவட்டக் கலெக்டர், மாவட்ட போலீஸ் அதிகாரிகள், தாசில்தார் அனைவருக்கும் அறிவித்துள்ளனர். போராட்டத்தை 12-7-85 அன்று காலை சுமார் 10 மணிக்கு ஆரம்பித்தனர். மாலை 5 மணிவரை அதிகாரிகள் மக்களைச் சந்திக்கவில்லை. 5 மணிக்கு மேல் அதிகாரிகள், தாசில்தார், உதவி கலெக்டர் போன்றவர்கள் மக்களிடையே பேச்சுவார்த்தையைத் தொடங்கியுள்ளனர். மக்களிடையே அதிருப்தி ஏற்படும் வண்ணம் பேச்சுவார்த்தை அமைந்துவிட்டது. அதிகாரிகள், மறியல் போராட்டத்தைக் கைவிடாவிட்டால், கைது செய்யப்படுவீர்கள் என்று பொதுமக்களைப் பயமுறுத்தியுள்ளனர். பின்னர், தடியடி, கண்ணீர்ப்புகை, துப்பாக்குச் சூடு நடந்துள்ளது. உதவி கலெக்டர் திரு. நாகராஜன், தாசில்தார் திரு லட்சுமிநாராயணன் ஆகியவர்கள், மக்களுக்கு எவ்வித வாக்குறுதியும் கொடுக்க இயலாத நிலையில் மக்கள் கலெக்டரை நேரில் சந்திக்கவேண்டும் என்று கோரியுள்ளனர்.

எழுத்து மூலமாக அவர்கள் கோரிக்கையை பூர்த்திசெய்வதாக உறுதிமொழி கேட்டுள்ளனர். போலீசாரின் துப்பாக்கிச் சூட்டில், பொதுமக்கள் பலர் காயப்பட்டதாகவும். கொல்லப்பட்டதாகவும் சுற்று வட்டாரங்களுக்குச் செய்தி பரவ, ஆயிரக்கணக்கான மக்கள் அதிகாரிகளைச் சூழ்ந்து கொண்டனர். அதற்குப் பிறகு போலீசாருக்கும், பொதுமக்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

துப்பாக்கிச் சூட்டில் எத்தனை பேர் உயிரிழந்தனர், படுகாயம் பட்டவர்கள் எத்தனை பேர், காயம் பட்டவர்கள் எத்தனை பேர் என்ற உண்மை தெரியாமல் புதிராக உள்ளது. அரசுத் தரப்பு அதிகாரிகள் மற்றும் சுமார் 43 பேர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொதுமக்கள் யாரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைக்கவில்லை.

பொதுமக்கள் நிறைய பேர்கள் காணவில்லை என்ற செய்தி நிலவுகின்றது. மரவநத்தம் பழனிமுத்து என்பவர் களத்திலேயே போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். மெற்குணம் செங்கமலம் உயிருக்குப் போராடும் நிலையில் தஞ்சை மருத்துவமனையில் உள்ளார். வி. களத்தூர் முத்துச்சாமி துப்பாக்கிச் சூட்டில் படுகாயப்பட்டு, அரியலூர் மருத்துவமனையிலே உள்ளார். மற்றவர்கள் நிலை என்ன என்பது புரியாத நிலையில் உள்ளது.



இதற்கிடையிலே நூற்றுக்கணக்கான பொதுமக்கள் போலீசாரால் தொந்தரவு செய்யப்படுவதாக செய்திகள் வந்தவண்ணம் உள்ளது. ஆகவே, இதைப்பற்றி நிறைய பேசவேண்டியிருப்பதால் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

*திரு கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே புதிய சட்டமன்றம் அமைக்கப்பட்டதற்குப் பின்னர் அநேகமாக ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் அதிகபட்சமாகக் கொடுக்கப்பட்டது போலீசாருடைய அத்து மீறிய சட்ட விரோத நடவடிக்கைகள் குறித்துத்தான் என்பதை நான் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். குறிப்பாகக் கடந்த 12-7-85—ஆம் நாளன்று மாலை திருச்சி பெரம்பலூர் வேப்பந்தட்டையில் நடைபெற்ற துப்பாக்கி சூடு— 24 ரவுண்டு மக்களை நோக்கிச் சுட்டு இருக்கிறார்கள். 24 ரவுண்ட் சுட்டதோடு கடந்த சில தினங்களாகவே தொடர்ந்து ஒரு அனுதாப உணர்வைத் தூண்டுகின்ற வகையிலே அதிகாரிகளும் அடிப்பட்டிருக்கிறார்கள் என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. அங்கே அதிகாரிகள் அடிப்பட்டிருக்கலாம்; கிட்டத்தட்ட 40-க்கும் மேற்பட்ட காவலர்கள் அடிப்பட்டிருப்பதாகச் சொல் கிறார்கள்; ஆர்.டி.ஓ. அடிப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்களெல்லாம் அடிபட்டது நியாயம் தான் என்று பேசுவது என் நோக்கம் இல்லை. ஆனால் இப்படி ஒரு அசம்பாவிதமான சம்பவம் நடைபெறுவதற்கு யார் காரணம் என்பதை பரிவுணர்ச்சியோடு இந்த மாதில அரசு சிந்திக்க வேண்டும். வழக்கம் போல இதில் அளித்து ஒத்தி வைப்புத் தீர்மானம் நிராகரிக்கப்படுகிற நிலைமைகள் இந்த விஷயத்தில் தவிர்க்கப்பட வேண்டுமென்பதை நான் உணர்வுபூர்வமாக கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நடைபெற்றிருக்கின்ற நிலைமைகளைப்பற்றி குறிப்பிடுகின்ற பொழுது எனக்கு முன்னாள் பேசிய சம்பந்தப்பட்ட தொகுதி உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதிலேயிருந்து எனக்குப் புலப்படுகிறது, நடைமுறையிலே இருக்கக்கூடிய ஜனநாயக மரபுகளை எல்லாம் அதிகாரிகள் கேலிக்கூத்தாக ஆக்கிக்கொண்டிருக்கிறார்கள்; சம்பந்தப்பட்ட பகுதிக்கு பஸ் வேண்டுமென்று சொல்லி, பெரம்பலூர், திருவாலாந்துறை இடையே வேப்பந்தட்டை, நெய்க்குப்பை, வி. களத்தூர் வழியாக டவுன் பஸ் விட வேண்டுமென்று பல வருஷங்களாகக் கோரிக்கை வைக்கப்பட்டு இருக்கிறது. இந்த பஸ் மறியல் போராட்டம் நடைபெறும் என்று முன் கூட்டியே நோட்டீஸ் அடித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதற்குப் பிறகு தான் இந்த போராட்டமே நடைபெற்றிருக்கிறது.

ஆகவே நோட்டீஸ் கொடுக்கப்பெற்றது மட்டுமல்ல, இந்த
பஸ் மறியல் மனு கொடுக்கப்பட்டது மட்டுமல்ல, அந்தத்
தொகுதி சட்டமன்ற உறுப்பினரே மாவட்ட ஆட்சித்
தலைவருக்கு எழுதியும், சம்பந்தப்பட்ட போக்குவரத்துத்
துறைக்கு எழுதியும் கூட அவர்கள் இதைப்பற்றிக் கவலைப்
படாமல் இருந்திருக்கிறார்கள் என்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட
சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கையை அந்த அதிகாரிகள்
எந்த அளவிற்கு மதித்து இருக்கிறார்கள்? காலத்தில் அந்தக்
கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப்பட்டு இருக்குமேயானால்,
மக்களின் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டு பஸ் விடப்
பட்டிருக்குமானால் இத்தகைய துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்
காது. ஆனால் அதிகாரிகள் இதைச் செய்யாத காரணத்
தினாலேதான் இது நடந்திருக்கிறது. ஒத்தி வைக்க வேண்டு
மென்பதற்கு உரிய மிக முக்கியமான விஷயம், கடந்த சில
தினங்களுக்கு முன்னால் காமராஜ் மாவட்டத்திலே நடந்த
துப்பாக்கிச் சூட்டின் தன்மை என்ன? சட்டம் வரையறுத்திருக்
கின்ற நடைமுறைப் படிதானா துப்பாக்கிச் சூடு நடைபெற்றிருக்
கிறது, தடியடி நடத்தப்பட்டதா? கண்ணீர்புகை குண்டு
வெடித்தனரா? வானத்தை நோக்கிச் சுட்டார்களா? எதுவும்
இல்லை. உடனடியாக மக்களின் மண்டையை நோக்கியே
சுட்டிருக்கிறார்கள்; தலையை நோக்கிச் சுடுகின்ற அளவிற்கு
மக்களைப் பார்த்து சுட்டுக் கொல்லுகின்ற வெறி உணர்வுக்கு
ஆட்பட்டிருக்கிறார்கள் இந்த அதிகாரிகள், இந்த காவல் துறை
என்று சொன்னால் இதற்கு நீங்கள் கடிவாளம் இடப் போவது
இல்லையா?

இந்த மாநிலத்தை ஆளுகின்ற கட்சி என்பதற்காக, அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகம் இந்த மாநிலத்தை ஆளுகிறது
என்பதற்காகவே, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
ஆட்சியின் கீழ் எது நடைபெற்றபோதிலும் நியாயப்
படுத்துவதா? போலீசார் சுட்டாலும் நியாயப்படுத்துவதா?
இந்தப் போக்கிலே இந்த அரசு போய்க் கொண்டு இருக்கு
மானால் ஜனநாயக நெறிமுறைகள் பாழ்பட்டுப் போகும் என்று
நான் எச்சரிக்க விரும்புகிறேன்.

எதற்காக இதை நான் வலியுறுத்த வேண்டியிருக்கிறது
என்றால், சுடப்பட்டிருப்பதிலே ஒருவர் மரணம் அடைந்தார்
என்பதற்காக மட்டுமல்ல; காயமடைந்திருக்கிறார்கள் என்பதற்
காக மட்டுமல்ல; இந்த நிகழ்ச்சி இதோடு முடிவுறும் என்று
இந்த அமைச்சரவை உறுதி கூறுமா? இனிமேல் இந்த மாநிலத்தில்
துப்பாக்கிச் சூடே நடைபெறாது என்று சொல்வார்களா?
அப்படித் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு என்ன வழிப்பறியா
நடந்தது? ஏதாவது கடத்தல் கும்பலை நோக்கிச் சுட்டார்
களா? என்ன கேட்டார்கள்? தங்கள் அடிப்படையான வசதி
களை நிறைவேற்ற வேண்டுமென்று. ஜனநாயக மரபு





அனுமதித்து இருக்கின்ற கட்டமைப்புக்குள் நின்றே கோரிக்
கையை வைத்திருக்கிறார்கள். அதை எந்த அளவிற்கு இந்த
அதிகாரிகளும், அரசும் மதித்திருக்கிறது என்பதைக் குறித்து
நாம் விரிவாக விவாதிக்க வேண்டிய அவசியம் இருப்பதால்
நான் இந்த விஷயத்தை வலியுறுத்துவதோடு அங்கே என்ன
வழக்கு போட்டிருக்கிறார்கள் என்பதுபற்றி நான் ஒன்றை
இறுதியாக நினைவுபடுத்த விரும்புகிறேன். 307-இன் கீழ்
வழக்கு போட்டிருக்கிறார்கள். கொலை செய்வதற்காகவா
நோட்டீஸ் போட்டார்கள். தயவு செய்து மாண்புமிகு நிதி
யமைச்சரவர்கள் இதற்குப் பதில் அளிக்கும் பொழுது குறிப்பிட
வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

60 பேர்கள் மீது வழக்கு போட்டிருக்கிறார்கள். போடப்
பட்டிருக்கிற செக்ஷன்கள் என்ன; 307—கொலை முயற்சி; 147
148— கலவரம் செய்தல் பயங்கரமான ஆயுதங்களுடன் வந்து
352—அரசு ஊழியர்களை பணி செய்யவிடாமல் தடுத்தல் என்ற
பிரிவுகளின் கீழ் கைது செய்திருக்கிறார்களே, பஸ் வேண்டு
மென்று வந்தவர்கள் கத்தியோடு வந்தார்களா; பஸ் வேண்டு
மென்று வந்தவர்கள் அதிகாரிகளைக் கொலை செய்ய வந்தார்
களா? எந்த அளவுக்குப் போலீசாரால் பொய் வழக்கு போடப்
படுகிறது என்பதற்கு கண்ணுக்கு முன்னால் உள்ள உதாரணம்
இது. இந்த மாநில அரசு நேர்மையிலே இருந்து பிசகவில்லை
யென்பது உண்மையானால், மனசாட்சியை இழந்துவிட
வில்லையென்பது உண்மையானால், அங்கே போடப்படிருக்கிற
வழக்கை உடனடியாக வாபஸ் பெற வேண்டும்; சம்பந்தப்
பட்டவர்கள் மீது இத்தகைய பொய் வழக்கு போடக்கூடாது;
அவர்கள் கொலை செய்ய வரவில்லை, கோரிக்கையைக்
கேட்கத்தான் வந்தார்கள்.

அவர்கள் விண்ணப்பம் கொடுக்க வந்தார்களே தவிர, ஆயுதம்
தாங்கி வரவில்லை. இப்படியிருக்கும்போது, அரசுக்கு ஆராய்ச்சி
தேவையில்லை, கமிஷன் போட வேண்டியதில்லை, இது பொய்
வழக்கு என்று தெரிந்துகொள்ள. ஆகவே, இத்தகைய
அதிகாரிகளின் நடவடிக்கைகளை, அரசாங்கத்திற்கு அவப்பெயர்
கொடுக்கக்கூடியதாகும் இந்த நடவடிக்கைகளைப் பற்றி, பரி
பூரணமாக விவாதித்து, எதிர் காலத்தில், தமிழகத்தில்
இத்தகைய சம்பவங்கள் நடைபெறாமல் தடுக்க வேண்டு
மானால், இந்தப் பேரவையின் இன்றைய அலுவல்களை
ஒத்தி வைத்து, முழுமையாக இதுகுறித்து விவாதிக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு பொன் முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, இன்றைக்கு, 12-7-85 ஆம் நாள்
வேப்பம்தட்டையிலே நடைபெற்ற துப்பாக்கிச்சூடு சம்பவம்
குறித்து சில விவரங்களை இந்த அவையிலே எடுத்துச் சொல்
வதன் மூலமாக, அதனுடைய முக்கியத்துவம் கருதி, ஏனைய

நடவடிக்கைகளை எல்லாம் ஒத்தி வைத்துவிட்டு, இதை விரிவாக விவாதிக்க வேண்டுமென்ற உணர்வின் அடிப்படையில் சில நிலவரங்களை இந்த மன்றத்திற்கு நான் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

வேப்பம்தட்டை கிராமம்' அதற்கு அருகிலே உள்ள வி.களத்தூர், மெய்யூர் அகிய பகுதி மக்கள் பெரம்பலூரிலிருந்து திருவாலந்துறை வரையிலும் நகரப் பேருந்து விட வேண்டுமென்ற கோரிக்கையை பல்லாண்டுக் காலமாக, சட்டப்பேரவை உறுப்பினர் மூலமாகக் கூட அந்த முயற்சிப் பரவலாகவும் ஆழமாகவும் நடந்திருக்கின்றன என்பதற்கான சாட்சியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஆனாலுங்கூட, நீண்டகாலமாக இந்த மக்கள் கோரிக்கையை நிராகரிப்பதை அங்கே உள்ளவர்கள் தங்களுடைய கடமையாகக்கருதி, தொடர்ந்து நிராகரித்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, ஒரு காலகட்டத்தில் அதை எப்படியாவது உணர்த்திட வேண்டும், தீவிரமாக உணர்த்திட வேண்டுமென்ற எண்ணத்தில் அடிப்படையில் அந்தக் கிராம மக்கள் எல்லாம் வேப்பம் தட்டை ஊராட்சி ஒன்றியத்தின் அலுவலகத்தின் முன்னாலே கூடி, அங்கே தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றை இந்த மாமன்றம் நினைவிலே கொள்ள வேண்டும். அவர்கள் எடுத்து வைத்துக் கொண்டிருக்கிற கோரிக்கை, அரசுக்கும் அதிகாரிகளுக்கும் தெரிவிக்க வேண்டுமென்று எண்ணிய அந்தக் கோரிக்கை எல்லாம், தங்களுடைய ஊர்களுக்கு நகரப் பேருந்து வரவேண்டுமென்ற கோரிக்கைதான். இது ஒன்றும் விவகாரமான கோரிக்கை அல்ல. அரசாங்கமோ, அதிகாரிகளோ நிறைவேற்ற முடியாத கோரிக்கை அல்ல. நீண்ட காலமாக, தேவை என்கிற அடிப்படையில், கால கெடுவும் விதிக்கவும் வேண்டிய கட்டாயம் இல்லை. அப்படி ஒரு மிகச் சாதரணமான ஆனால் அத்தியாவசியமான ஒரு கோரிக்கையை நீண்டகாலமாகவே வைத்தும், அதை நிறைவேற்றாமல் விட்டுவிட்டு, அன்றைக்கு அந்த மக்கள் அதை நினைவு படுத்தக் கூடிய நேரத்தில், அங்கே, அதற்காக, சில தலைவர்களை அழைத்துப் பேச வேண்டுமென்று அழைத்து, அந்தத் தலைவர்களை லாரிகளிலே தள்ளியதன் மூலமாகத்தான் இந்தச் சம்பவம் ஆரம்பித்திருக்கிறது என்று நான் கூட சொல்லவில்லை; அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையினுடைய நிருபர் அந்த விவரங்களை எல்லாம் சேகரித்து, இந்தியன் எக்ஸ்பிரஸ் மூலமாக நமக்கு தெரிவித்து இருக்கிறார்கள்.

எனவே, அங்கே, நடைபெற்ற துப்பாக்கிச் சூடு என்பது தேவையற்ற துப்பாக்கிச் சூடு. அங்கே, சாதாரண மக்கள், தங்களுடைய வழித் தடங்கள் வழியாகப் பேருந்துகள் வர வேண்டுமென்ற கோரிக்கை வைத்தார்கள். அதிகாரிகள் ஒழுங்காகத் தீர்த்திருக்கலாம். வேறொன்றும் அந்த மக்கள் கேட்கவில்லை. எழுதிக் கொடுங்கள் என்று மட்டும் கேட்டிருக்கிறார்கள்.



அவர்கள் எழுதிக் கொடுங்கள் என்று கேட்டது எந்த அளவுக்கு நியாயம் என்பதும் வேறு விவகாரம். ஆனால், அந்த அதிகாரிகள் சரியாக நடந்திருந்தால், அந்த மக்களைச் சரியாக அவர்கள் சமாளித்திருந்தால் இந்தத் துப்பாக்கிச் சூட்டை அவர்கள் தவிர்த்திருக்கலாம் என்ற அடிப்படையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் மிகத் தெளிவாக எழுதிக் காட்டியிருக்கிறது.

இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை நிருபர் சென்ற நேரத்தில் எங்கு பார்த்தாலும் அங்கே இரத்தம் படிந்து இருந்த நிலையையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்தத் துப்பாக்கிச் சூடு என்பது தேவையற்ற ஒன்றாகும்.

அதிகாரிகளும் சில காவலர்களும் காயமுற்றதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. அதற்காக நான் மகிழ்ச்சி அடையத் தயாராக இல்லை, அதற்காக நான் அனுதாபப்படுகிறேன். ஆனால், அதே நேரத்தில இப்படி தேவையில்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு ஒருவர் சாவதற்குக் காரணமாக இருந்து விட்டார்கள். இது நடந்த சில நாட்களுக்கு முன்னாலே, காமராஜர் மாவட்டத்திலே கள்ளங்குளத்திலே மூர்க்கத்தனமாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியாகி, அந்த இரத்தம் கூட உலராத சூழ்நிலையில் வேப்பம்தட்டையிலே இன்னொரு துப்பாக்கிச் சூடு என்பது இந்த ஆட்சி எந்த அளவுக்குத் துப்பாக்கிச் சூட்டையும் காவல் துறையினரையும் நம்பிக் கொண்டு, அவர்களுக்குப் பின்னாலே சென்று கொண்டிருக்கிறது என்பதற்கு இவைகள் எல்லாம் சரியான சான்றுகளாகும்.

(முற்பகல் 10-50)

எனவே நான் இந்த சட்டமன்றத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புவது எல்லாம் வேப்பந்தட்டை கிராமத்து மக்களுடைய கோரிக்கை என்பது மிகச் சாதாரணமான கோரிக்கை. அதை அதிகாரிகளே நிறைவேற்றலாம். அரசாங்கத்திற்கு வரவேண்டிய அவசியம் கூட இல்லை. அந்த கோரிக்கை திடீரென்று எடுத்த எடுப்பிலே வைக்கப்பட்ட ஒன்று அல்ல. நீண்டகாலமாக அந்த மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதிகாரிகள் அதை முறையாக பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை எடுத்திருந்தால், அந்த மக்களை சமாதானப் படுத்தியிருந்தால் இந்த துப்பாக்கிச்சூடு நடந்திருக்காது. தேவையற்ற இந்த துப்பாக்கிச் சூட்டினால் ஒருவர் பலியாகி இருக்கிறார், பலர் காயம் அடைந்திருக்கிறார்கள்.

அதற்குப் பின்னால் நடந்தது என்ன? காவல் துறையினருக்கு உரிய தகவல் அனுப்பப்பட்டு, அவர்கள் அதிகமாக அங்கே வந்திருக்கலாம். பின்னால் பஞ்சாயத்து செய்வதற்காக, ஏன் சமரசம் செய்வதற்காக சென்ற முன்னாள் வட்டாட்சியர் (தாசில்தார்) திரு. பசுபதி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த நண்பர் ஒருவர் கைது செய்யப்பட்டிருக்

கிறார்கள். அது மட்டுமல்லாமல் 147, 148, மற்றும் 307 என்று சொல்லப்படுகின்ற இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் அந்த கிராம மக்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 3,000-க்கு மேற்பட்டவர்களை கைது செய்ய எத்தனித்திருக்கிறார்கள் என்ற பதட்ட நிலை இருந்துகொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக்கழகத்தினுடைய சட்டமன்றத் தலைவர், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் மறுநாள் 13.7.85 அன்று அங்கே ஒரு கூட்டத்திற்குச் சென்றார்கள். அங்கே இருக்கின்ற பதட்ட நிலையைப் பார்த்துவிட்டு, அந்தக் கூட்டத்தை ரத்துசெய்து விட்டு திரும்பக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அப்பாவி மக்கள் எல்லாம் மிகக் கொடுமையாக காவல் துறையினரால் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். இதற்கு எல்லாம் ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். துப்பாக்கிச் சூடு எப்படி நடந்தது? அதற்கான காரணம் என்ன? அரசு இதிலே என்ன நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதைப் பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டியிருப்பதால் அவையினுடைய இன்றைய அனைத்து நடவடிக்கைகளையும் ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, இந்த துப்பாக்கிச் சூட்டில் இறந்துவிட்ட நபருக்கு நஷ்டயீடு கொடுக்க வேண்டும். நீதிவிசாரணை நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

*திரு வி. பி. சிந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த முக்கியமான பிரச்சனை பற்றிநீண்ட விவரங்களுக்கு நான் போகா விட்டாலும் இந்த சபையை ஒத்திவைத்து இந்தப் பிரச்சனையை ஆழமாக விவாதிக்க வேண்டுமென்று ஆரம்பத்திலேயே வலியுறுத்துகிறேன். இந்த துப்பாக்கிச் சூடு ஏதோ திடீரென்று ஆத்திரப்பட்டு நடைபெற்ற ஒரு கலவரத்தின்மீது நடைபெற்ற துப்பாக்கிச் சூடு என்று கூறமுடியாது. மூன்று ஆண்டு காலமாக இந்த பஸ் வசதி வேண்டுமென்று முதலமைச்சருக்கு, போக்குவரத்து துறை அமைச்சருக்கு, அமைச்சர்களுக்கு, அதிகாரிகளுக்கு திருப்பித் திருப்பிச் சொல்லப்பட்ட ஒரு கோரிக்கை. இந்தக் கோரிக்கைக்காக சென்ற ஆண்டு ஒருநாள் உண்ணாவிரதம் நடைபெற்றது. தெரு பூராவும் கிட்டத்தட்ட 400,500 பேர்கள் உண்ணாவிரதம் இருந்து, பின்னர் தாசில்தார் தலையிட்டு உங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்க முயற்சி செய்வோம் என்று சொல்லி அவர்களை அனுப்பி வைத்திருக்கிறார். அதற்குப் பின்னால், தற்போது ஒரு மாதத்திற்கு—இடையிலே என்ன என்ன நடந்தது, எந்த எந்த தேதியில் நடந்தது என்பதைப் பற்றியெல்லாம்சொல்வதற்கு நேரம் போதாத காரணத்தால் அதை எல்லாம் சொல்லவில்லை—மீண்டும் தாசில்தாரை கேட்டபோதும் இதுதான் என்னுடைய வேலையா என்று ஆத்திரமூட்டும் வகையில் ஏளனம் செய்திருக்கிறார். மீண்டும் அதிகாரிகளைச் சந்தித்து முறையிட்டிருக்கிறார்கள்.



அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து நடத்திய அனைத்துக் கட்சி இயக்கங்களும் நடத்திய ஒரு போராட்டம் இது. அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றப்படாததால் சாலை மறிப்பு போராட்டம் நடத்தினார்கள். அப்போதும் பிரச்சனை தீரவில்லை என்பதால், தந்தி தகவல் கொடுத்து ஒரு மாதத்திற்கு முன்னால் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து இது சம்பந்தமாக நியாயம் கேட்டு, தேதி நிர்ணயித்து, மீண்டும் சாலை மறிப்பு போராட்டம் நடத்துவோம் என்ற தகவலை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள்; கலெக்டருக்கும் அனுப்பி இருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு முன்னால் தகவல் கொடுத்தும், அனைத்துக் கட்சி நண்பர்களும் இதில் ஈடுபட்டிருப்பது தெரிந்த பிறகும், அவர்களுடைய நியாயமான கோரிக்கையை விசாரிக்க அரசு அதிகாரிகள் முன்வரவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது.

12 ஆம் தேதி சாலை மறியல் போராட்டம் 10½ மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் சாலையிலே வந்து உட்கார்ந்து கொண்டார்கள். ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்களும் வந்து உட்கார்ந்தார்கள். அப்படி 10½ மணி முதல் 5½ மணி வரையில் அமைதியாக அந்தப் போராட்டம் நடந்தது. மிக அமைதியாக அங்கே போராட்டம் நடந்தது; அமைதிக்குப் பங்கம் ஏற்படுகின்ற வகையில் ஒரு வார்த்தை கூட அங்கே பேசப்படவில்லை. கடைசியாக ஆர்.டி.ஓ. அவர்கள் தலையிட்டு உங்களிடம் நான் பேசுகிறேன் என்று அவர்கள் அழைத்ததின் பேரில் இயக்கத்தினுடைய தலைவர்கள் 5½ மணியளவில் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார்கள். ஆர்.டி.ஓ. அவர்களும் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு, முறையாகப் பேசினார்கள், நல்ல பதிலையும் கொடுத்தார்கள்.

அதாவது 16 ஆம் தேதிதான் கலெக்டர் அவர்கள் இந்தப் பகுதிக்கு வருவார்கள், எனவே எத்தனை மணி நேரம்தான் நீங்கள் இப்படி உட்கார்ந்து கொண்டிருக்கப் போகிறீர்கள், 16ஆம் தேதி அவர்கள் கண்டிப்பாக வருவார்கள் வந்து உங்களுடைய பிரச்சினைகளைப் பற்றிப் பேசுவார்கள் என்று சொன்னார்கள். அவ்வாறு ஆர்.டி.ஓ. அவர்கள் சொல்கின்ற நேரத்தில் அந்த பிரதிநிதிகள் அதற்கு ஒத்துக் கொண்டார்கள். ஆனால் அதைப் பொறுத்வரையில் எழுத்து மூலமாக வேண்டும் என்று பிரதிநிதிகள் கேட்டபோது ஆர்.டி.ஓ. அவர்கள் சற்று தயங்கிவிட்டு பிறகு எழுதிக் கொடுத்தார்கள். அந்தக் கடிதம் என்னிடத்திலே இருக்கின்றது; தேவையானால் அதைத் தலைவரிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அந்தப் பேச்சுவார்த்தைக்குச் சென்ற தலைவர்கள் அவர் எழுதிக் கொடுத்ததில் இன்னொரு வாசகம் சேர்க்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். பஸ் வேண்டும் என்பதற்காகத்தான் சாலை மறியல் போராட்டம் நடந்தது, அதற்கேற்ப 16 ஆம் தேதி கலெக்டர் வந்த பிறகு பேசுவதற்கு ஒத்துக்கொள்கின்றது அரசு என்று திருத்த வேண்டும் என்று கேட்டார்கள். அந்தத் திருத்தத்திற்காகத்தான் சண்டை நடந்தது. அந்தத்

திருத்தத்தை ஏற்றுக்கொண்டால் என்ன? ஏற்றுக்கொள்ளா விட்டால் என்ன? அதுபற்றி மேலும் சற்று நிதானமாகப் பேச முயற்சித்திருக்க முடியும்.

ஆனால் ஆர்.டி.ஓ. அவர்கள் பொறுமையாகப் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் அமைதியாக ஒரு முடிவு ஏற்படுகின்ற நேரத்தில் அங்கே இருந்த ரூரல் டி.எஸ்.பி. திரு. மாத்யூ என்பவர் ஆர்.டி.ஓ. கையிலே இருந்த ஃபைலை வாங்கி மேசையிலே எறிந்து விட்டு, இந்த அயோக்கியர்கள்தான் இந்தக் கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்துகிறார்கள்; இவர்கள் அனைவரையும் உள்ளே தள்ளவேண்டும் என்று அவர்கள் சொன்னதன் பிறகுதான் ஆத்திரம் ஏற்பட்டு இருக்கின்றது. அப்போது ஆர்.டி.ஓ. அவர்கள் திரு. மாத்யூ அவர்களை அமைதிப்படுத்த முயற்சி செய்தார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதற்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம், அந்த விவரங்களுக்குள் நான் போக விரும்பவில்லை. அன்று இரவு பூராவும் பக்கத்திலிருந்த கிராமங்கள் வரையில் ரேழிர்கப்பட்டு சம்பந்தம் இல்லாத வகையில் குண்டு பாய்ந்து எத்தனையோ பெண்கள் தாக்கப்பட்டார்கள். அடித்து கால் ஒடிக்கப்பட்ட மாடும் உண்டு. தாக்கப்பட்டவர்கள் ஏராளம்.

அனைத்துக் கட்சியினரும் 13 ஆம் தேதி கலெக்டரைச் சந்தித்து போலீஸை கிராமங்களுக்கு அனுப்புவதில்லை என்று அவர் வாக்குறுதி கொடுத்த பிறகும் 14 ஆம் தேதி மறுபடியும் போலீஸ் கிராமங்களுக்குச் சென்று மிருகத்தனமாகத் தாக்கி இருக்கிறார்கள். நான் கடுமையான வார்த்தைகளில் பேசுவதாகத் தலைவர் அவர்கள் எண்ண வேண்டாம். மிகவும் மோசமான வகையில் மிருகத்தனமான முறையில் தாக்கி இருக்கிறார்கள். நான் நேரத்தை அதிகமாக எடுத்துக் கொள்ளவில்லை. சுருக்க மாகத்தான் பேசுகிறேன். ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலையில் இது சம்பந்தமாகச் சொல்லப்படுவது என்னவென்றால் கூட்டம் சிதறி ஓடுகின்றபோது கூட்டத்தினர் மிதிந்ததால் அவர் இறந்து விட்டார் என்று சொல்கிறார்கள். அவருடைய சடலத்தைப் பார்த்தால் இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் மார்பிலே தாக்கி அதன் காரணத்தால் அவர் இறந்திருக்கிறார்.

நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. பேசுகின்ற உடல் நிலையும் எனக்கு இல்லை. எனவே சபாநாயகர் அவர்களைப் பணிவோடு வேண்டுகிறேன். இதை ஒரு சாதாரண துப்பாக்கிப் பிரயோகமாக கருதாதீர்கள் Triger happy police official எங்கள் கையிலே துப்பாக்கி உண்டு என்று அவர்கள் கருதுகின்ற நிலையில், மக்களிடத்திலே துப்பாக்கி இல்லை என்று அவர்கள் எண்ணுவதால் தான் அவர்கள் இப்படி நடந்து கொள்கிறார்கள் ஏனோ இப்படிப் பட்ட எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. மக்களிடம்



துப்பாக்கி இருக்கின்ற நாடுகளில் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படுமா? ஆகவே அந்த போலீஸ் அதிகாரி உடனடியாக சஸ்பென்ட் செய்யப்பட வேண்டும். போலீஸ் கிராமங்களுக்குச் சென்று செய்த அக்கிரமத்தைப் பொறுத்தவரையில் ஒரு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கூட எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை நான் ஆதரித்து, இப்படி இதுபற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று நான் கேட்பதற்கு காரணம் மூன்று கோரிக்கைகள் இருக்கின்றன. ஒன்று வழக்குகள் வாபஸ் பெறப் படவேண்டும். இரண்டாவது நீதிவிசாரணை நடத்தப்பட

(முற்பகல் 11–00)

வேண்டும். மூன்றாவதாக காலை 10.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரையில் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் உட்பட அமைதியாக உட்கார்ந்து போராட்டம் நடத்தியபோது, ஆர்.டி.ஓ. அவர்களும் அவர்களோடு பொறுப்பு உணர்ச்சியுடன் கலந்து பேசிக் கொண்டிருந்த நேரத்தில், ஒரு வாசகம் அதிலே சேர்க்க வேண்டும் என்ற காரணத்திற்காக டி.எஸ்.பி. மேத்யூ அவர்கள், அந்தக் கூட்டத்தில் திடீரென்று தலையிட்டு, இவர்கள் எல்லாம் அயோக்கியர்கள் என்று சொல்லிக் கொண்டுவந்த காரணத்தினால்தான், அதற்குப் பிறகுதான் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை உங்கள் கவனத்திற்கு கொண்டுவந்து; இதை முடிப்பதற்கு முன் ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன்.

போலீஸ் மானியத்தின் மீது அவை முன்னவர் அவர்கள் பேசி முடிக்கும் நேரத்தில் நான் சொன்னேன், உங்களுக்கு போலீஸ் கொள்கை என்ற ஒன்று இல்லை என்று. அதே வார்த்தையை இப்போதும் சொல்கிறேன். மிக வேதனையோடு சொல்கிறேன், மன வருத்தத்தோடு சொல்கிறேன். தமிழக அரசுக்கு, மக்களிடையே சட்டம் அமைதி பிரச்னை ஏற்படும்போதெல்லாம் எப்படி போலீஸ் துறையினர் நடந்து கொள்ளவேண்டும் என்பது சம்பந்தமாக ஒரு கொள்கை இல்லை என்று இப்போதும் வலிமை யுடன் கூறிக் கொள்கிறேன். அவற்றையெல்லாம் விரிவாக விவாதிப்பதற்காகத்தான் இந்த அவையை ஒத்தி வைக்கவேண்டும் என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேப்பந்தட்டை கிராமத்திற்கு அருகில் 12–7–85 அன்று நடந்த துப்பாக்கிச் சூடு குறித்து இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டும்; அல்லது ஏன் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று காரண காரிய விவரங்களைத் தருகின்ற வகையில், மாண்புமிகு

உறுப்பினர்கள் தாங்கள் அறிந்த, தங்களுக்குத் தெரிந்த, அல்லது தங்களுக்கு கிடைத்த தகவல்களை அடிப்படையாக வைத்து, தங்களுடைய கொள்கைக் குறிப்புகளையும், சேர்த்து இங்கே கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள்.

12–7–1985 அன்று காலை 10 மணிக்கு திரு. செல்லத்துரை என்பவரின் தலைமையில் தொண்டபாடி, நெய்குப்பை, நெய் குப்பைபுதூர் மறவநாதம், வி. களத்தூர், திருவலந்துறை மற்றும் அகரப் ஆகிய கிராமங்களைச் சேர்ந்தவர்கள் தங்கள் கிராமத்திற்கு நகரப் பேருந்து வசதி வேண்டும் என்ற கோரிக்கையுடன் இதர கோரிக்கைகளையும் வலியுறுத்தி பெரம்பலூர்–ஆத்தூர் சாலை வேப்பந்தட்டை என்னும் இடத்தில் பேருந்துகளை தடுத்து மறியல் செய்ய ஒன்று கூடியுள்ளனர். வேப்பந்தட்டையில் சட்டம் ஒழுங்கை பராமரிக்க தாசில்தார் 12–7–1985 அன்று 8.00 மணிக்கே சென்றுள்ளார். மங்களமேடு ஆய்வாளர், 3 சார் ஆய்வாளர்கள், 1 தலைமைக் காவலர், 9 காவலர்கள் மற்றும் நான்கு பிரிவு ஆயுதப்படைக் காவலர்கள் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்தனர்.

சுமார் 2 ஆயிரம் ஆண்கள் 10.30 மணிக்கு ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் உள்ள பேருந்து நிற்குமிடத்தில் வந்து சாலையில் அமர்ந்து கொண்டு, திரு. செல்லத்துரை ஆரம்பித்து வைக்க மறியலைத் தொடங்கி உள்ளனர். பெரம்பலூர் தாசில்தார், வேப்பந்தட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையர் மற்றும் மங்களமேடு காவல் ஆய்வாளர் போராட்டத் தலைவர்களை பேச்சு வார்த்தை நடத்த அழைத்துள்ளனர். ஆனால் போராட்டத் தலைவர்கள் வர மறுக்கவே தாசில்தார் மற்றும் அதிகாரிகள் அவர்களிடம் சென்று அவர்களின் கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும், மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் அனுப்பி தக்க விரைவு நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்வதாக கூறியுள்ளனர்.

மேலும் சட்டவிரோதமாக கூடுவதற்கு தடையுத்தரவு அமுலில் இருப்பதை நினைவுபடுத்தினர். ஆனால் அக் கிராமத்தினர்கள் உறுதிமொழிக்கு திருப்தி அடையாமல், கலைந்து செல்ல மறுத்துள்ளனர். உடனே டவுன் பஸ் வசதிக்கு அனுமதியளிக்க வேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர். இவ்வாறு பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கையில் தஞ்சாவூர்-சேலம் ஆகிய இடங்களுக்கு செல்லும் சோழன் போக்குவரத்துக் கழகத்தைச் சேர்ந்த சில பேருந்துகளை கூட்டத்தினர் தடுத்துள்ளனர். நேரம் செல்லச் செல்ல கூட்டம் 3,700 ஆக உயர்ந்துள்ளது.

அரியலூர் வருவாய் கோட்டாட்சித் தலைவர் பிற்பகல் 2.00 மணியளவில் சம்பவ இடத்திற்கு விரைந்து தலைவர்களை பேச்சு வார்த்தைக்கு அழைத்துள்ளார். ஆனால் அவர்கள் வர மறுத்துள்ளனர். வருவாய்க் கோட்டாட்சித் தலைவர் மறியல் நடக்கும் இடத்திற்குச் சென்று தான் மாவட்ட ஆட்சித்தலைவரின்



சார்பாக வந்துள்ளதாகவும், 'அவர்களின் கோரிக்கைகளை உடனடியாக கவனிப்பதாகவும் உறுதி கூறியுள்ளார். போராட்டத் தலைவர்கள் தங்கள் போராட்டம் செய்பவர்களுடன் கலந்து பேசி கோட்டாட்சித் தலைவரிடம் வருவதாகக் கூறி சென்றுள்ளனர். அவர்கள் திரும்பி வராததால், கோட்டாட்சித் தலைவர், மீண்டும் தலைவர்களைச் சந்தித்து, போராட்டத்தை கைவிடுமாறும், 16-7-1985 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு வருமாறும் இதுகுறித்து மாவட்ட ஆட்சித் தலைவா போக்குவரத்துத் துறையிடம் கலந்து தக்க நடவடிக்கை எடுப்பார் என்றும் கூறியுள்ளார்.

மாலை 4.30 மணிக்கு கோட்டாட்சித் தலைவர் மற்றும் அதிகாரிகளுடன் போராட்டத் தலைவர்கள் பேசி 16-7-19 5 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர், போக்குவரத்துக் கழக அதிகாரிகளைச் சந்திக்க ஒப்புக கொண்டனர். இந்தக் கூட்ட நடவடிக்கை குறிப்புகள் அங்கு கூடியிருந்த தலைவர்களின் வேண்டுகோளின்படி தயாரிக்கப்பட்டது. அதில் கையெழுத்திடுமாறு கேட்டபோது மீண்டும் மறியல் செய்பவர்களை கலந்து பேசி கையெழுத்திடுவதாகக் கூறி, பின்னர் திரும்பி வந்து கையெழுத்திட விரும்பவில்லை என்று கூறியுள்ளனர்.

மீண்டும் கோட்டாட்சித் தலைவர் மறியல் செய்பவர்களை கலைந்து செல்லுமாறும் போக்குவரத்திற்கு வழிவிடுமாறும் கேட்டுக் கொண்டதோடு, மேலும் தடை செய்தால் கைது செய்ய நேரிடும் என்றும் கூறியுள்ளார். 16-7-1985 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் இந்தப் பிரச்னையை கவனித்து ஒரு முடிவிற்கு கொண்டு வருவார் என்றும் தெரிவித்தார். உடனே திரு. செல்லத்துரை மற்றும் இதர தலைவர்கள் கூட்ட நடவடிக்கைகள் மீது கையெழுத்திடாது வெளியே வந்து மறியல் செய்பவர்களை நோக்கி ஒரு துவாலையை அசைத்து சமிக்ஞை காட்டியதாகவும், இதனைக் கண்ணுற்ற கூட்டத்தினர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தைச் சூழ்ந்து கொண்டு மாலை 5.30 மணியளவில் கற்களை வீச ஆரம்பித்ததாகவும் தெரிய வருகிறது. அதிகாரிகள் வெளியே வந்து சமாதானப்படுத்த எவ்வளவு முயன்றும், கூட்டத்தினர் தொடர்ந்து கற்களை வீசியுள்ளனர். இதனால் காவலர்களுக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டன. கோட்டாட்சியர், ஆய்வாளர், திருச்சி காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்; பெரம்பலூர் தாசில்தார் ஆகியோர் காயமுற்றனர். உடனே சட்டவிரோதக் கூட்டம் என அறிவித்து எச்சரிக்கை செய்தும், கூட்டத்தினர் கலையாமல் கல்லெறிந்ததோடு அலுவலகத்திற்கும் தீ வைத்தனர்.

கூட்டம் கலையாததால் கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வெடிக்கப்பட்டன. இதுவும் பலனளிக்காமல் போகவே தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது. இதற்கிடையில் ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கதவுகள், கண்ணாடி ஜன்னல்களை கூட்டத்தினர் நொறுக்கியும், கோட்டாட்சித் தலைவர் ஜீப், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் ஜீப் மற்றும் காவல் துறை வேன்

ஒன்றிற்கு தீ வைத்தும், தாசில்தார் ஜீப்பினை சேதப்படுத்தியும் உள்ளனர். அங்கே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு சைக்கிள், ஒரு மொபட் ஆகியவைகளுக்கு தீயிடப்பட்டன. வன்முறைக் கூட்டத்தினர் காவலர்கள் மற்றும் அதிகாரிகளைத் தாக்குமாறு கூச்சலிட்டனர். எனவே காவலர் மற்றும் அதிகாரிகள் உயிருக் கும், உடமைக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் ஆபத்து உருவாகிய நிலையில் மீண்டும் தகுந்த எச்சரிக்கைக்குப் பிறகு காவல் துறையினர் பால் அம்யூனிஷன் தொடர்ந்து பக்ஷாட் சுட ஆரம்பித்தனர். இதன்பின்னர் வன்முறைக் கூட்டம் கலைந்து ஓட ஆரம்பித்தது, இதில் 46 காவலர்கள், வருவாய் கோட்டாட்சித் தலைவர், அவர் உதவியாளர் ஆகியோர் காயமுற்றனர். இதில் ஏழு பேர்கள் பலத்த காயமடைந்தனர். கூட்டத்தினர் தொலை பேசிக் கம்பிகளை துண்டித்து மேலதிகாரிகளுடன் தொடர்பு கொள்ள முடியாதபடி செய்துள்ளனர். காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். இதில் ஒரு காவலர் நிலைமை மிகவும் மோசமாக உள்ளது. இச்சம்பவத்தில் 30 வயதுள்ள ஒருவர் குண்டடிப்பட்டு இறந்தார்.

இச்சம்பவம் குறித்து கேள்வியுற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் 7.00 மணிக்கு வேப்பந்தட்டைக்குச் சென்றுள்ளார். மருத்துவமனைக்குச் சென்று காயமடைந்தோரை பார்வை யிட்டுள்ளார், தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதுகுறித்து ஒரு வழக்கு ஐ.பி.சி. 147, 148, 149, 332, 307, 435 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது. குண்டடிப் பட்டு இறந்த நல்லன் என்பவரின் மகனான பழனிமுத்து என்னும் கட்டியக்காரன் உடல் கோட்டாட்சித் தலைவரால் சவப் பரிசோதனை செய்யப்பட்டு, மருத்துவமனையில் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு, உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவத்தின் தொடர்பாக 59 பேர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். தற்போது நிலைமை அமைதியாக உள்ளது.

இந்தச் சம்பவம் உள்ளபடியே விரும்பத்தகாத ஒன்றுதான். இப்படிப்பட்ட சம்பவங்கள் ஏற்படுகிற போது நிலைமைகள் மாற்ற முற்ற தான் அவை ஏற்படுகின்றன, ஆகவே நகரப் பேருந்துகள் விட வேண்டுமென்ற கோரிக்கைகள் ஏறத்தாழ எல்லா தொகுதி களிலும் எல்லோரும் சொல்லிக் கொண்டு தான் வருகிறார்கள். அதனை நிறைவேற்றுவதிலும் பல்வேறு இடர்ப்பாடுகள் இருக் கின்றன. அதனை நிறைவேற்றிக் கொண்டும் வருகிறார்கள்.

நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த டவுன் பஸ்களின் அளவு என்ன? மற்ற பஸ்களின் அளவு என்ன? அதற்கு பிறகு கோரிக்கைகள் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றப்பட்டு வரு கின்றன என்பதை நான்கு ஆண்டு காலத்தினுடைய வளர்ச்சித் தன்மையை நாம் பார்த்தால் நன்றாக அறியலாம். ஆனால் இல



பல இடங்களில் நீண்டகாலமாக கோரிக்கைகள் இருந்து வருகின்றனவென்பது உண்மை. நகர டவுன் பஸ்களை விடுவதற்கு சிலபல வரையறைகள் இருக்கின்றன. டவுனிலிருந்து 30 கிலோ மீட்டர் வரையில் தான் டவுன்பஸ் வரலாமே தவிர, அதற்கு அப்பால் போனால் டவுன் பஸ் வராது, புறநகர் பஸ் தான் விடவேண்டும். இந்தக் குறிப்பிட்ட பிரச்னையில் முழு நிலைமையை பின்னால் மாண்புமிகு போக்குவரத்து அமைச்சர் சிறப்பாகச் சொல்வார்கள். இது 36 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கிற காரணத்தால் சில சங்கடங்கள் இருக்கின்றன என்று சொல்கிறார்கள். எப்படியிருந்தாலும் டவுன்பஸ் வேண்டுமென்று கோரிக்கைகள் எல்லா தொகுதிகளிலும் இருந்து வருகின்றன.

ஆனால் அதை முறைப்படுத்தி தீர்வுகாண்கின்ற முறைகளும் இருந்து வருகின்றன. பல இடங்களில் டவுன்பஸ்களுடைய எண்ணிக்கையை வளர்த்துக்கொண்டே வருகிறோம். பஸ்களுடைய அளவையும் உயர்த்துவதற்கு நிலைமை உருவாகிறபோது, அவை கள் விடுவதற்கு வாய்ப்புகளும், வசதிகளும் ஏற்படுகிறபோது, குறைபாடுகளை எல்லாம் நீக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. ஆனால் அதை முறைப்படுத்தி தீர்த்துக் கொள்ள வேண்டும். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். அப்படிப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றி விட்டால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறாது என்பதையும் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதற்காக இப்படிப்பட்ட முறை யில் மறியல் செய்தால் உடனடியாக தீர்ப்பளிக்கிற அளவிற்கு பிரச்னைகள் வராது. ஆகவே இப்படி மறியல் செய்யப் போகிறோம் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல முன்கூட்டியே அவர்கள் எடுத்துதெரிவித்த காரணத்தால், முன்னெச்சரிக்கையாக அதிகாரிகள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். காலையில் சென்று இப்படியெல்லாம் எடுத்துச்சொல்லியுங் கூட தடையுத்தரவு போட்டும் கூட மறியல் செய்கிற முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

ஆகவே காலையிலே 10 மணிக்குத் தொடங்கி, மாலை 4½, 5 மணி வரையிலும் நடந்து கொண்டிருந்திருக்கிறது. ஆனால் வேறு வழி யில்லாமல் தான் வன்முறையிலே ஈடுபட்டு இருக்கி அந்தக் கும்பல் களிலே இருந்தவர்கள் ஏற்படுத்திய விளைவுகளை எல்லாம் இங்கே எடுத்துச்சொன்னார்கள். அந்தக் காரணத்தாலேதான் வேறு வழியில்லாமல் பக்சாட் விடவேண்டிய அவசியம் வந்தது. சாதாரணமாக வெடிக்கின்ற துப்பாக்கியை வைத்து அல்ல. இதன் காரணமாக குண்டடிபட்டு இறந்தவர் ஒருவர். மற்றவர்கள் காயம்பட்டு இருக்கிறார்கள். காயம்பட்டவர்களை பொதுமக்கள் மருத்துவமனையில் சேர்த்து அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. அது போன்று காவல்துறையைச் சேர்ந்தவர்கள், மற்ற அதிகாரிகள் தாக்கப்பட்டவர்கள் அதற்கான முறைகளிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலை வருகிறபோது, ஒரு உயர் மட்ட அதிகாரியை வைத்து, அதனுடைய உண்மை முழுவதை யும் கண்டறிந்து அறிக்கையை அனுப்ப வேண்டும் என்று மாண்பு மிகு முதல் அமைச்சர் அவர்களும் கேட்டுக்கொண்டு இருக்கிறார் கள். அதனுடைய தன்மைகள் வந்ததற்குப் பிறகு, முழு உண்மையும் இந்தப் பொது விசாரணை நடவடிக்கைகளின் மூலமாக நமக்கு முழுவதும் கிடைக்கக்கூடும். மாண்புமிகு உறுப் பினர்கள் எடுத்துச்சொல்லியது மாதிரி, இப்படிப்பட்ட சூழ்நிலை கள் வந்தது வருந்தத்தக்கதுதான். ஆனாலும் இதனால் ஜனநாயக நாட்டில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் தீர்ந்துவிடாது. ஆகவே துப்பாக்கிச் சூடே நடைபெறாது என்ற அளவுக்கு உறுதி கூற இயலுமா? என்று மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் கூட கேட்டார்கள். மேற்கு வங்காளமே அப்படிப்பட்ட உறுதியை அளிக்க முடியாது. வேறு எந்த மாநிலமும் அளிக்க முடியாது. பஞ்சாப், அஸ்ஸாம், பீகார், ஒரிஸ்ஸா, மகாராஷ்டிரம், கர்நாடகம், கேரளம் போன்ற எந்த மாநிலங்களாக இருந் தாலும், துப்பாக்கிச் சூடே நடைபெற முடியாது என்று சொல்ல முடியாது. அப்படிப்பட்ட இக்கட்டான கட்டங்கள் எல்லா மாநிலங்களிலேயும் ஏற்படுகின்றன. இங்கே யும் ஏற்படுகின்றன. ஆகவே துப்பாக்கிச் சூடு ஒரு வாரத்திற்கு ஒரு தடவை சுட்டுத் தீரவேண்டும் என்ற ஒரு கொள் கையை வைத்துக்கொண்டு, ஏன் இந்த வாரத்தில் துப்பாக்கிச் சூடு நடைபெறவில்லை என்று அரசு அப்படிப்பட்ட கேள்விகளை கேட்பதும் இல்லை. எதிர்பாராத நிலைமையில் சில பல சந்தர் பங்களிலே இது வருகின்றது வருந்தத்தக்கதுதான். ஆனால் இப்படிப்பட்ட நிலை ஏற்படாத அளவிற்கு எவ்வளவுக்கெவ்வளவு தவிர்க்கப்படவேண்டுமோ, அந்த வகையிலே! தவிர்க்கப்பட வேண்டும் என்றும் அதற்குக் காவல்துறை முயலவேண்டும் என்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஆனாலும் கூட, இப்படி எதிர் பாராத சில சந்தர்ப்பங்களிலே எல்லாம் நடந்துதான் தீர வேண்டும் என்ற அவசியம் ஏற்படுகிறது. ஆனாலும் அவர்கள் பல்வேறு முறைகளைக் கையாண்டு இருக்கிறார்கள். சில இடங் களில் எதிர்பாராத வகையில் நடைபெற்று. இப்போது காமராஜ் மாவட்டத்திலே நடைபெற்றதைச் சொன்னார்கள். அது எதிர்பாராத வகையில் நடைபெற்று, அதற்குப் பிறகு நடவடிக்கைகள் எடுக்க வேண்டி வந்தது.

அதற்கு முன்கூட்டியே அதிகாரிகள் போய், கோட்டாட்சித் தலைவர் வந்து, வருவாய்த்துறை அதிகாரிகள், வட்ட ஆட்சித் தலைவர்கள் எல்லாம் இருந்தும், சில பேச்சு வார்த்தைகள் நடத்தி, கண்ணீர்ப் புகைவிட்டு, துப்பாக்கிப் பிரயோகம் செய்து அதற்குப் பிறகு வேறு வழியில்லாமல் பக்சாட் விடவேண்டிய அவசியம் வந்தது, அந்த பக்சாட்டின் காரணமாகத்தான் ஒருவர் இறந்துபடவேண்டிய நிலைமையேற்பட்டது. ஆனாலும் மாண்புமிகு



உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இவ்வளவு நிலைமைகளுக்குக் காரணம் அங்கே இருக்கிற அதிகாரிகளுடைய போக்குதான், இந்த ஆத்திரத்திற்குக் காரணம் என்ற கருத்தையும் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள். எனவே இவைகளை எல்லாம் உயர்மட்டக் குழு அதிகாரியினுடைய விசாரணைக் குழு பொதுமக்களை வைத்து நடத்துகின்ற விசாரணையின்போது, ஒரு உண்மை தெரியக்கூடும். ஆகவே உண்மையின் அடிப்படையிலே இவைகளுக்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆகவே இது பற்றிய முழு அறிக்கையும் மற்றவைகளும் வருமேயானால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். இறந்துபட்டவர்களுக்கு அளிக்க வேண்டிய நிவாரண உதவியைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள், எனவே முழு அறிக்கை வந்ததற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்களை உள்ளத்திலே தேக்கி, நடவடிக்கையை அரசு எடுக்கும் என்று எடுத்துச் சொல்லி, இதற்கு மேல் ஏன் என்றால், விவாதம் எவ்வளவு நடத்தவேண்டுமோ, அவ்வளவு நடத்தி விட்ட பிறகு, இனிமேல் இதைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டிய அவசியம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்களுடைய உணர்வு களை மதித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு நிதி யமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல் களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை யில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

## 5. கவனஈர்ப்புகள்

### (அ) விவசாயிகள் இலவச மின்சாரம் போன்ற சலுகைகள் பெற அதிகாரிகளிடம் சான்றிதழ் பெறுவது குறித்து

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் செ. செம்மலை, மா. சின்னராசு, மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவனஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள இலவச மின்சாரம் போன்ற சலுகைகளை முறையாகப் பெற சிறு விவசாயிகளுக் கான சான்றிதழ்களை வருவாய்த்துறை அதிகாரிகளிடமிருந்து பெறுவதில் ஏற்படும் காலதாமதத்தால் சிறு விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
மூலம் அரசு திரட்டிய விவரங்கள்படி இலவச மின்சாரத்
திட்டத்தின் கீழ் பயன் பெற சான்றிதழ்கள் பெற்ற விவசாயி
களின் எண்ணிக்கை 99,850. ஆனால் வாரிய மேற்பார்வை
பொறியாளர்கள் கொடுத்துள்ள விவரங்கள்படி 72,219 பேர்.
இவ்வேறுபாட்டிற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அதில்
ஒன்று வருவாய் மாவட்டத்தின் எல்லைகளும் மின் வாரிய
திட்ட பகுதிகளின் எல்லைகளும் ஒன்றாக இருப்பதில்லை. இம்
முரண்பாடு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்குக்
கொண்டுவரப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்து தகுதியுள்ள
அனைத்து சிறு விவசாயிகளும் இலவச மின்சாரம் பெற்றிட
சான்றிதழ்களை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.
மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பதில் எதிர்பார்க்கப்படு
கிறது.

*திரு செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்
அவர்களே, இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை வருவாய்த்
துறை பொறுப்பில் உள்ள மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்
களின் கவனத்திற்கு தான் இதை கொண்டு வந்தோம். இதில்
இலவச மின்சாரம் பெற்றிட சலுகை என்ற ஒரு வாசகம் வந்த
தன் காரணமாக அது மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்ச
ருக்கு மாற்றப்பட்டு இருப்பதாக நான் அறிகிறேன். ஆனால் என்
இன்டன்ஷன் எல்லாம் இந்த சிறு விவசாயிகள் சான்றிதழ் பெறு
வதிலே வருவாய்த் துறையினர் காலதாமதப்படுத்துகிறார்கள்.
அதை விரைவாக கொடுக்கவேண்டும் என்ற அந்த அடிப்படையில்
தான் இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் இங்கே எழுப்பப்பட்டது.
இருந்தாலும் கூட்டுப் பொறுப்பு என்ற அந்த முறையில்
மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பதில்
அளித்து இருக்கிறார்கள். எங்களுடைய கேள்வி எல்லாம், இதில்
நான் தெரிந்து கொள்ள விரும்புவது எல்லாம், மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு சிறு விவசாயிகளுக்கு
நிறைய சலுகைகளை அளித்து இருக்கிறது. அந்த சலுகைகளை
ஒவ்வொரு முறையும் பெறுவதற்கு இந்த சிறு விவசாயிகள்
வருவாய்த்துறை அதிகாரிகளை அணுகி சான்றிதழ் பெறவேண்டும்
என்ற சூழ்நிலை இருக்கிறது. இதனால் அந்த சிறு விவசாயி
களுக்கு நிறைய சங்கடங்கள் அவ்வப்போது ஏற்படுவது மட்டும்
அல்ல, வருவாய்த் துறையில் என்ன பதில் சொல்கிறார்கள்
என்றால் இந்த கால தாமதத்திற்குக் காரணம் அங்கே அலுவலர்
கள் பற்றவில்லை என்ற ஒரு காரணத்தைச் சொல்கிறார்கள்.
சிறு விவசாயிகளுக்கு இருக்கிற சங்கடங்களைப் போக்குவதற்கு
இப்போது மாண்புமிகு புரட்சித்தலைவர் அவர்களால் இன்றைக்கு
விவசாயிகளுக்கு பட்டா பாஸ் புத்தகம் வழங்கப்பட இருக்கிறது.
அது இனாதிபதியினுடைய ஒப்புதலுக்காக கொண்டு செல்லப்
பட்டு இருக்கிறது என்ற நிலைமை இருக்கிறது. எனவே அப்படி



விவசாயிகளுக்கு அந்த பட்டா பாஸ் புத்தகம் வழங்கும்போது
அந்த பட்டா பாஸ் புத்தகத்திலேயே இந்த சான்றிதழ்களை
இணைத்துக் கொடுத்துவிடுவோமானால் சிறு விவசாயிகளுக்கு
மிகவும் வசதியாக இருக்கும். ஒவ்வொரு பிரச்சினைக்கும் சிறு
விவசாயிகள் வருவாய் துறையை அணுகி சென்று அந்த சான்றிதழ்
களை பெற வேண்டிய அவசியம் இருக்காது. எனவே மாண்புமிகு
மின்சாரத்துறை அமைச்சர் அவர்களிடமிருந்து நான் தெரிந்து
கொள்ள விரும்புவது, இப்படி விவசாயிகளுக்கு பட்டா பாஸ்
புத்தகம் வழங்கும்போது அந்த பட்டா பாஸ் புத்தகத்திலேயே
அந்த சிறு விவசாயிகளுக்கு இந்த மாதிரி சான்றிதழ்களை
வழங்குவதற்கு தேவையான நடவடிக்கையை நம்முடைய அரசு
மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவா அவர்களே, இது நல்ல யோசனை தான்.
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களிடத்தில் இது குறித்து நான்
இப்போதே பேசிவிட்டேன். அரசு இதை பரிசீலிக்கும். ஆகவே,
கூட்டுப் பொறுப்பு எவ்வளவு வேகமாக வேலை செய்யும் என்ப
தற்கு இது எல்லாம் எடுத்துக்காட்டு ஆகும். மாண்புமிகு உறுப்
பினர் அவர்கள் அடிப்படையில் ஒன்று தான் என்று சொன்னார்
கள். அடிப்படையில் எல்லாமே ஒன்று தான்.

திரு. மா சின்னராசு: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள்
அளித்த பதிலில் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் பெறப்
பட்ட தகவலின் அடிப்படையில் கிட்டத்தட்ட 99 ஆயிரம் சிறு
விவசாயிகள் தமிழகத்தில் இருப்பதாக தெரிவித்தார்கள். ஆனால்
மின் துறை வழங்கியிருக்கிற சலுகை 72,219 பேருக்குத்தான்
வழங்கப்பட்டு இருக்கிறது என்று அறிவித்தார்கள். ஆகவே,
இந்த வித்தியாசத்திற்குக் காரணம் இந்த சிறு விவசாயிகள் வரு
வாய்த் துறையிடமிருந்து பெற வேண்டிய அத்தாட்சிகள் உரிய
காலத்தில் பெற முடியாதது தான் என்பது அடிப்படை காரண
மாக இருக்கிறது. ஆகவே அந்த நிலையில் அவர்கள் மனு செய்து
இருக்கிறார்கள். வருவாய் துறையிடமிருந்து எங்களுக்கு உத்திரவு
கிடைக்கவில்லை என்று தெரிவித்தார்களானால் அவர்களுக்கு
கால அவகாசம் கொடுத்து அது வரையில் மின் துண்டிப்பு
இல்லாமல் பார்த்துக்கொள்வதற்கு மின்வாரியம் அறிவுறுத்தப்
படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மின்துண்டிப்பு இல்லாமல் பார்த்துக்
கொள்ளுவது இயலாது. ஆனால் தலைமைச் செயலாளர் அவர்கள்
மூலமாக தெரிவித்து விரைவில் சான்றிதழ்கள் வழங்குவதற்கான
நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## (ஆ) தொட்டியம் தொகுதி மேட்டுப் பாளையத்திலுள்ள மேல் நிலைப்பள்ளியில் பொறியியல் கட்டடம் கட்டுதல்

**திரு ரா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, ''தொட்டியம் தொகுதியிலுள்ள மேட்டுப்பாளையம் மேல்நிலைப் பள்ளியில் விஞ்ஞான அறிவியல் கூடம் கட்டும் பணி பல ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு இன்னமும் முடிக்கப் படாமையால் அக்கட்டிடம் இடிந்துவிழும் நிலையிலுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்:

(முற்பகல் 11-20)

**மாண்புமிகு திரு.செ. அரங்கநாயகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்

அறிக்கை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தொட்டியம் தொகுதி மேட்டுப் பாளையம் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு பொறி யியல் கட்டிடம் கட்டும் பணி 1962–63-ல் திருச்சிராப்பள்ளி, நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறை கோட்டப் பொறி யாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்கட்டிடமானது 6 அடி உயரம் (Lintel level) வரை கட்டப்பட்டு முடிவுறாத நிலையில் நிறுத்தப்பட்டது. அக்கட்டிடத்தைக் கட்டும் வேலையை ஏற்றுக் கொண்ட ஒப்பந்தக்காரர்கள் கட்டிடத்தை கட்டி முடிக்க தீவிரமாக முயற்சி எடுக்காததால், கட்டுமானப் பணி நிறுத்தப் பட்டு விட்டது. பாதியிலேயே நின்றுபோன சிதிலமடைந்த நிலையிலிருந்த அக்கட்டிடத்தை விரைவில் கட்டி முடித்து அப் பள்ளிக்குப் பயன்படுத்தும் நோக்குடன் (1980–81-ஆம் ஆண்டின் கட்டுமானப் பொருள் விலைப்பட்டியலின்படி) ரூ. 98,000 செல வினத்திற்கு ஒப்புதல் அளித்து இப்பணி நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டது.

2. கட்டுமானப்பொருள்களின் விலை மற்றும் கட்டிடத் தொழிலாளர்களின் கூலி ஆகியவை அதிகரித்து ஒப்பளிக்கப் பட்ட ரூ. 98,000-ல் அக்கட்டடத்தைக் கட்ட இயலாமற் போய்விட்டதால் 1983–84-ம் ஆண்டிற்குரிய விலைப்பட்டியலின் படி (கட்டிடத்தை அடித்தளம் முதற்கொண்டு புதுப்பணியாகத் தொடங்கும் பொருட்டு) ரூ. 1.80 இலட்சத்திற்கான மதிப்பீடு ஒன்று நெடுஞ்சாலை மற்றும் ஊரகப் பணித்துறையில் தயாரிக் கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. அந்த மதிப்பீட்டிற்கு அரசின் ஏற்பளிப்புகோரி 14-9-1984 அன்று பள்ளிக்கல்வி இயக்குநர் எழுதினார், தற்போது உள்ள அஸ்தி வாரம் ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கு முன் போடப்பட்டது அதுவும் அஸ்பெஸ்டாஸ் கூரைவேய்ந்த கட்டிடத்துக்கு என்று போடப்பட்டது. அந்த அஸ்திவாரம் சிமென்ட் கான்கிரீட் கூரைக்



கட்டிடத்தைத் தாங்குமா? என்ற ஐயப்பாட்டை நிதித்துறை எழுப்பியதால் இது குறித்து தகுந்த அதிகாரிகளின் நேரடி ஆய்வுக்குப்பின் அறிக்கை அனுப்புமாறு நெடுஞ்சாலை ஊரகப் பணித்துறைத் தலைமைப் பொறியாளருக்கு 11-1-1985 அன்று தெரிவிக்கப்பட்டது. அதன்படியல் தலைமைப் பொறியாளர் அவர்கள் பழைய அஸ்திவாரம் சிமெண்ட் கான்கிரீட்டாலான மேற்கூரையைத் தாங்கும் வலுவற்றது என்றும், ஆகவே பள்ளி வளாகத்திற்குள்ளேயே மற்றொரு இடத்தைத் தெரிவு செய்து புதிய அஸ்திவாரத்துடன் கட்டிடம் கட்டுவதே உசிதம் என்றும் அதற்கான புதிய மதிப்பீட்டை விரைவில் தயாரித்து அனுப்பு வதாகவும் தெரிவித்துள்ளார், புதிய மதிப்பீடு வந்ததும் அதற்கு ஏற்பளித்து கட்டட வேலையை உடனடியாகத் தொடங்கி. விரைவில் முடிக்க அரசு உத்தரவிடும்.

**திரு. ரா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கை என்பது 1963–64- லிருந்து அனுப்பிக் கொண்டே இருக்கிறார்கள். 1963–64-லே காங்கிரஸ் அரசாங்கம் நடந்தது. அப்போதே எஸ்டிமேட் போட்டாகிவிட்டது. அடுத்து தி.மு.க. அரசாங்கம் 1967-லிருந்து 1980 வரைக்கும், இப்போது 1980-லிருந்து (குறுக்கீடு)......

**மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவல்களை எல்லாம் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள், அவை தேவை இல்லாத தகவல்களாக இருக்கின்றன. கேள்வியை மட்டும் கேட்கட்டும், அதைவிட்டுவிட்டு, 1980 வரை தி.மு.க. அரசாங்கம் நடந்து கொண்டிருந்தது என்கிறார்.

**திரு. ரா. பெரியசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, நான் சொல்வது, காங்கிரஸ் அரசாங்கம், 1962–63-லே எஸ்டிமேட் போட்டது. தி.மு.க. அரசாங்கம் 1967-க்கு பின்னாலே வந்தது, அமைச்சரவர்கள், நான் தவறாகச் சொல்லி விட்டேன் என்று சொன்னார்கள். 1977-லே புரட்சித் தலைவர் ஆட்சியிலே நானும் சட்டமன்ற உறுப்பினராக இங்கு இருந்திருக் கிறேன். அது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அதற்குப் பிறகு 1977-லிருந்து 1985-ஆம் ஆண்டு, இப்போது வரை புரட்சித் தலைவர் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. நான் சொல்வது, இரண்டு பீரியட் முடிந்து விட்டது, மூன்றாவது பீரியட் ஆக இந்த ஆட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக, புரட்சித் தலைவர் ஆட்சி நடக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விளக்கம் சொல்ல வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ரா. பெரியசாமி:** நான் தொட்டியம் சட்டமன்ற உறுப் பினராக இருக்கும்போது, 1981–82-ல் கவன ஈர்ப்புத் தீர் மானமாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இதே

கல்வி அமைச்சர் அவர்கள் தான் அப்போதும் இருந்தார்கள். 1983–84-லேயும் கவன ஈர்ப்புத் தீர்மானமாக, அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். இப்போது 1985-வது வருஷத்திலே கவன ஈர்ப்புத்தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். 1962-லே தொடங்கியது இதுவரைக்கும் நடக்க வில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ரா. பெரியசாமி: உலகப் பிரசித்திப் பெற்ற கட்டிடம் தாஜ்மஹால் கட்டுவதற்கே 17 வருடம் தான் ஆகியது. இது விஞ்ஞான அறிவியல் கூடம், இதைக் கட்டுவதற்கு இத்தனை வருஷம் தேவைப்படுகிறதா? காங்கிரஸ் அரசாங்கம் போய், தி.மு.க. அரசாங்கம் போய், அண்ணா தி.மு.க. அரசு ஆண்டு கொண்டு இருக்கிறது 1977-லிருந்து இன்னும் எத்தனை அரசாங்கம் வந்து கட்டவேண்டும்? அடுத்த அரசாங்கம் வந்தா அதனுடைய எஸ்டிமேட் என்ன என்றால், முதலிலே 40 ஆயி ரத்திற்கு எஸ்டிமேட் போட்டு, அடுத்தாற்போல் அது 1 லட்சம் அளவிற்கு வந்து எஸ்டிமேட் போட்டு, இன்னமும் எஸ்டிமேட் போட்டுக் கொண்டே இருந்தால் என்றைக்குக் கட்டி முடிப்பது? இந்த வருடத்திலேயா து கட்டி முடிக்க முடியுமா? நிச்சயமாக முடித்துத் தரவேண்டும். பல கட்டிடங்கள் புரட்சித் தலைவர் ஆட்சியிலே வந்துள்ளன. மேட்டுப்பாளையத்திலே 8 கட்டிடங் கள் வரை 1 இலட்சத்திலே கட்டி முடித்துவிட்டார்கள். இந்த விஞ்ஞான அறிவியல் கூடம் கட்டி முடிக்க இவ்வளவு வருடம் தேவையா? அமைச்சர் அவர்கள் நிச்சயமாக இதைக் கவனத்தி லே எடுத்துக் கொண்டு, இந்த 1985-வது வருடத்திலே கட்டி முடிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கட்டி முடிக்க முடியுமா, முடியாதா என்பதையும் கேட்க ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 1962–63-லே கட்டிடம் கட்டும் பணி கோட்டப் பொறியாளரிடம் ஒப்படைக்கப்பட்டு, 1967 வரைக் கும் முடிவு அடையவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். அதற்குப் பிறகு, 1980–81-வது ஆண்டு, கட்டுமானப் பொருள் விலைப் பட்டியலின்படி, 98 ஆயிரம் செலவினமாக ஒப்புதல் அளிக்கப் பட்டிருக்கிறது. பிறகு, இறுதியாக அஸ்திவாரம். சிமெண்ட் கான்கிரீட் கட்டிடத்தை தாங்குமா என்ற ஐயப்பாட்டை நிதித் துறை எழுப்பிய காரணத்தால், தலைமைபொறியாளர் சிமெண்ட் கான்கிரீட்டாலான மேற்கூரையைத் தாங்க வலுவற்றது என்றும் பள்ளி வளாகத்திற்குள்ளேயே வேறு ஒரு இடத்தை தேர்வு செய்து, புதிய அஸ்திவாரத்துடன் கட்டிடம் கட்டுவது உசிதம் என்றும் சொல்லி, விரைவில் புதிய மதிப்பீட்டைத் தயாரித்து





அனுப்புவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அது வந்தவுடன் உடனடியாக வேலை துவங்கும். ஆகவே, பழைய கட்டிடம் அதை வைத்து முடிக்கின்ற நிலையில் இல்லை. வரப் போவது புதிய கட்டிடம்.

திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1983–84-இல் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த பொழுது ஆறடி உயரம் இருந்த சுவரைக் கட்டி இடித்து விட்டார்கள், பேஸ்மெண்ட் வரையில் நன்றாக இருந்தது. அலதவிட்டுவிட்டு வேறே கட்டுகிறேன் என்று சொன்னால் எஸ்டிமேட் போட்டு வருவது என்றால் அதிக காலம் ஆகும், இதுவே 22, 23 வருடங்களாகிவிட்டது. இந்த நடப்பாண்டி லேயே கல்வியமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி இந்த விஞ்ஞான அறிவியல் கூடத்தைக் கட்டுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நல்ல கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்கிற நோக்கம் இருக்கின்ற காரணத்தினாலேதான் இதற்கு கொஞ்சநாள் ஆகிறது. ஆகவே, புதிதாக வருகிற மதிப்பீட்டை நாம் பார்த்து, அனுமதி தந்து, நல்லயிடத்தில் நல்ல கட்டிடமாக அந்தப் பள்ளிக்கு வரும் என்பதை உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொது கணக்குக் குழு

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்;

(அ) 1979–80, 1980-81 மற்றும் 1981–82-ஆம் ஆண்டு களுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டு களுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை.

(ஆ) 1975-76 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1980-81) ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரையின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை.

(இ) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீது பொதுக் கணக்கு குழு (1977-78) அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பத்தாவது அறிக்கையில் (ஏழாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்கு குழுவின் மூன்றாவது அறிக்கை.

(திரு.என்.எஸ்.வி.சித்தன்) [1985 ஜூலை 17

(ஈ) 1972–73-ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையின் 24 ஆம் பத்து மீதான குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஆறாவது பேரவையில்) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்கு குழுவின் நான்காவது அறிக்கை,

(உ) தமிழ்நாடு அரசின் 1962-63, 1964-65, 1969-70, 1970-71 மற்றும் 1971-72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்த பொதுக் கணக்கு குழு (1980-81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவது அறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய கல்வித்துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்கு குழுவின் ஐந்தாவது அறிக்கை.

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

திரு பி. முசிறிபுத்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன்:

(அ) 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த பதினாறாவது அறிக்கையில் (1980-82) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின் வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980–81) ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை.

(இ) 1972-73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980-82) அளித்த பதினொன் றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய பொது நிறு வனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை.

(ஈ) 1961-62 முதல் 1964-65 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1973-74) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை.



1985 ஜூலை 17] (திரு.பி.முசிறிபுத்தன்)

(உ) 1965–66-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரண்டாவது அறிக்கை.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) பழைய இரும்பு வணிகர்கள் பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் முறைப்படுத்துதல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல் சட்ட முன்வடிவு 1985

மாண்புமிகு திரு.ப.உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்;

"தமிழ்நாடு 1985-ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள் பழைய இரும்புத் துணுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை டிங்கர் கடை உரிமை யாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

(முற்பகல் 11–30)

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக் கக் கூடிய இந்தச் சட்ட முன்வடிவு வரவேற்கத்தகுந்தது அல்ல. குறிப்பாக, என்னுடைய சேப்பாக்கம் தொகுதியில் வாழ்கின்ற ஆயிரக்கணக்கான இரும்பு வியாபாரிகள் சார்பாக அவர்களுடைய உணர்வுகளையும் நிலையையும், இங்கே அவர்களுக்கும் சேர்த்து பிரதிநிதி என்ற முறையில் பிரதிபலிக்கின்ற உரிமை எனக் கிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 'அப்போஸ்' தானே செய்கிறீர்கள். அதை மட்டும் சொல்லுங்கள். மற்றதை எல்லாம் கன்சிடரேஷன் ஸ்டேஜில் சொல்லுங்கள்;

திரு. அ. ரகுமான்கான் : கன்சிடரேஷன் ஸ்டேஜில் சொல் வதைப் போல, பாலிசியைப் பற்றிச் சொல்லுகின்ற உரிமை இப்பொழுதும் உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒன்று, சட்டத் திற்கு முரணாக உள்ளது என்று சொல்லுங்கள்; இரண்டாவது, அரசியல் சட்டத்திற்கு முரணாக உள்ளது என்று சொல்லுங்கள். அது தான் நடைமுறை. ஒரே வரியில் சொல்வது தான்

1985 ஜூலை 17] (பேரவைத் துணைத் தலைவர்)

பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் நாம் பார்ப்பது. I Oppose the Bill —என்று சுருக்கமாகச் சொல்லுங்கள். கன்சிடரேஷன் ஸ்டேஜில் எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள்,

திரு. அ. ரகுமான்கான் : இங்கே கொண்டு வரவிருக்கிற இந்தச் சட்டமுன்வடிவிலே ஒரு முக்கிய திய அம்சம் என்ன வென்றால், ஏற்கனவே கடைகளை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் புதிதாக லைசென்ஸ் பெற வேண்டுமென்று சொல்வதன் மூலம், இன்னும் சொல்ல வேண்டுமென்றால், Traffic Police, Health Officer, Licensing Authority என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது, அவர்களிடத்திலே இந்தக் கடைக்காரர்கள் எல்லாம் இனி, புதிதாக, லைசன்ஸ் பெற்றாக வேண்டும், அப்படிப் பெறவில்லையென்றால், அவர்கள் கடை நடத்த முடியாது என்ற புதிய நெருக்கடி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த நெருக்கடியை ஏற்படுத்தியிருப்பது சரிதானா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன், ஏனென்றால், இந்தச் சட்டப் பிரிவால் மிகப் பெரிய பாதகம் ஏற்படுகிறது.

உதாரணமாகச் சொன்னால், சாதாரணமாக அவர்கள் தப்பாக அக்கவுண்டைக் கொடுத்து விட்டார்கள், அல்லது அங்கே வேலை செய்கின்ற ஒர்க்கர்ஸ் காண்டக்ட் அண்ட் கேரக்டர் பற்றி ஒரு மெய்டென்ஸ் ரிஜிஸ்தர் இல்லையென்றால், போலீஸ் உள்ளே நுழைந்து, 6 மாதம் சிறைத்தண்டனை வாங்கிக் கொடுக்கக் கூடிய அபாயம் இருக்கிறது, அப்-டு-டேட் அக்கவுண்ட் வைக்க வேண்டுமென்று சொல்கிறார்கள், தம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. முசிறிப்புத்தன் போன்றவர்கள் இந்த வியாபாரத்திலே அந்த நாட்களில் ரொம்பவும் ஈடுபட்டவர்கள்—என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர் தான்—அவர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்; அப்-டு-டேட் அக்கவுண்டை வைக்கவே முடியாது. உதாரணத்திற்கு ஒரு இடத்திலே போய் ஏலம் எடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஏலம் எடுத்துக்கொண்டு வந்து அதை.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்ட்ரடொக்ஷன் ஸ்டேஜில் அப்போஸ் பண்ணுகிறேன் என்று மட்டும் சொல்லுங்கள் மற்றவற்றை கன்சிடரேஷன் ஸ்டேஜில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இது எப்படி அரசியல் சட்டத்திற்கு விரோதமாக இருக்கிறது, அல்லது ஒரு சட்டத்திற்கு முரணானது என்பதைப் பற்றி மட்டும்தானே அப்போஸ் பண்ணும் போது சொல்ல முடியும். பாலிசி பூராவும் இப்பொழுது பேசுகிறீர்கள். அது முறை அல்ல. அப்போஸ் பண்ணும்போது சுருக்கமாகத்தான் பேச வேண்டும். சீக்கிரமாகப் பேசி முடியுங்கள். மற்றவற்றை கன்சிடரேஷன் ஸ்டேஜில் சொல்லுங்கள்.



1985 ஜூலை 17]

திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, காவல்துறையைச் சேர்ந்தவர்கள் உள்ளே நுழைந்து, இரும்பு வியாபாரிகளைக் கொடுமைப்படுத்துவதற்கு** அதைப் போலவே, டிராபிக் போலீஸ்** கடையிலே இருப்பவர்களைச் சிறையிலே தள்ளுவதற்கான அபாயகரமான சட்டம், நாம் முறைப்படுத்துகிறோம் சரிபடுத்துகிறோம் என்று சொல்லிக் கொண்டே, இரும்பு வியாபாரிகளுடைய உரிமைகளை டிங்கர்களுடைய உரிமைகளை, ஆட்டோமொபைல் நடத்துபவர்களுடைய உரிமைகளை பறிக்கின்ற* சட்டமாக இருக்கிறது *இதை நாங்கள் எதிர்ப்பதற்கு மிக முக்கியமான காரணம், ஏற்கனவே இருக்கக்கூடிய சட்டத்தினுடைய முறையிலேயே, ஒழுங்குபடுத்த முடியும், நடைமுறைப்படுத்த முடியும், உடனே ஸ்டோலன் ப்ராப்பர்ட்டி, திருடுபவர்களிடமிருந்து வாங்கப்படுகிறது, விற்கப்படுகிறது என்று சொன்னார்கள், ஏற்கனவே உள்ள ஐ. பி. சி. சட்டத்திலே, ஸ்டோலன் ப்ராப்பர்ட்டி வாங்கினால் நடவடிக்கை எடுக்க வழி இல்லையா அதைத் தடுப்பதற்கு ஒரு தனிச் சட்டம் என்று சொல்லிக் கொண்டு, போலீஸ் அதிகாரத்தை அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும்** சட்டமாக இருக்கிறது. ஏற்கனவே இருக்கிற அமைப்பு முறையே போதுமானது. அதை வைத்துக் கொண்டு சீர்படுத்த முடியும் ஆகவே இந்தச் சட்டம்**

[illegible] வியாபாரிகள் தொல்லைப்படுகின்ற அளவுக்கு இருக்கிற [illegible] என் தொகுதியைச் சேர்த்து தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இரும்பு வியாபாரிகளின் சார்பாகச் நடுத்தர வியாபாரிகள் சார்பாகக் கடுமையாக எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : துணைத் தலைவர் அவர்களே,** காவல் துறை அதிகாரிகளைப் பற்றி ** பேசுவது முறையும் அல்ல. சரியும் அல்ல என்பதை நான் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். சில திருடர்கள் பஸ்களையும் கார்களையும் உடைத்துக் கொண்டு கொள்ளை அடிப்பதைத் தடுக்கிற சட்டத்தை, ஏன் இப்படி யாருக்கும் பரிந்து எதிர்த்துப் பேசுகிறார் என்பது தெரியவில்லை.

திரு. அ. ரகுமான்கான் : **

திரு. இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே பயன்படுத்தப் பெற்ற வார்த்தைகள் அவைக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வார்த்தைகள் என்று நான் கருதுகிறேன்.

** ** **

இப்படிப்பட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்படாமல், சபையின் மரபு காப்பாற்றப்பட வேண்டும் என்று நான் கருதுகிறேன் (குறுக்கீடுகள்)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1984 ஜூலை 17

மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கருத்துக்களை எடுத்து வைக்கலாம், பேசலாம், **என்று சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும் போது உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லும் போதும் மரியாதை கொடுத்து தான் சொல்ல வேண்டும், அமைச்சர்களைப் பற்றிச் சொல்லும் போதும் மரியாதை கொடுத்துதான் சொல்ல வேண்டும்' அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர், மாண்புமிகு அமைச்சர் என்று சொல்ல வேண்டும்.

ஆகவே, முறை **தவறிய இடத்திலிருந்து ஆரம்பித்து இதுவரையிலுள்ள அவை நடவடிக்கைக் குறிப்புப் பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுவது நல்லது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையின் மரபுகளுக்கு மாறாக பேசுவது நல்லதல்ல, அவற்றை எல்லாம் 'எக்ஸ்பஞ்ச்' செய்கிறேன்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு பழைய இரும்பு வணிகர்கள், பழைய இரும்புத் தூளுக்கு வியாபாரிகள், மோட்டார் வண்டி வகைகள் பழுது பார்க்கும் பட்டறை, டிங்கர் கடை உரிமையாளர்கள் (முறைப்படுத்தல், கட்டுப்பாடு, உரிமம் வழங்கல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவை தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) தீ அணைப்பு பணிச் சட்ட முன்வடிவு, 1985

மாண்புமிகு திரு. செ. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1985 ஆம் ஆண்டு தீ அணைப்புப் பணிச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெறறது.



1985 ஜூலை 17]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11-40)

(இ) பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனிவகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு 1985.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவைச்சட்ட முன்வடிவு எண். 43/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் வெளியேற்றப்படுவதினின்றும் பாதுகாத்தல் சட்டம் தமிழ்நாடு சட்டம் 26/83-ன் மூலம் 30.6.83 அன்று முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கும் அதற்கு முந்தைய விளைச்சல் ஆண்டுக்கும் [illegible] குத்தகைத் தொகை நிலுவைகளைச் செலுத்[illegible] வெளியேற்றப்படுவதினின்றும் பயிரிடு[illegible] 15.1.84 வரை பாதுகாப்பு அளிக்கப்பட்[illegible] குத்தகைதாரர்களுக்கு 1981, 1983, 1984 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட வறட்சி மற்றும் வெள்ளம் காரணத்தால் நிலச்சொந்தக்காரர்களுக்கு அல்லது பொதுப் பொறுப்பு சமூகங்களுக்கு பயிரிடு குத்தகைதாரர்கள் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை [illegible]மான அளவுக்கு நிலுவையாகச் சேர்ந்து விட்டது.

[illegible] நிலுவைத் தொகைகளை ஒட்டுமொத்தமாகச் செலுத்த பயிரிடு குத்தகைதாரர்களுக்கு இயலாது. எனவே [illegible] முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கும், [illegible] அன்றுடன் [illegible] ஆண்டுக்கும் இந்த மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்படாத பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்களுக்கு [illegible] விளைச்சல் குத்தகைத் தொகையை செலுத்துவதிலிருந்து [illegible] அளிக்க அரசு கருதி தமிழ்நாடு குத்தகைதாரர்கள் [illegible] சட்டம் 1984, தமிழ்நாடு சட்டம் 29/84-ஐ [illegible] இந்தச் சட்டத்தின் கீழ் 5 (1) பிரிவின்படி [illegible] பாக்கிகளை வட்டியில்லாமல் 30-6-84 [illegible] குத்தகைப் [illegible] தவணைகளில் இரண்டு ஆண்டு [illegible] 4 சம [illegible] வேண்டும் என்று வழிவகை செய்யப்பட்டது [illegible] செலுத்த [illegible] முன்வடிவுக்குக் குடியரசுத் தலைவர் இசைவு [illegible] சட்ட [illegible] அளிக்கப்பட்டது. ஆகவே தமிழ்நாடு அரசு [illegible] 6.84 அன்றுதான் [illegible] வெளியிடப்பட்டதால் பயிரிடு [illegible] 29-6-84 அன்று

* 1985-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

குத்தகைதாரர்கள் முதல் தவணை செலுத்த வரையறுக்கப்
பட்ட காலவரம்பு போதுமானதாக இல்லாததால் குத்தகை
நிலுவையைச் செலுத்தும் தவணைகளை மாற்றி அமைக்க
வேண்டியது அவசியம் என்று கருதப்பட்டது.

ஆகவே மேற்கூறிய தவணைகளில் காலங்களை 31-12-84
முதல் 4 சம அரையாண்டுத் தவணைகளாக மாற்றியமைக்க
முடிவு எடுக்கப்பட்டது. முதல் தவணை செலுத்த வேண்டிய
நாள் 31-12-84. காலம் கடந்து விட்டது. ஆகவே தமிழ்நாடு
பயிரிடும் குத்தகைதாரர்கள் தனிச் சட்டம் 1984 தமிழ்நாடு
சட்டம் 29/84-இல் கூறப்பட்டுள்ள குத்தகைப் பாக்கியை 4 சம
அரையாண்டுத் தவணைகளை கீழ்வருமாறு மாற்றியமைக்க
அரசு கருதியுள்ளது. முதல் தவணை 30-9-85 அன்று அல்லது
அதற்கு முன்னால்; இரண்டாவது தவணை 31-3-86 அன்று
அல்லது அதற்கு முன்னால் மூன்றாவது தவணை 30-9-86
அன்று அல்லது அதற்கு முன்னால் நான்காவது தவணை 31-3-87
அன்று அல்லது அதற்கு முன்னால் என்று நாம் போட்டிருந்
தாலும் நாம் அதிலே இருந்து 30.9.85 அன்று குறிப்பிடுகிற
காலம் போதுமான அளவுக்கு இல்லாததாலும் குறுவைப் பயிரின்
மூலம் வருகின்ற வருமானத்தை வைத்து அவர்களால் செலுத்த
இயலாது என்று கூறிய காரணத்தாலும் 15.11.85, 15.11.86
என்ற அளவுக்கு திருத்தம் செய்வதற்கும் கூட அரசு ஆயத்த
மாக இருக்கின்றது என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்
கொள்கிறேன்.

30.6.83 அன்று முடிவடையும் விளைச்சல் ஆண்டுக்கும்,
முந்தைய விளைச்சல் ஆண்டோடு யாதொன்றும் செலுத்த
வேண்டிய குத்தகைத் தொகையில் 30-6-84, 31-12-84 மற்றும்
30-6-85 உள்பட முடிவடைந்த மூன்று தவணைகளைச் செலுத்
தாமைக்காக 1-7-85 அன்று அல்லது அதற்கு பின்னரும் செய்யக்
கருதியுள்ள உத்தேசத் திருத்தச் சட்டம் வெளியிடப்படும்
நாளுக்கு முன்னதாகவும் நிலத்திலேயிருந்து வெளியேற்றப்பட்ட
குத்தகைதாரர்களுக்கு சுவாதீனத்தை மீட்டுக் கொடுக்கவும்
கருதப்பட்டுள்ளது. இந்தச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன
நோக்கங்களுக்காகக் கொண்டு வரப்படுகின்றது. எனவே
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை
ஏற்று நிறைவேற்றித் தருமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. எம். செல்லமுத்து மாண்புமிகுபேரவைத் துணைத்தலைவர்
அவர்களே. நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்
கக்கூடிய 1985 ஆம் ஆண்டுக்கான பயிரிடும் குத்தகைதாரர்கள்
திருத்தச் சட்டத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பில் நான் வரவேற்கிறேன். இந்தக் குத்தகைச் சட்டத்தைக்
கொண்டு வருகிறபோது அவர்களுடைய பழைய பாக்கிகளை
நான்கு தவணைகளில் கொடுக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்கித்



தந்திருக்கிறார்கள். இப்படி உருவாக்கிக் கொடுப்பதால் மட்டும்
அந்தக் குத்தகை விவசாயிகளுடைய பிரச்சினையை நாம் தீர்த்து
விட முடியாது. பல்வேறு காலங்களில் ஏற்பட்ட இயற்கை
பாதிப்பின் காரணத்தால் குத்தகை விவசாயிகள் குத்தகை
பாக்கியைச் செலுத்த முடியாமல் அவை தேங்கி இருக்கின்றன.
அவர்கள் திரும்பவும் விவசாயம் செய்து அந்த பழைய
பாக்கியைத்தான் செலுத்த முடிகிறதே தவிர உள்ளபடியே அவர்
களால் அரசு கொடுக்கக்கூடிய சலுகைகளைப் பெற முடியாத
சூழ்நிலைதான் இருக்கின்றது. எனவே தான் நான் சொல்கி
றேன். இந்தக் குத்தகை பாக்கிகளை நீட்டிக்கொண்டே
போகாமல் உடனடியாக ரத்து செய்வதற்கான நடவடிக்கையை
எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான நடவடிக்கை
எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்
கொள்கிறேன். அதே போல இந்த குத்தகை நிலங்களைப் பற்றி
இன்று தமிழகத்தில் மிகப்பெரிய சர்ச்சை நடந்து கொண்டிருக்
கிறது. நம்முடைய தமிழக அரசினுடைய அறநிலையத்துறை
அமைச்சர் அவர்கள் இந்த குத்தகை நிலங்களையெல்லாம் வைத்
திருக்கும் குத்தகை விவசாயிகளை எல்லாம் அந்த நிலத்தை
விட்டு வெளியேற்றக்கூடிய முறையிலே சட்டத் திருத்தம்
கொண்டு வரப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதனால்
குத்தகை விவசாயிகள் மத்தியிலே மிகப் பெரிய கொந்தளிப்பு
ஏற்பட்டிருக்கிறது.

குத்தகை விவசாயிகள் பாதிக்கக்கூடிய முறையிலே, அவர்
களுக்கு நீண்ட காலமாக இருந்திருக்கக்கூடிய உரிமைகள் பறிக்
கக்கூடிய முறையிலே உங்களுடைய அமைச்சரவையின் அறிவிப்பு
இருக்கிறது. ஆகவே அந்த குத்தகை விவசாயிகளுக்கு அவர்
களுடைய நிலத்தை அவர்களுக்கே சொந்தம் ஆக்குகின்ற
முறையில் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்,
அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குத்தகை
விவசாயிகள் ஏழை விவசாயிகள் ஆகவே அந்த புதிய குத்தகை
சட்டத்தினால் அவர்கள் பாதிக்கக்கூடிய முறையில் இருக்கிறார்
கள் ஆகவே அந்த நிலைமையை மாற்ற அவர்களை அந்த
நிலத்திற்கு சொந்தமாக்கி, அவர்களை பாதுகாக்கின்ற வகையில்
ஒரு சட்டத் திருத்தத்தை கொண்டு வர வேண்டுமென்று கேட்டு
இந்த சட்டத்திருத்தத்தை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்

திரு. வை. பாலசந்திரன் மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, 1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும்
குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட
முன் வடிவின்மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
1984-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள்

(தனி வகை முறைகள்) சட்டத்தில் இருந்து கொண்டிருக்கும் செக்ஷன் 5-ல் (i) முதல் (v) வரை நீக்கப்பட்டு, புதியதாக சில பிரிவுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குத்தகைபாக்கி வைத்திருப்பவர்கள் குத்தகை பாக்கியை கட்டுவதற்கான கால நீட்டிப்புக் கொடுத்து இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிர்க்கதியானவாகளுக்கு கால நீட்டிப்புக் கொடுகக வேண்டும் அதை நான் ஏற்றுக் கொள்கிறேன்.

அதனாலேதான், இராமாயணத்திலே கூட இராவணன் நிராலயுதபாணியாக நிர்க்கதியாக நின்றுகொண்டிருந்தபோது, இராமன் அவனைப் பார்த்து இன்று போய் நாளை வா என்று சொல்லி கால நீட்டிப்பு கொடுத்ததாகச் செய்திகள்—புராணச் சம்பவங்கள் சொல்லுகின்றன. ஆனால் வேண்டும் என்றே குத்தகை பாக்கியைக் கொடுக்கத் தவறியவர்களாக இருந்தால் என்ன செய்வது என்பது தீவிர சிந்தனைக்குரியது. தூங்குபவர்களை போல நடிப்பவர்களை எழுப்புவது எவ்வளவு கஷ்டமோ அந்த அளவு கடினமானது வேண்டுமென்றே குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள் பாக்கியை கட்ட வைப்பது அதுபோன்றது தான் அரசின் இந்த நடவடிக்கை என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டவர் மீள மாட்டார் என்று எல்லோருக்கும் தெரியும். அது போலத்தான் ஆண்டாண்டு தோறும் அவசர அவசரமாக இத்தகு சட்டங்களை கொண்டு வந்து நிறைவேற்றினாலும் சலுகைகள் கொடுத்தாலும் குத்தகை பாக்கி வராது என்பதை இந்த அரசு புரிந்து கொள்ள வேண்டும். ஆண்டுதோறும் இப்படிப்பட்ட சட்டங்கள் வரும். அதுவும் இப்படி அவசர அவசரமாக கொண்டு வந்து நிறைவேற்றப்படும். என்று குத்தகைபாக்கி வைத்திருப்பவர்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள் தரவேண்டும் என்று அவர்களில் யாராவது விரும்பினாலும் கூட சட்டம் வரும் சலுகை கிடைக்கும் என்று நம்பி அவர்கள் தர மாட்டார்கள். ஏனென்றால் அரசாங்கம் இது போன்ற சட்டம் கொண்டுவரும், அந்தச் சட்டத்தினால் நமக்கு அதில் சலுகை கிடைக்கும் என்று அவர்களுக்கு தெரியும்.

ஆனால் இப்படிப்பட்ட சட்டங்களின் மூலமாக அதிகமாக பாதிக்கப்படுவது திருக்கோயில்கள்தான். திருக்கோயில்களில் பூஜை நடத்தப்படுவதும், திருவிளக்குகள் ஏற்றப்படுவதும் கடந்த கால நிகழ்ச்சிகளாக ஆகிவிடுமோ என்று என்னைப் போன்றவர்கள் அஞ்சுகிறார்கள். ஆகவே அறநிலையத்துறை மானியத்தின் மீது பேசுகையில் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களால் அறிவிப்பு ஒன்று கொடுக்கப்பட்டது. அதில் கல்டிவேட்டிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட்டில் ஒரு திருத்தம் கொண்டு வந்து, திருக்கோயில்களுக்கு சொந்தமான நிலங்களுக்கு எல்லாம் இதிலிருந்து விதிவிலக்கு கொடுக்கப்படும் என்ற முறையில் ஒரு அறிவிப்பைச் செய்தார்கள்.



அந்தச் சட்டத்திருத்தத்தை விரைவில் கொண்டு வந்து அதைச் செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் திருக்கோயில்களை பாதுகாக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல இஸ்லாமிய சமய அறக்கட்டளைகளுடைய நிலங்களை விலைக்குக் கொடுப்பதற்கோ அல்லது லீஸ் கொடுப்பது போன்ற மாற்று ஏற்பாடுகள் செய்வதற்கோ சுலபமாக அனுமதி கொடுக்கின்ற சூழ்நிலை சட்டம் திருத்தத்தின் மூலத் ஏற்பட்டு விடுமோ என்ற சந்தேகம் இருந்து வருகிறது. இது பின்னாலே வருகின்ற யானைக்கு முன்னாலே கட்டியம் கூறுகின்ற மணி ஓசையாக இருக்குமோ என்று கருதுகிறேன். ஆகவே அப்படிப்பட்ட கருத்துக்களை இந்த அரசாங்கம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, உடனடியாக அறநிலையங்களுக்கு அவைகளின் நிலங்களுக்கு விதி விலக்கு கொடுக்கின்ற வகையில் சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும் என்று வலியுறுத்தி அமர்கிறேன்.

திரு. பொ உத்திராபதி மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பயிர் குத்தகைதாரர்கள், (தனி வகை முறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவின்மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை சொல்ல விழைகிறேன்.

இந்தச் சட்டத்தை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்று நான் பேச இருக்கிறேன். இந்தச் சட்டத்தைப் போல தொடர்ந்து பல சட்டங்களை இந்தச் சட்டமன்றத்தில் நாம் ஒவ்வொரு தடவையும் நீடித்துக் கொண்டே வருகிறோம். ஆனால் ஜனவரி மாதம் 15 ஆம் தேதியே இந்தச் சட்டம் காலாவதியாகி, மீண்டும் விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நமது நிதியமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

நான் கேட்டுக் கொள்வதெல்லாம் இந்த குத்தகை விவசாயிகள் நிலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு அவர்கள் நெல்லை அளக்கக்கூடாது என்று சொல்பவர்கள் அல்ல நாங்கள். சொல்லவும் மாட்டோம். ஆனால் இப்படி தொடர்ச்சியாக குத்தகை பாக்கியை செலுத்த முடியாமல் போனதற்கு என்ன காரணம்.

குறிப்பாக வேண்டுமென்றே கட்டக்கூடிய நிலை இருந்தாலும் கட்டாமல் இருக்கிறார்களா? அல்லது இயற்கை சீற்றத்தின் காரணமாக, குறிப்பாக தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டத்தில் சில இடங்களில் தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரம் தாலுக்கா, போன்ற இடங்களில் எல்லாம் வறட்சியால் பாதிக்கப்பட்டு, விவசாயம் செய்த அந்தப் பயிர் அப்படியே கருகிபோனதை. சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள். தாலுக்கா தாசில்தார்கள் போன்றவர்கள் பார்வையிட்டு. இவற்றையெல்லாம் கண்டு கிஸ்தியை தள்ளுபடி செய்திருக்கிறார்கள்.

(முற்பகல் 11–50)

ஆகவே அப்படிப்பட்ட காலங்களில் செய்ததை போல 1983 டிசம்பர் 21, 22 தேதிகளில் பெய்த மழையின் போது. அநேகமாக அன்றைக்கிருந்த அமைச்சர்கள் அனைவரும் முதலமைச்சர் உள்பட தஞ்சை மாவட்டத்தைப் பார்த்து விட்டு, சேதாரம் எவ்வளவு என்று இப்போது கணக்கிட முடியாது என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறி வித்தார்கள், அப்படிப்பட்ட நிலை இருந்தது. இப்போது கூட ஒரு கேள்விக்கு பதில் அளிக்கிறபோது சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபார்சு செய்தால் அரசு பரிசீலிக்குமென்று சொன்னார்கள், ஆனால் 1983–ம் ஆண்டு டிசம்பரில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட பகுதி களில் நிலச்சொந்தக்காரர்களுக்கு அவர்கள் கட்டக்கூடிய கிஸ்தி யை தள்ளுபடி செய்கிறபோது, மாவட்ட ஆட்சித்தலைவரால் ஒரு அறிக்கை அனுப்பப்பட்டு, சட்டமன்றத்திலே எந்த எந்த ஜில்லாக்களில், எந்தெந்த வட்டங்களில் முழுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்திலே ஒரு வெள்ளை அறிக்கை வைக்கப்பட்டது. அப்படி அரசு அங்கீகரித்த பிறகு இந்த குத்தகை விவசாயிகளுக்கு இப்படி காலத்தை நீடித்துக் கொண்டே போவது நிவாரணம் அளிப்பதாக இருக்காது.

ஆகவே நான் கேட்டுக் கொள்வது, வெள்ளத்தாலும் வறட்சியாலும் பாதிக்கப்பட்டு அரசின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது தசில்தார்கள் மூலமாக அந்தப் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு எப்படி கிஸ்தி மூலமாக நிவாரணம் அளிக்கப்படுகிறதோ, அந்த வகையிலே அந்தப் பகுதிகளில் குத்தகை விவசாயிகளுக்கு குத்தகை தள்ளுபடி செய்வதன் மூலமாகதான் அவர்களின் சுமைகளை நாம் குறைக்க முடியும். அப்போதுதான் விவசாயிகளை நாம் பாதுகாக்க முடியும். இப்படி தொடர்ச்சியாக ஒரு சட்டத்தை நீடித்துக்கொண்டு போகக் கூடிய நிலைமை வராது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல இந்தக் குத்தகை விவசாயிகளுக்காக நீண்ட காலமாக பல சட்டங்கள் வந்து அவை நிறைவேற்றமுடியாமல் போய்க் கொண்டிருக்கின்றன. இன்றைக்கிருக்கிற அண்ணா திராவிட முன்னேற்றக்கழக அரசு குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தை சொந்தமாக்க வேண்டுமென்று கொள்கை அளவிலே ஒப்புக்கொண்டிருக்கிறீர்கள். அப்படி ஒப்புக் கொண்டதற்குப் பிறகு, மூன்றாவது தடவையாக ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இங்கே பினாமியாக 1958-ம் ஆண்டிலிருந்து 1960–ம் ஆண்டு வரை மூன்றாண்டு காலத்தில், அன்றைக்கிருந்த ஆட்சியில் பினாமியாக நிலப் பிரபுக்கள் சட்டத்தையும் மக்களையும்



ஏமாற்றி எழுதி வைத்த நிலங்களை எடுப்பதற்கு சட்டத்தை இயற்றினால், மத்திய அரசால் திருப்பியனுப்பப்பட்டு கிடப்பிலே போய் கிடக்கிறது. மீண்டும் அப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வந்து பினாமியாக இருக்கிற நிலங்களை எடுத்து குத்தகை விவசாயிகள் நியாயமாக, நேரிடையாக உழுது சாகுபடி செய்கிறவர்களுக்கு நிலத்தை சொந்தமாக்குகிற அளவில் விரைவிலே செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல கோவில் மடம், போன்றவைகளுக்கு குத்தகை பாக்கி இருக்கிறது. ஆகவே நாங்கள் சட்டத்தைக் கொண்டு வந்து இந்த குத்தகை பாதுகாப்புச் சட்டத்திலிருந்து விவசாயி களுக்கு விதிவிலக்கு கொடுக்கப் போகிறோம் என்று அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்தொடர்ச்சியாக ஒரு ஆண்டுக்காலமாக சொல்லி வருகிறார்கள். இது தமிழகத்திலே நீண்ட காலமாக விவசாயிகள் போராடி, உயிர் தியாகம் செய்து, சிறைக்குச் சென்று தங்களுக்கு பாதுகாப்பாக கொண்டு வந்த சட்டத்திலே யிருந்து விதிவிலக்கு கொடுப்பது என்ற பெயரால் செய்வதால் தமிழக விவசாயிகள் மத்தியில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக் கிறது.

ஆகவே நான் கேட்டுக்கொள்வது, பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் கூட ஒன்றைச் சொல்லி இருக்கிறார்கள். குத்தகை விவசாயிகளுக்கு நிலங்கள் சொந்தமாக்கப்பட்டு அதனுடைய கிரய தொகையை வங்கிகளில் டெபாசிட்டாக போட்டு அதி லிருந்து வருகிற வட்டியிலிருந்து கோவில் நிர்வாகத்தை நடத் தலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். கேரளாவிலே அப்படி செய்திருக்கிறார்கள். நாங்கள் சொல்வது கோவில்கள், மடங் களை விட்டு விடுங்கள் என்ற கோணத்தில் சொல்லவில்லை இப்படி நியாயமாக குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்த மாக்கி அதிலிருந்து வரும் தொகையை 12 ஆண்டு காலம், 10 ஆண்டு காலமென்ற அளவில் வங்கிகளில் டெபாசிட்டாக வைத்து அந்த வட்டியை எடுத்து கோவில் நிர்வாகத்தை நடத்த லாம் என்ற நோக்கத்தோடு தான் தொடர்ச்சியாக நிலத்தை அவர்களுக்கு சொந்தமாக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

அந்த அடிப்படையிலே இன்றைக்கு 17–7–1985 அன்றுகூட கோவில் மடங்களின் நிலங்களில் நேரிடையாக விவசாயம் செய்கிற குத்தகை விவசாயிகள் இன்றைக்கு அண்ணா சதுக்கத் திற்கு அருகில் 1000–க்கு மேற்பட்டவர்கள் விவசாயிகள் அரசாங் கத்திற்கு தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்த வேண்டு மென்று உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார்கள்.

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூலை 17

அவர்கள் சார்பாக இருக்கக்கூடிய இந்தக் கோரிக்கை
மனுவை நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடத்திலே நான்
தற்போது கொடுக்க இருக்கிறேன். ஆகவே அரசு எதிர்காலத்
திலே இந்தக் குத்தகையை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்குத்
தள்ளுபடி செய்து, இந்த நிவாரணம் அளிப்பதற்கும் மீதி
இருக்கக்கூடிய குத்தகையை நிறுத்தி வைப்பதற்கும் நேரடியாக
விவசாயம் செய்பவர்களுக்கு, அந்த விவசாயிகளுக்கு நிலத்தைச்
சொந்தமாக்குவதற்கும், இந்தக் கோவில் அல்லது மடத்தினுடைய
நிலத்தை எடுப்போம் என்று சொல்லக்கூடிய அந்த வாதத்
திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, எதிர்காலத்தில் அப்படிப்
பட்டவாதங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் ஆவன செய்யவேண்டும் என்றுக் கேட்டு முடித்துக்
கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, கொண்டு வந்திருக்கிற சட்ட திருத்தத்
தினைப் பொறுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் பொதுவாக
வரவேற்று சிலபல கருத்துக்களை எடுத்துச் சொல்லி இருக்
கிறார்கள். ஆகவே குத்தகையை எடுப்பவர்கள் எல்லாம்
ஏழைகள், நிலங்களைக் கொடுத்தவர்கள் எல்லாம் பெரும்
பெரும் பணக்காரர்கள் என்ற முடிவுக்கு நாம் வந்துவிடக்
கூடாது. ஆகவே கொடுப்பவர்கள் அப்படிப்பட்ட பணக்காரர்
களாக இருந்தாலும், 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான் இப்போது
இருக்கிற பணக்காரர்களே தவிர, மடாதிபதிகள் போல் ஆயிரம்
வேலிக்குச் சொந்தக்காரர்களோ, அல்லது 12 ஆயிரம் ஏக்கருக்குச்
சொந்தக்காரர்களோ என்ற நிலை அந்தக் காலத்தில் இருந்தது.
ஆனால் இப்போது ஒருவர் அதிகமாக வைத்துக் கொள்ள
வேண்டும் என்றால் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்தான். அவர்கள்
தான் பெரும் பணக்காரர்கள். குத்தகைக்குக் கொடுக்கின்ற
அளவிற்கு கொடுப்பவர்கள் எல்லாம் 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர்
வைத்து இருப்பவர்களிடத்திலேயிருந்துதான் குத்தகைக்கு
எடுக்கிறார்கள், என்ற நிலைக்கு நாம் வரக்கூடாது. சிறு சிறு
நிலங்களை வைத்து இருப்பவர்கள், நேரடியாக உழவுத்
தொழிலைப் பார்க்க முடியாமல் இருக்கிற விதவைத்தாய்மார்கள்,
திக்கற்றவர்கள் வேறு பல வகைகளில் இருக்கின்றவர்களிட
மிருந்து குத்தகைக்கு எடுக்க வேண்டிய அவசியம் வருகிறது.
ஆனால் குத்தகைக்காரர்களுக்குக்கான வசதி வாய்ப்புகளைச்
செய்து வருவதிலே தொடர்ந்து இதற்கு முன்னாலே இருந்த
அரசும் சரி, அதற்குப் பிறகும் சரி, கொண்டு வருகிற பல்வேறு
சட்டங்களின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதைப்
போன்று அவர்களைப் காப்பாற்றுவதற்கு ஏற்ற அளவிற்கு நாம்
சட்டங்களை அவ்வப்போது இயற்றிக் கொண்டு வருகிறோம்.
இறுதியாக நிறைவேற்றிய சட்டப்படியும் கூட, 60:40 ஆக
இருந்தது. 60:40 ஆக இருந்தது. இப்போது 75 பங்கை
குத்தகைக்கு எடுப்பவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்றும், 25
பங்குதான் நில உரிமையாளர்களுக்குப் போய்ச் சேரவேண்டும்



1985 ஜூலை 17] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்ற ஒரு நியதியை வைத்திருக்கிறோம். ஆகவே 1966-லேயிருந்து
சில இடைவெளிகள் தவிர, தொடர்ந்து நில வெளியேற்று
பாதுகாப்பினை அவ்வப்போது அளித்து வருவதற்கு
தொடர்ந்து அவ்வப்போது நாம் சட்டங்களை
இயற்றிக்கொண்டு வந்திருக்கிறோம். ஆனால் அவர்கள் வெளி
யேற்றப்பட வேண்டும் என்ற ஒரு கொள்கையை அரசு ஆதரிக்க
வில்லை. அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதற்
காகத்தான் அவ்வப்போது சட்டங்களை நாம் கொண்டு வருகி
றோம்.

ஆகவே, குத்தகைத்தாரர்கள் தொடர்ந்து குத்தகைக்கு
எடுத்து அவர்கள் வாழவேண்டும் என்பதற்காகத்தான் இத்
தகைய பாதுகாப்பு எல்லாம் வைக்கிறோம். அப்படியே வெளி
யேற்ற வேண்டுமானால் கூட குத்தகை பாக்கியை செலுத்தாமலே
இருக்கிற சூழ்நிலைகள் நாம் பாதுகாப்பு அளிக்காத நிலை
யிலே ஏற்படுகின்ற சூழ்நிலைகளிலே, நிலம் எங்களுக்குத்தான்
சொந்தம் என்று வாதாடுகின்ற அத்தகைய நிலையிலே, ஆகவே
நிலத்திற்கோ அல்லது நிலத்திலே இருக்கிற அந்தப் பயிர்களுக்கு
ஊறு விளைவிக்கின்ற வகையிலே நிலத்தைத்தொடர்ந்து பயிரிடு
கின்ற வேளாண்மைப் பயிர் அல்லது தோட்டப் பயிர் தவிர
வேறு காரியங்களுக்கு செய்கின்ற நிலையில்தான் சட்டப்படி
வெளியேற்றுகின்ற நிலை இருக்கின்றதே தவிர, மற்றவைகளில்
அவர்களுக்கு முழுச் சட்டம் பாதுகாப்பு அளிக்கின்றது. இதிலே
சிறுசிறு நிலச்சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். குத்தகைக்
தாரர்களுக்கு கிடைக்கவேண்டிய தொகை கிடைக்கவேண்டும்
என்பதிலே எவ்வளவு அக்கறை இருக்கிறதோ, அவ்வளவு
அக்கறை சாதாரணமாக நிலம் உடையவர்களுக்கும், அற
நிலையங்களுக்கும், ஆலயத்திற்கும் அத்தகைய நிலைகள் இருப்
பதன் காரணமாக அதிலே ஓரளவிற்கு நாம் பாதுகாப்பைக்
கொடுத்துக் கொண்டு வருகிறோம். மேலும் இந்தக் குத்தகை
பணம் அரசு பணம் அல்ல. ஆகவே வரி என்பது அரசுக்கு வர
வேண்டிய பணம். குத்தகை என்பது தனிப்பட்டவர்களோடு
ஏற்படுகின்ற ஒப்பந்தத்தினுடைய அடிப்படையிலே நடை
பெறுகின்ற ஒன்று. குத்தகை பணத்தை எல்லாம் செலுத்த
வேண்டாம் என்று சொன்னால், தனிப்பட்ட மக்களுக்கு போவதை
நீங்கள் கொடுக்க வேண்டாம் என்றுதான் அரசு முடிவு எடுக்
கின்ற ஒன்றாக ஆகும். ஆகவே அரசினுடைய பணம் அல்ல.
தனிப்பட்டவர்கள் பணம். அதற்குக் கூட நாம் சட்டத்திலே
வழிவகை வைத்திருக்கிறோம். குத்தகைத்தாரர்கள் நியாய
குத்தகைச் சட்டத்தின் கீழ் இயற்கைச் சேதத்தினால் 25 சத
வீதத்திற்கு மேலாக அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால், எந்த
அளவிற்கு பாதிப்பு ஏற்படுகிறதோ, அந்த அளவிற்கு அவர்
களுக்கு குத்தகையில் நிவாரணம் உண்டு என்று சட்டத்தை
இயற்றி வைத்திருக்கிறோம். இவ்வளவு பாதுகாப்பிற்குப் பிறகும்,
ஓரளவிற்கு அவர்கள் கொடுக்க வேண்டியதுதான்.

(நண்பகல் 12-00)

சாதாரணமாக ஒரு கடையை வாடகைக்கு எடுக்கிறார்கள் என்றால், கடையில் நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக செலுத்த வேண்டிய வாடகையை செலுத்தாமல் இருக்கமுடியாது. தள்ளுபடி செய்வதும் இல்லை. அதனால் அதற்காக அவகாசம் வேண்டும் என்பதற்காக, காலம் வேண்டும் என்பதற்காக நாம் தள்ளுபடி செய்து கொண்டு வருகிறோம். ஆனால் இந்தப் பிரச்சினைகள் எல்லாம் தீர்வதற்கு குத்தகைதாரர்கள் இன்னொரு குத்தகையையும் எடுக்கவும் கூடாது. ஆகவே குத்தகைத்தாரர்கள் நேரடியாக உழுதுபயிரிடுகின்றவர்களுக்கு நிலத்தைச்சொந்தமாக்க வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையிலே அதற்கான திட்டங்களை வைத்து விட்டால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுப்போன்று, அப்படிப்பட்டவர்களுக்கு தொல்லை இல்லை. அறநிலையங்களுக்கும், ஆலயங்களுக்கும் தொல்லையில்லை. நீண்ட காலத்திற்கு முன்னாலே கேரளாவிலே அப்படிப் பட்ட நிலைமை ஏற்பட்டு, ஆகவே அவற்றை வைப்பு நிதியாக வைத்து, அதிலிருந்து வருகிற வட்டித் தொகையை, மற்றவைகளை வைத்து, ஆலயங்கள் மற்றவைகள் நடைபெறுகின்ற நிலைமை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அந்த நிலை இங்கே வருமானால் இப்படிப்பட்ட லிட்டிகேஷன், மற்றைய தகராறுகள், பிராதுகள் மற்றவைகள் கூட வராமல் இருக்கும். 6-6-1985-ல் கூட தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளைச் சேர்ந்த முகவர்களை ஏஜெண்டுகளை அழைத்து நில உரிமையாளர்களுக்கு நீங்கள் கடன் வழங்கி குத்தகைதாரர்களுக்கு இந்த நிலங்களை சொந்தமாக்கி தவணை முறையில் அவர்கள் வட்டியோடு செலுத்துகின்ற அளவுக்கு ஒரு ஏற்பாட்டை செய்யவேண்டும் என்று நானே கூப்பிட்டு அவர்களிடத்தில் கேட்ட போது இப்போது இருக்கின்ற சட்ட திட்டபடி வங்கிகள் அப்படி கடன் அளிப்பதற்கு இல்லை, ரிசர்வ் வங்கி அப்படிப் பட்ட ஒரு முடிவை எடுக்குமானால் அதன்படி நடக்க நாங்கள் வங்கிகள் ஆயத்தமாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆக ரிசர்வ் வங்கி அப்படிப்பட்ட முடிவை எடுக்க வேண்டும் என்று சொன்னால் மத்திய அரசுக்கு அதை எடுத்துச் சொல்ல வேண்டும். ஆக மத்திய அரசுக்கு அதை எடுத்துச் சொல்லி ரிசர்வ் வங்கி மூலமாக ஏற்பாடு செய்தால் நில சீர்திருத்தம் என்ற கொள்கை சிறப்பாக நிறைவேறும் என்று நாங்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, மத்திய அரசை அணுகி ரிசர்வ் வங்கி மூலமாக வங்கிகள் கடன் கொடுக்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் நிலத்தை குத்தகைதாரர்களுக்கே உரிமை ஆக்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம். இப்போது இங்கே செய்யப்பட்டு இருக்கிற பாதுகாப்பு நடவடிக்கைகளின்கீழ் கூடுமான வரையில் அவர்கள் தங்களுடைய பழைய நிலுவைகளை அதனால்தான் 6, 6 மாதங்கள் கொடுத்து தள்ளி இடம் கொடுக்கின்ற அளவுக்கு கொண்டு வந்து இருக்கிறோம்



இதில் அதிகமான பாதகம் ஏற்படாது. ஆனால் நிலைமையையும் நாம் கவனிக்க வேண்டும், இரு சாராரையும் நான் கவனிக்க வேண்டும் என்ற முறையில் இந்த சட்டமுன் வடிவை நிறைவேற்றித் தருமபடி மாண்புமிகு உறுப்பினர்களை கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்தராபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதில் செப்டம்பர் மாதம் என்று இருக்கிறது. அப்போது சம்பா நடவு நேரம். அதைமாற்றி குறுவை அறுவடை அக்டோபர்-நவம்பர் மாதங்களில்தான் வரும். அதை கொஞ்சம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது பற்றி என்னுடைய கவனத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு கோ. வீரய்யன் அவர்கள் கொண்டு வந்தார்கள். அதில் ஒரு நியாயம் இருக்கிறது என்று தெரிந்துதான் அதன் காரணமாக செப்டம்பர் 30 என்பதை மாற்றி நவம்பர் 15 என்று மாற்றிக் கொள்ளலாம் என்ற அளவுக்கு நானே திருத்தம் கொண்டு வர இருக்கிறேன். அந்தக் கிளாஸ் வரும்போது அந்தத் திருத்தத்தை நானே செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி வகை முறைகள்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப்பேரவைச் சட்ட முன் வடிவு எண். 43/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின்முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 3 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause (i) and (iii) of sub-section (1) of Section 5 pro-
posed in clause 3, for the expressions 30th September 1985 and
30th September 1986, substitute the expressions 15th November
1985 and 15th November 1986 respectively''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 3 திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு,
விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 4

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: பேரவை முன்னுள்ள
கேள்வி:

'' பிரிவு 4 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற
வேண்டும்''.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
திருத்தத்தை மொழிகிறேன்;

"In clause 4, in sub-clause (a), for the expressions "30th Septem
ber 1985 and 30th September 1986'' substitut the expressions 15th
November 1985 and 15th November 1986, respectively.''

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 4 திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்
பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்
பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின்
முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட
தீர்மானத்தை மொழிகிறேன்.

''1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைத்தாரர்கள்
(தனி வகைமுறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப்
பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1985) திருத்தப் பெற்றபடி
நிறைவேற்றப் பெற வேண்டும்''.



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட
முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

(ஈ) நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்)
திருத்தச் சட்ட முன்வடிவு 1985''.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன்:

''1985-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின்
மீது உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்
வடிவு* (சட்டமன்றப் பேரவைச்சட்ட முன்வடிவு எண் 44/
1985)'' ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1985
ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்ச
வரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை நான் முன்
மொழிந்திருக்கிறேன். 1961-ஆம் ஆண்டு, தமிழ்நாடு நிலச் சீர்
திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின்படி
தமிழ்நாடு சட்டம் 58/1961 பொதுப் பொறுப்பாட்சி அமைப்பு,
பப்ளிக் ட்ரஸ்ட் மற்றும் கல்வி நிலையம் எதுவும் நிலம் எதையும்
கையகப்படுத்தமுடியாது. நிலத்தை கையகப்படுத்த, மேற்
சொன்ன சட்டத்தின்கீழ், விதிக்கப்பட்டுள்ள மேற்சொன்ன
தடையானது, கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள்
வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றது என்று அரசுக்கு முறை
யீடுகள் வந்துள்ளன. பொதுப் பொறுப்பாட்சிகளும், கல்வி
நிலையங்களும், மருத்துவமனைகளும், உண்மையான நோக்கத்திற்
காகக் கூட — கல்வி நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள்
ஆகியவற்றை நிறுவுவதற்கோ, அவற்றை விரிவுபடுத்துவதற்கோ
கூட, நிலத்தை கையகப்படுத்த இயலாது' உள்ளன. அத்தகைய
கல்வி, மருத்துவ நிலையங்களின் நோக்கத்திற்காக நிலத்தை
வைத்து இருக்க அல்லது கையகப்படுத்த, அதாவது அத்தகைய
அனுமதி வழங்கப்படும் ஆணையில், அரசினால் விதிக்கப்படக் கூடிய
நிபந்தனைகளுக்குட்பட்டு, அவ்வாறு நிலத்தை வைத்து இருக்க
அல்லது கையகப்படுத்த பொதுப் பொறுப்பாட்சிகளுக்கும், கல்வி
நிலையங்களுக்கும் மருத்துவமனைகளுக்கும் அனுமதி வழங்குவதற்
கான அதிகாரத்தை அரசு எடுத்துக்கொள்வதற்காக மேற்
சொன்ன சட்டத்தை தக்கவாறு திருத்தத் தேவை என்று கருதப்
பட்டுள்ளது. மேற்சொன்ன நோக்கத்தினைச் செயல்படுத்த,
இச்சட்ட முன்வடிவு விழைகிறது. இந்தச் சட்டமுன்வடிவை
பேரவை ஏற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

* 1985-ம் ஆண்டு ஜூலை திங்கள் 16-ம் நாள் தமிழ்நாடு
சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[1985 ஜுலை 17

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவிலே குறிப்பிட்டு இருப்பது-- 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) சட்டத்தின்படி உள்ள தமிழ்நாடு 58/61 சட்டத் திருத்தத்தை இங்கே நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்து முன் மொழிந்து இருக்கிறார்கள்.

1961 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட இந்த நில உச்சவரம்புச் சட்டம் என்பது விவசாய நிலம் சம்பந்தப்பட்ட சட்டம் என்பதும், அரசியல் சட்டத்தின் 39-வது உட்பிரிவு (2)-ஐ நிறைவு செய்வதற்கு நில குவியலை எடுத்து நிலம் அற்ற ஏழைகளுக்கு வழங்கி, ஒரு பொருளாதார ஏற்றத்தாழ்வை சீர் செய்வதற்கு, அந்த அரசியல் சட்டத் தேவையை பூர்த்தி செய்வதற்கு விவசாய விளை நிலங்களுக்காக மட்டுமே கொண்டு வரப்பட்ட சட்டம்தான் 1961 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட நில உச்சவரம்புச் சட்டம், அந்தச் சட்டத்திலேயே தனியாக ஒன்றைப் பிரித்து, 58/1961 சட்டம் என்று பொது அறக் கட்டளைகளுக்கு விதிவிலக்கு அளிப்பது என்று அன்றைக்கே ஒரு தனியான சட்டம் கொண்டு வரப்பட்டு, அதன் மூலமாக பொது டிரஸ்ட்கள் என்ற முறையில், பல புதிய கல்வி, மருத்துவ அறக் கட்டளைகள் எல்லாம் துவக்கப்பட்டு அவைகளுக்கு நிலங்களை வைத்துக்கொண்டு, உபரி நிலம் கிடைக்க முடியாத நிலையை உண்டாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது என்பதை தமிழ் நாட்டிலே உள்ள நாம் அறிவோம்.

அதன் விளைவாகத்தான் இன்றைக்கு கல்வி, மருத்துவம் போன்ற அந்த அறக்கட்டளைக்கு விவசாய நிலங்கள் எவ்வளவு அதற்கு கட்டிடங்கள் கட்டுவதைப் பற்றி அதற்கான அந்தப் பள்ளிக் கூடங்களுக்கோ, மருத்துவ மனைகளுக்கோ தேவையான இடங்களைப் பற்றி உள்ள சட்டம் அல்ல.

அது விவசாய நிலங்கள் சம்பந்தப்பட்ட மட்டிலே இருக்கக் கூடிய சட்டம் என்ற முறையில், கல்வி, மருத்துவமனை போன்ற அறக்கட்டளைகள் விவசாய நிலங்களை எவ்வளவு வைத்துக் கொள்ளலாம் என்று அதற்கு வரம்பு விதிக்கப்பட்டது.

(பிற்பகல் 12-10.)

அப்படி வரம்பு விதிக்கப்பட்டு, இப்போது அதுபற்றி மேல் முறையீடு வந்து இருப்பதாகவும், அதற்காக திருத்தங்கள் கொண்டு வருவதாகவும் சொல்லப்படுகிறது. 61/58-வது சட்டம் என்பது விவசாய நிலம் சம்பந்தப்பட்ட சட்டம் என்பதை நான் மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறேன். கல்வி, மருத்துவமனையில் விவசாய நிலங்களைப் பயன்படுத்துவது ஏன் என்பது விளங்க வில்லை. கல்வி, மருத்துவமனைகளுக்கு இப்படியிருக்கக்கூடிய





விவசாய நிலங்கள் அவர்களின் தேவைக்குப் போக மீதியிருக்கிறதே அதை எடுத்து நிலமற்ற ஏழைகளுக்கு விநியோகிக்க வேண்டு மென்ற கோரிக்கைகள் பலமுறை இந்த அரசிடம் வைக்கப் பட்டுள்ளது. அப்படியிருக்கும்பொழுது அந்தக் கோரிக்கை கவனிக்கப்படாமல் இருக்கும்பொழுது அறக்கட்டளைகளின் வேண்டுகோளை ஏற்று அவைகளுக்கு விவசாய நிலத்தை மேலும் அதிகப்படுத்திக் கொடுக்கக்கூடிய இந்தத் திருத்தச் சட்டம் என்பது ஏழைகளுக்கு நிலம் கிடைப்பதைப் பாதிக்கச்செய்யும். அதைத் தவிர அரசியல் சட்டத்தினுடைய 39-வது பிரிவு உள் பிரிவு 2-க்கும் முரணானதாக அமையும். பொது நலனுக்குக் கேடு விளைவிப்பதாக இருக்கும்; ஏழைகளுக்கு உதவுவதாக இருக்காது. எனவே, இந்தச் சட்டத் திருத்தத்தை நான் எதிர்க் கிறேன் என்று கூறி முடிக்கிறேன்.

*திரு. கு. சுப்பராயன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழ்நாடு நிலச்சீர்திருத்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே ஆய்வுக்கு முன்மொழிந்து இருக்கிறார்கள். ஒவ்வொரு சட்டமும் திருத்தப்பட வேண்டும், மாற்றியமைக்கப்பட வேண்டுமென்பதிலே யாருக்கும் மாறுபட்ட அபிப்ராயம் இருக்க முடியாது. ஆனால் அந்த மாற்றங்கள், திருத்தங்கள் எல்லாம் எத்தகைய திசைகளிலே இருக்க வேண்டு மென்பதிலேதான் மாநில அரசின் திருத்தச் சட்ட முன்வடிவிற்கும் நமக்கும் இடையில் உள்ள பிரச்னையாக இருந்துவருகிறது. தற்போதுள்ள நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி கல்வி நிலையங் கள் மற்றும் மருத்துவமனைகளின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கின்றது என்று அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன என்று இந்தச் சட்டத்தைத் திருத்தப்படுவதற்கு உரிய நோக்கம் குறித்து அரசு அறிவித்திருக்கிறது. ஏதோ மாடு மணி அடித்தவுடனேயே மனுநீதிச் சோழன் நீதி வழங்கிவிட்டதைப்போல், முறையீடுகள் வந்தவுடனேயே அந்த முறையீடுகளுக்குத் தீர்வு அளிக்க மசோதா தாக்கல் செய்யும் அரசாகக் காட்டிக்கொள்ளும் முறையிலே இவர்கள் இந்தத் திருத்தச் சட்டத்தை முன்மொழிந்திருந்தாலும் கூட அந்தத் திருத்தச் சட்டத்தினுடைய உள்ளடக்கம் என்ன என்பதைப் பரிசீலிக்கின்றபொழுது வேதனையாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநில அரசுக்கு இந்த ஒரு துறையிலிருந்து மட்டும் முறையீடு வரவில்லை. ஃபோர்த் பே கமிஷன் அநீதி இழைத்துவிட்டது என்று அரசு ஊழியர்கள் முறையீடு கொடுத்தார்கள், அந்த முறையீடுகள் கவனிக்கப்பட்டனவா? கடனைக் கட்ட முடிய வில்லை எனவே கட்ட முடியாத கடனையெல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்று விவசாயிகளிடமிருந்து முறையீடு வந்ததே அதை இந்த அரசு பரிசீலித்ததா? அடிப்படையான வசதிகள் வேண்டுமென்று அன்றாடம் பல்லாயிரக்கணக்கான மக்கள் முறை யீடுகளை அனுப்பியவண்ணம் இருக்கிறார்களே அதைப் பைச லாக்குகிறதா? இத்தகைய முறையீடுகள் கண்ணீர் முறையீடுகளாக இருந்தும்கூட அவற்றைக் கண்டுகொள்ளாத அரசு திடீரென்று இந்த முறையீட்டின் மீது மட்டும் கருணைகொண்டு, சட்டத்தைக் திருத்த முன் வந்திருப்பது எந்த நோக்கத்தில் என்பதை நான் இங்கே தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக மருத்துவமனைகள், கல்வி நிலையங்கள் ஆகிய இவைகள் செல்வத்தை வற்றாது பொழிகிற காமதேனுவாகத் தனியார் கைகளில் சிக்கிக் கிடக்கின்றன. தனியார் கைகளில் சிக்கிக் கிடக்கின்ற இவற்றிற்கு மேலும் வலுவூட்டுகின்ற முறையிலே, எந்த நோக்கத்தோடு தேசிய விடுதலை இயக்கக் காலத்திலேயிருந்து இந்தப் பேரவையிலே 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்படுகின்ற வரையிலும் தொடர்ந்து குரல் எழுப்பப்பட்டதோ அந்த உணர்வுக்கு இந்தத் திருத்தச் சட்டம் வேட்டு வைத்திருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிலச்சீர்திருத்தத்தின் நோக்கமே நிலக் குவியலைத் தடுக்க வேண்டுமென்பதுதான். நிலமற்ற. உழைப்பறிந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு. உபரி நிலங்களைக் கையகப்படுத்தி அவர்கள் விவசாயம் செய்வதற்குப் பிரித்துக்கொடுக்க வேண்டு மென்ற நல்ல நோக்கத்தோடுதான் இப்படியொரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று துவக்க காலத் லேயிருந்து சொல்லப்பட்டு வந்தது. பல்வேறு காங்கிரஸ் கட்சியினுடைய மாநாடுகளிலேயும்கூட சுதந்திரம் பெறுவதற்கு முன்னால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற குரல் வலுவாக எழுந்தது.

அப்படி உழுகிறவர்களுக்கே நிலம் சொந்தம் என்று வெறுமனே வானத்தில் நின்று கோஷம் போட்டுக் கொண்டிருந் தால் நிலம் கிடைக்காது; நிலப்பிரபுக்கள் சுற்றி வளைத்துப் போட்டிருக்கக்கூடிய நிலத்தை கையகப் படித்த வேண்டுமானால் அதற்குரிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் நிலச் சீர்திருத்தச் சட்டம் இந்தப் பேரவையில் கொண்டுவரப்பட்டது. அந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் இந்தப் பேரவையிலே கொண்டுவரப்படுகின்ற பொழுது நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இதே பேரவையின் சட்டமன்ற உறுப்பினராக எதிர்த்தரப்பிலே அமர்ந்து இருந்தார் கள். மரியாதைக்குரிய பேரறிஞர் அண்ணா அவர்கள் இதே பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள், விதிவிலக்கைப் பற்றி அண்ணா சொல்கின்ற நேரத்திலே, விதிவிலக்கு என்பது நிலப் பிரபுக்களுக்கும் நிலச் சட்டத்தை ஏய்க்க விரும்புகிறவர்களுக்கும் கதவை திறந்துவிடுவதாகும் என்று குறிப்பிட்டார்கள். இங்கே அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு அண்ணா சொல்வது போல். கதவைத் திறந்து விடுகிறது. வலியவர்களுக்கு--உரியவர் களுக்கு அல்ல. -- வறியவர்களுக்குத் திறந்துவிட்டிருந்தால் நாம் பாராட்டியிருக்கலாம். இங்கே கல்வி சாலைகளுக்கும், அதே போல மருத்துவமனைகளுக்கும் மதம் சம்பந்தப்பட்ட அறக் கட்டளைகளுக்கும் விதிவிலக்கு கொடுப்பதாகவும் குறிப்பிட்டிருக் கிறார்கள், அதற்கு ஏதாவது வரம்பு இருக்கிறதா? இவ்வளவு ஏக்கர்தான் வைத்துக்கொள்ளலாம் என்று ஏதாவது சொல்லப் படுகிறதா என்றால் இல்லை. பூடகமாகச் சொல்லப்பட்டிருக் கிறது; அவர்கள் ஒவ்வொருவரும் அரசுக்கு மனு போடவேண்டும் அந்த மனுவை அரசு பரிசீலிக்கும். அரசாங்கத்திற்குப் போனால் அவர்கள் முடிவெடுப்பார்கள், என்று. வேண்டாமென்றும்



சொல்லலாம், வேண்டுமென்றும் சொல்லலாம். அது பல தீய விளைவுகளைக்கூட ஏற்படுத்தலாம். ஆகவே, இந்த மாநில அரசுக்கு, நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, நிலச்சீர்திருத் தச் சட்டத்திற்கு இது பங்கம் ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டிலே உபரி நிலம் கிடைக்காமல் போய்விட்டது. ஒவ்வொருவரும் ஒரு பள்ளி என்று போர்டு மாட்டிக்கொள்வார்கள். ஆயிரம் ஏக்கரை வைத்துக்கொள்ளலாம், அரசு தலையிட முடியாது. இத்தகைய ஒரு வாய்ப்பை ஏன் இந்த அரசு வழங்குகிறது என்று நான் குறிப்பாகக் கேட்க விரும்புகிறேன்.

இங்கே விவாதத்தில் இருக்கக்கூடிய 37 (பி) தான் இன்றைக்கு பிரச்னைக்குரிய விஷயமாகத் திருத்தப்படுகிறது. அத்தகைய திருத்தத்தின் மூலம் எந்த நோக்கத்தை இந்த மாநில அரசு அடைய விரும்புகிறது. வெறுமனே பேப்பரில், தேர்தல் கால அறிக்கைகளில், அறிவிப்புக்களில் மட்டுமே உழுபவனுக்கு நிலம் தாங்கள் நிலச்சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தோம என்று சொல்லிவிட்டு, ஒரு குடத்திலே தண்ணீரை நிரப்பிவிட்டு, சுற்றிலும் ஓட்டைப் போட்டுவிட்டால் உள்ளே தண்ணீர் இருக்காது. சந்து பொந்து நிறைந்த நிலச்சீர்திருத்தச் சட்டம் என்று ஒரு காலத்திலே காங்கிரஸ்காரர்கள் அதைக் கொன்றார் கள். 1961-ல் அதனுடைய கை, கால்களை எல்லாம் முறித் தார்கள்.

அப்பொழுது, எதிர்வரிசையில் இருந்து எதிர்த்த, இதே அமைச்சரவையில் அங்கம் வகிக்கிற மரியாதைக்குரியவர்கள் இன்றைக்கு இடம் மாறிப்போய், எதிர்த்தரப்பிலிருந்து ஆளுகின்ற தரப்பிலே அமர்ந்துவிட்டதனாலே, என்ன குறையோ தெரிய வில்லை, ஆளுகிற தரப்பிலே போய் அமர்ந்ததாலே, எதிர்த் தரப்பிலே இருந்து என்ன, என்ன சொன்னார்களோ, அதை யெல்லாம் மறந்து போய்விடுகிறார்கள். ஆளுகிற தரப்பிற்குப் போனவுடன் எதிர்த் தரப்பிலே சொன்ன கருத்துக்களையெல்லாம் மறந்துவிட்டு, வசதிக்குத் தக்கபடி, பண வலுவுள்ளவர்களுக்குப் பாதுகாப்பாக, நிலப் பிரபுக்கள் நிலத்தைக் கொள்ளை அடிக்க வசதி ஏற்படுகிற முறையில் சந்துபொந்துகளை உண்டாக்குகிற திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இந்தத் திருத்தம் என்பது அப்பட்டமான, உபரி நிலம் கிடைக்காமல் தடுப்பதற்கான ஒரு திருத்தச் சட்டம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். வலுவற்றவர்களுக்கு, வறியவர்களுக்குப் பாது காப்பளிக்கத் தவறிய சட்டம் என்பதால் இதை நான் சொல்ல வில்லை. மாநில அரசு, திராவிட இயக்கத்திற்குப் புறம்பாக, அப்பொழுது சொன்னவற்றை மீறுகின்ற காரணத்தால் இதைச் சொல்கின்றேன். திராவிடர் இயக்கப் பாரம்பரியத்தில் சொன்ன பழைய கொள்கை முழக்கங்களைக் கௌரவிப்பதற்காக, எங்களை கௌரவிப்பதற்காக அல்ல; ஏழ் மைப்பட்ட மக்களின் குரலைக் கொடுப்பதற்காகக்கூட அல்ல, உங்களுடைய குரல் கடந்த காலத்தில் எதிரொலிக்கப்பெற்றவற்றை இன்றைக்கு கௌரவிப் பதற்காவது இந்தச் சட்ட முன்வடிவை வாபஸ் பெற வேண்டு மென்று இந்தக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக வலியுறுத்தி, அமர்கிறேன், வணக்கம்.

[1985 ஜூலை 17

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திருத்தச் சட்டத்தை நான் மனமுவந்து வரவேற்கிறேன். இப்படி ஒரு சட்டம் அவசர அவசரமாகக் கொண்டுவரப்படவில்லை. இந்தத் திருத்தம் தேவை என்பது தமிழ்நாட்டிலே பரவலாக வற்புறுத்தப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக, அறநிலையங்கள், மத பாடசாலைகள் இவற்றிற்காக அர்ப்பணிக்கப்பட்ட நிலங்களில் வருமானமின்றி, அந்தப் பாடசாலைகள், கல்லூரிகள் நடத்தப்படுவது முடமாக்கப் பட்டு, பல கல்லூரிகள் எனக்குத் தெரிய கடன்பட்டு, மூடிவிடக் கூடிய தருவாயில் இருந்துவருகின்றன. அப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் மாற்றி அமைப்பதற்கு இன்று சபையின் முன்னாலே வைக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்தம் வழிவகை செய்யும் என்ற அடிப்படையில் இதை நான் வரவேற்கிறேன்.

இதை நான் வரவேற்கின்ற நேரத்தில், என்னுடைய அருமை நண்பர் சுப்பராயன் அவர்கள் சில அச்ச உணர்ச்சிகளை வெளியிட்டார்கள். நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பொழுது, இதே அவையிலே இடம் பெற்றிருந்த மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்களுக்கு மாறுபட்டவர்களாக, இன்று பொறுப்பேற்றிருக்கக்கூடியவர்கள் சிலபேர்கள் நடக்கிறார்கள் என்று கூட அவர்கள் சொல்லிக்காட்டினார்கள்.

(பிற்பகல் 12–20)

என்னைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் விவாதிக்கப் பட்டபோது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன ஒரு வாசகம், நாடெல்லாம் பரவலாக்கப்பட்ட வாசகம் என் நினைவுக்கு வருகிறது. உச்சவரம்புச் சட்டம் உண்மையாகவே எந்த நோக்கத்தினுடைய அடிப்படையிலே கொண்டுவரப்படுகிறதோ அந்த நோக்கத்தை முழுமையாகச் செயல்படுத்தக்கூடிய முறையிலே இருக்க வேண்டுமே தவிர அது மிச்சவரம்புச் சட்டமாக இருக்கக் கூடாது என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள்.

இப்படி உச்சவரம்புச் சட்டத்தினால் ஒதுக்கப்பட்ட நிலம் எல்லாம் சரியான முறையில் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதைப்பற்றி பாராட்டாக நான் பேச முடியவில்லை. அந்தச் சட்டத்தினால் இப்படிப் பெறப்பட்ட நிலங்கள் என்று ஒதுக்கப்பட்ட நிலங்களில் பெரும்பாலானவை ஏற்கெனவே ஆங்காங்கே இருக்கக்கூடிய சின்னஞ்சிறு கிராமங்களில் பொது இடங்களாக, மேய்ச்சல் இடங்களாக, குளங்களாக இருந்த பகுதிகள் அந்தப் பகுதிகள் எல்லாம் இந்தக் சட்டத்தினால் மிச்சப்பட்ட நிலம் என்று ஒதுக்கப்பட்டு பொது நலன்களுக்கு பயன்படுத்தப்பட்டு வருகிற நிலங்கள் கூட ஒரு சிலருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு, அதன் காரணமாக கிராமங்களில் நிலவிவந்த அமைதி கலைக்கப்பட்டு பல சச்சரவுகள், பல சஞ்சலங்கள் எங்கும் மிகுந்திருப்பதை நம்முடைய நாட்டில் பரவலாக நாம்



1985 ஜூலை 17] (திரு. ஆ. கா. அ. அப்துல் சமது)

காண்கிறாம். அப்படி இல்லாமல் சட்டத்தினுடைய அடிப்படை
நோக்கம் இன்னும செழுமையாக அமுல்படுத்தப்பட இன்றைய
அரசு மெத்த கவனத்தோடும் அக்கறையோடும் செயல்பட
பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிச் செய்கிறபோது ஏற்கெனவே கூலைக்கக்கூடிய
உழைப்பாளிகள். உழுது பயிர் செய்யக்கூடிய விவசாயிகள் அவர்
களுக்குக் கிடைக்கக்கூடிய உரிமைகள் குறைக்கப்பட வேண்டு
மென்ற எண்ணத்திலே இதை நான் வரவேற்கவில்லை என்று
நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். ஆனால் தஞ்சை
மாவட்டத்தைப் பொறுத்த வரையில், பலவேறு நிலச்சுவான்தார்
கள் சின்னஞ்சிறு நில உடைமையாளர்கள் கூட அவர்கள் இந்த
நாட்டிலே பாடுபட முடியாமல், வேலை வாய்ப்பு இல்லாமல்
வெளிநாடுகளுக்குச் சென்று உழைத்து, அவர்கள் ஈட்டி, மிகுதி
யான பணத்தைக்கொண்டு வாங்கிய நிலத்தைக்கொண்டு,
தங்களுடைய குடும்பத்திற்கு எதிர்காலத்தில், ஏன் நிகழ்காலத்
திற்குக்கூட, வருவாய் வரக்கூடிய வகையில் வைத்திருக்கிறார்கள்.
அப்படிப்பட்டவர்கள் குத்தகைக்கு விடப்பட்ட நிலத்திலிருந்து
விவசாய நிலத்திலிருந்து, சட்டப்பூர்வமாக இன்று அனுமதிக்கப்
பட்டிருக்கக்கூடிய வருவாய்கூட பெறமுடியாமல், அந்தக்
கேட்டுப் பெற ஆண்மக்கள் அந்தக் குடும்பத்திலே இல்லாமல்
பெண் மக்கள் இருக்கக்கூடிய குடும்பம்மிகவும் சிரமப்படுகிறது.
இப்படிப்பட்ட சிரமத்தை மாற்றியமைத்து, உரிய வருவாய் இது
என்று சட்டபூர்வமாக எதை அங்கீகரித்திருக்கிறீர்களோ, அந்த
வருவாய் அவர்களுக்குக் கிடைக்க வழிவகை கண்டு, அதன்படி
தேவைப்பட்ட திருத்தங்களை இந்த அரசு கொண்டுவர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று விவசாயப்பெருங்குடி மக்களுக்கு மேலும் நிலம் வர
வேண்டும் என்று கொண்டு வரப்படக்கூடிய இந்தத் திருத்தச்
சட்டத்தை நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆதரிக்க
காத்திருக்கிறேன். ஏனென்றால் எங்களுடைய கொள்கை ஒரு
சின்னஞ்சிறு சிட்டுக்குருவி தன்னுடைய அலகினால் கொத்தத்
தின்னக் கூடிய தானியத்தை யாராவது உற்பத்தி செய்தால்
அவர் இறைவனுடைய அனுக்கிரகத்தைப் பெறுவார், இறைவ
னுடைய அனுக்கிரகத்திற்கு உரியவர் என்று நபிகள் நாயகம்
சொல்லியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, உழைப்பவனுக்கு, உழுது பயிரிடுகின்றவனுக்கு
நிலம் உடைமையாக வேண்டும் என்பதில் எனக்கு மாறுபாடு
இல்லை: இஸ்லாமிய மதத்தில் ஆரம்பத்தில் யாராவது நிலத்
திற்குச் சொந்தக்காரர் அந்த நிலத்தை உழுது பயிரிடாமல்,
யாருக்கும் பயன்படாமல் வைத்திருந்தால், அவர் பெரியவராக
இருந்தாலும்கூட, 6 மாதம் தரிசாக போட்டிருந்தால், அந்த
உரிமையை அவர் இழந்துவிடுகிறார் என்று சட்டம் வகுக்கப்பட்
டிருக்கிறது.

இப்படிப்பட்ட நிலையில் உழைத்து, நிலத்தில் உழுது பயிரிட்டு, தானும் மற்ற மக்களும் உண்ண தானியங்களை உற்பத்தி செய்யக்கூடிய மக்களுக்கு எது நியாயமாக கிடைக்க வேண்டுமோ அது கிடைக்க வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதம் இல்லை. அதே நேரத்தில் இன்றைக்கு நீண்ட நாட்களாக தமிழ்நாடு முழுவதும் அறநிலையங்களில் எல்லாம் அவர்களுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து வருவாய் கிடைக்காமல், அவதிப் பட்டுக்கொண்டிருக்கக்கூடிய வாய்ப்பை மாற்றியமைக்க இந்தத் திருத்தம் தக்கவகையில் வகை செய்யும் என்பதால் வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திருத்தச் சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரப்பன் அவர்களும், திரு. சுப்பராயன் அவர்களும் கடுமையாக எதிர்த்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் சமத் அவர்கள் இதை வரவேற்று இருக்கிறார்கள். ஆகவே இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் நல்ல நோக்கம் ஒன்றை நிறைவேற்றுவதற்காகத்தானே தவிர எந்த ஒரு தனிப் பட்ட முதலாளிக்கும் புதிதாக நிலத்தைச் சேர்த்துக் கொடுக்க வேண்டும் என்பதற்காக அல்ல; எந்த ஒரு தனிப்பட்ட முதலாளியோ, நிலச்சுவான்தாரரோ தன்னுடைய நிலத்தைக் கூட்டிக்கொள்வதற்கு இந்தச் சட்டத்திலே வகை செய்யப்பட வில்லை. ஆனால் கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள், இப்படிப்பட்ட பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்ற நிலையங்கள் போன்றவற்றின் சீரிய கொள்கைகளை உரிய வகையில் நிறைவேற்ற இந்தச் சட்டம் பயன்படுத்தப்பட வேண்டியதாக இருக்கின்றது.

அவர்கள் எல்லாம் முறையீடு செய்தார்கள், ஆகவே இதைக் கொண்டு வந்துவிட்டோம் என்ற காரணமும் இல்லை. பலவிடத் திலிருந்தும் எவ்வளவோ முறையீடுகள் வருகின்றன. அவற்றிலே சிலவற்றை நிறைவேற்றியும் இருக்கிறோம்; சிலபல முறையீடு களைப் பொறுத்தவரையில் பரிசீலிக்கப்படும் என்று சொல்லி இருக்கிறோம்; அவற்றிலே பாதியை ஏற்றுக்கொண்டிருக்கிறோம்; பாதியைத் தள்ளியும் இருக்கிறோம். சிலபலவற்றைப் பொறுத்த வரையில் முழுவதையும் தள்ளி இருக்கிறோம். எனவே முறையீடுகள் என்ற காரணத்தாலேயே அவற்றை நாம் ஏற்றுக் கொள்வதில்லை. முறையீடுகளில் நியாயம் இருப்பதன் காரணத் தால்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதன்மூலமாக என்ன ஏற்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். நில உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்து மிச்சப்படக்கூடிய நிலத்தை ஏழை எளியவர்களுக்கும், உள்ளபடியே வாழ்க்கையினை சிறப்புற அமைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகின்ற ஏழை எளியவர்களுக்கு அதைப் பகிர்ந்து தரவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் நாம் இவற்றை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம். அந்த வகையில்தான் நில உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் நாம் கையகப்படுத்திய நிலங்கள் மட்டும் அதாவது உபரி நிலமாக வந்து கையகப்படுத்தப்பட்ட நிலங்கள்





மட்டும் 1,62,631 ஏக்கர் நிலங்கள் ஆகும். நிலத்தினை அரசு வசம் எடுத்துக்கொள்வதற்கு முன்னரும், பின்னரும் தடை ஆணை வாங்கி அதை நிறுத்தி வைத்த வகையில் அதாவது 23,199 ஏக்கர் நிலங்கள் தடை ஆணை மூலம் தடைப்பட்டு நிற்கின்றன. 1,18,120 ஏக்கர் நிலங்களை நாம் தகுதி வாய்ந்தவர்களுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அப்படி தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட பரப்பு 4,041 ஏக்கர். உபரி நில வினியோக விதிகளின் கீழ், 13-வது விதியின் கீழ் ஒதுக்கி வைக்கப்பட்டது 9,976 ஏக்கர். அப்படி கொடுக்க வேண்டும் என்று வருகிறபோது கூட நாம் சிலபல வரைமுறைகளை வைத்து இருக்கிறோம். 1,18,120 ஏக்கர் நிலத்தை நாம் பிரித்துக் கொடுக்கிற வகையில் கூட அதற்கான வரைமுறைகளை வைத்து முன்னுரிமை எல்லாம் கூட வைத்திருக்கிறோம். தகுதியுள்ள நபர்களுக்கு பயிரிடத்தக்க நிலங்களைக் கீழ்க்கண்ட முன்னுரிமைகளின் அடிப்படையில் வழங்கவேண்டும் என்று சொல்லி இருக்கிறோம்:—

(1) போரில் வீர மரணம் அடைந்த அல்லது இயலாமையுற்ற எல்லைப் பாதுகாப்புப் படையினர், பிரதேச இராணுவப் படை யினர் ஆகியோர் உட்பட முன்னாள் இராணுவத்தினருடைய குடும்பங்கள்;

(2) நிலமற்ற ஏழை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள்;

2. (அ) உரிமையாளர்களோ அல்லது குத்தகைதாரர் களோ நேரடியாகப் பயிரிட்டு வருபவர்கள் நிலங்கள் பொதுக் காரியங்களுக்காக வேறு வகையில் கையகப்படுத்தப்பட்டு இருக்குமேயானால் அவர்கள் வைத்திருந்த நிலத்தின் அளவுக்கு 3 ஏக்கர் புஞ்சை நிலத்தை அல்லது ஒன்றரை ஏக்கர் நஞ்சை நிலத்தை விட குறைந்துபோய் இருந்தால் அவர்களுக்கு நிலம் ஒப்படை செய்யப்படுகிறது. அவ்வாறு கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தால் அவர் களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் மதிப்பு அவர்களிடத்திலிருந்து பெறப்படுகின்றது;

2. (ஆ) 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை ஒழிப்புச் சட்டத்தின் மூலம் மத்தியச் சட்டம் 19/1976-ன்படி கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள்;

(3) முன்னாள் துப்பாக்கிப் படையினர், அஸ்ஸாம் எல்லைப் பாதுகாப்பு முன்னாள் படையினர் உட்பட முன்னாள் இராணுவத்தினர்;

(4) பர்மா, இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தவர்கள்;

(5) தங்கக் கட்டுப்பாடு ஆணை காரணமாகப் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள்;

(6) முன்னாள்கள் இறக்குபவர்களில் வேலை இழந்து வாடுபவர்கள்;

(7) ஏனைய நிலமற்ற ஏழைகள்;

(8) விடுவிக்கப்பட்ட சிறைக் கைதிகள்.

இப்படிப்பட்ட முறையிலேதான் அவை பிரித்துத் தரப்படுகின்றன. அப்படி பிரித்துத் தரப்பட்ட வகையில் கூட ஆதி திராவிட நபர்களுக்கு மட்டும் 40,506 பேர்களுக்கு 41,873 ஏக்கர் நாம் தந்திருக்கிறோம். பழங்குடியினர் 33 பேர்களுக்கு 27 ஏக்கர் தரப்பட்டிருக்கின்றது. ஏனைய ஏழைகள் மற்றைய வகைகளில் வருகின்றவர்கள் 51,729 பேர். 73,220 ஏக்கர் அந்த வகையில் தரப்பட்டிருக்கின்றது. இந்தச் சட்டத்தின் மூலம் எந்தத் தனிப்பட்ட முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் கூடுதலாக நிலத்தை வாங்கலாம் என்பதற்கு வழி செய்யவில்லை.

(பிற்பகல் 12-30)

ஆனால் இப்பொழுது நாம் என்ன செய்திருக்கிறோம் என்று கேட்டால், நாட்டினுடைய மக்களுடைய தேவைக்கு ஏற்ப அரசு முயற்சிகள் மட்டும் அல்லாமல், தனியார் முயற்சிகளிலும் கல்வி நிலையங்கள், கல்லூரிகள். பொறியியல் கல்லூரிகள், மருத்துவக் கல்லூரிகள், கலைக்கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகள், தொழில் நுட்ப பயிலகங்கள்-பாலி டெக்னிக்குகள் - ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலமாக கல்விக்கு நாம் அதிக ஆக்கம் தர வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவ்வளவு இருந்தும் கூட இந்த நாட்டினுடைய கல்வி நிலையங்கள் போதுமான அளவுக்கு இருக்கிறதா என்று கேட்டால் போதுமான அளவுக்கு இல்லை. இன்னும் அந்த கல்வி நிலையங்கள் வளர வேண்டும். இப்போது பொறியியல் கல்லூரிகளை மட்டும் நாம் எடுத்துக் கொண்டால், பக்கத்திலே இருக்கிற கர்நாடகத்திலே, 48 பொறி இயல் கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகள் அவைகளிலே பலப்பல. அங்கே சேர்ந்திருக்கிற மாணவர்கள் மட்டும் எல்லா ஆண்டுகளிலேயும் சேர்த்து 28 ஆயிரத்துச் சில்லரை பேர். அதிலே சேர்ந்திருக்கிறார்கள். இப்போது நம்முடைய மாநிலத்திலே, 7, 8 கல்லூரிகள்தான் இருந்த இடத்தில், இப்போது 25 கல்லூரிகள் இருக்கின்றன. 17 கல்லூரிகள் கூடுதலாக வந்து, 25 கல்லூரிகளாக ஆகி, அதில் கிட்டத்தட்ட 15 ஆயிரத்துச் சில்லரை மாணவர்களை மட்டுமே சேர்க்கின்ற அளவுக்குத்தான் இப்போது சூழ்நிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.





அதை விரிவாக்கம் செய்ய வேண்டும் என்ற நிலைமைகள் வருகிறபோது ஏற்கெனவே சட்டத்திலே நாம் ஒரு வரைமுறை படுத்தியிருக்கிறோம். ஆனால் உச்ச வரம்பு சட்டம் 5 (சி) பிரிவின் கீழ் பல்வேறு கல்வி நிலையங்கள், பல்கலை நுட்ப பயிலகங்கள் போன்ற கல்வி நிலையங்கள் கீழ்க்கண்டவாறு நிலங்களை, ஏற்கனவே அவர்கள் வைத்திருப்பார்களேயானால், அதுவும் அதிகமான நிலங்களை வைத்திருப்பார்களேயானால், இவ்வளவுதான் அந்தக் கல்வி நிலையங்கள் வைத்துக் கொள்ளலாம் என்று உச்ச வரம்பு போட்டு, அதற்கு மேலும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று ஒரு சட்டத்தின் கீழே கொண்டு வருகிறபோது பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பட்டுள்ள கல்லூரிகளுக்கு 40 ஏக்கர் வரை வைத்துக் கொள்ளலாம் என்றும், உயர்நிலைப் பள்ளிகள் 20 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், ஆரம்ப பள்ளிகள் 20 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், மாணவர்கள் தங்கும் விடுதிக்கு 25 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும், பல்கலை நுட்ப பயிலகங்கள் என்னும் நிறுவனங்கள் 25 ஏக்கர் வைத்துக் கொள்ளலாம் என்றும் நாம் அனுமதி அளித்து 1-3-1972 தேதிக்குப் பிறகு, எந்த ஒரு நிலத்தையும் அவர்கள் கையகப்படுத்தக் கூடாது என்றும் சொல்லியிருக்கிறோம்.

ஆனால் இந்த 40, 20, 25 என்று நாம் அனுமதித்திருக்கிறோமே தவிர, குறிப்பிட்ட சில கல்லூரிகள், சில பள்ளிகள் தான், அந்த நிலைமையைப் பெற்றிருக்கிறதே தவிர, சில பள்ளிகளுக்கு, அறவே கூட நிலம் இல்லை. விரிவாக்கம் செய்ய வேண்டும் என்று கருதுவார்களேயானால், அவர்களுடைய எண்ணிக்கையை பெருக்க வேண்டும் என்று சொல்வார்களேயானால், கல்லூரி ஆரம்பிக்கும்போது 500 மாணவர்கள் இருந்திருப்பார்கள். பிறகு ஆயிரம் வந்திருக்கும், இப்போது 2 ஆயிரம், 3 ஆயிரமாக என்று காலத்தின் நிலைமைக்கு ஏற்ப மேல்நிலை பள்ளி படிப்பிற்கு பிறகு, எல்லோருக்கும் கல்லூரிக்குள் புக வேண்டும் என்ற பேரார்வம் ஏற்பட்டிருக்கக்கூடிய நிலையில் கல்லூரியை விரிவு படுத்த வேண்டும், அறிவியல் ஆய்வுக் கூடங்களை கட்ட வேண்டும் என்று சொல்கிறபோது, அவர்களுக்கு ஒரு செண்ட் நிலம் கூட கூடுதலாக இல்லாத அளவுக்கு பல கல்லூரிகள் கல்வி நிலையங்கள் இருக்கின்றன.

அப்படிப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படி என்னவென்று கேட்டால் 1-3-72 தேதிக்கு முன்பே நிலங்கள் இருந்தால் உண்டு, அதற்குப் பிறகு நிலங்களே இல்லாதவர்களும் கூட, கையகப்படுத்தக் கூடாது என்று சட்டம் இருக்கிறது. அது மட்டும் அல்லாமல், அண்மையிலே நாம் ஊக்கமும், ஆக்கமும் தந்ததன் விளைவாக தமிழகத்திலே கல்லூரிகள் பல பெருகி அதன் மூலம் பல வாய்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, பொறியியல் வல்லுநர்களாகவும், மற்றைய தொழில் நிபுணர்களாகவும் பயின்று தொழில் நுட்பத் தன்மைகளிலே தேர்ந்தவர்களாகவும் மக்கள் மாறுகின்ற ஒரு வாய்ப்பு இருக்கிற முறையில் பல்வேறு வகையிலே செய்து நாம் இடம் கொடுத்து வருகிறோம். அப்படி இடம் கொடுக்கிறபோது பல கண்டிஷன்களையும் போடுகிறோம். என்னவென்று கேட்டால்

என்ஜினீயரிங் கல்லூரிகள் என்கிற பொறியியல் கல்லூரிகளை
வைக்க வேண்டுமென்றால், நகரப்புறங்களில் சாதாரணமாக 100
ஏக்கர் இருந்தால்தான் நல்லது என்று வைத்திருக்கிறோம்.
அப்போதுதான் பொறியியல் கல்லூரிகளுக்கு அனுமதி அளிப்போம்
என்றும், கிராமப்புறங்களில் 150 ஏக்கர் இருந்தால்தான் நல்லது
என்றும் வைத்திருக்கிறோம்.

ஏனென்று கேட்டால், அந்தப் பொறியியல் கல்லூரிகள்
வருகின்ற 100 ஆண்டுகள், 200 ஆண்டுகளுக்கு நிலைத்திருக்கும்
வகையில் கணக்கிட்டு வைத்து அப்படிக் கொடுக்க வேண்டியவர்
களாக இருக்கிறோம். அந்த மாதிரி கல்லூரியினுடைய
கட்டிடங்கள், நிர்வாக கட்டிடங்கள், அதன் ஆசிரியர்கள்
மாணவர்கள் உட்கார்ந்து தங்களுடைய கல்வியை பயிற்றுவிக்
கின்ற இடங்கள், ஆய்வுக் கூடங்கள், விடுதிகள், அங்கே பணி
ஆற்றக்கூடியவர்களுக்கு குடியிருப்பு இடங்கள் ஆகிய
அத்தனையையும் கட்டவேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படை
யில்தான், 100 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும் என்றும் 150
ஏக்கர் அதற்கு கிராமப்புறங்களில் இருக்க வேண்டும் என்றும்
போட்டிருக்கிறோம்.

பாலிடெக்னிக்குகள் என்னும் பயிலகங்களைப் பொறுத்த
வரையிலும் கார்ப்பொரேஷன், சிட்டி, டவுன் போன்ற இடங்
களில் 15 ஏக்கர் நிலம், அது ஆண்கள் பயிலகமாக இருந்தால்
என்றும், பெண்கள் பயிலகமாக இருந்தால் 10 ஏக்கர் இருக்க
வேண்டும். கிராமப்புறத்திலே 25 ஏக்கர் நிலம் ஆண்கள்
பயிலகத்திற்கு. பெண்கள் பயிலகத்திற்கு 15 ஏக்கர் நிலம் இருக்க
வேண்டும் என்று வைத்திருக்கிறோம். பள்ளிக் கூடமாக
இருந்தால் அவர்களுக்கு விளையாட்டு இடம், கட்டிடங்கள்,
நிர்வாக கட்டிடங்கள் எல்லாவற்றிற்கும் சேர்த்து 5 ஏக்கர் நில
மாவது இருக்க வேண்டும். பல பள்ளிக் கூடங்களில் இப்போது
கூட விளையாட்டுக்கு இடம் இல்லாமலேயே இருக்கிறது.
அதனுடைய வசதி வாய்ப்புகளை பெருக்குவதற்காக அவர்கள்
நினைத்தாலும் கூட முடியாத நிலைமையிலே இருக்கிறார்கள்.
இவற்றை எல்லாம் மனத்திலே வைத்து, 52 புதிய பயிலகங்கள்
கடந்த 2, 3 ஆண்டுகளிலே வந்திருக்கின்றன. ஆக கல்விக்கு
ஆக்கம் தருகின்ற வகையிலே அப்படிப்பட்ட பயிலகங்களுக்குத்
தான் கூடுதலாக தர முடியுமே தவிர, கல்லூரிகளுக்குத்தான்
கூடுதலாக தர முடியுமே தவிர, இன்டிவிஜுவலை விட, பொது
மக்களுடைய நன்மைக்காக, சமுதாயத்திற்கு பயன்பட வேண்டும்
என்ற நோக்கத்தை அடிப்படையாக கொண்டவர்களுக்கு இந்தச்
சட்டம் வழி வகை செய்கிறது என்ற முறையிலேதான் கொண்டு
வந்திருக்கிறோமே தவிர, தனியாக நிலச்சுவான்தார்கள் நிலத்தை
அதிகமாக வைத்துக் கொள்கிற அத்தகைய நிலைமைக்கு இடம்
கொடுக்கப்பட மாட்டார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதை அந்த உணர்வுகளை
இந்த அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே அவர்களை
அப்படி ஆக்கவேண்டுமென்றில்லை. அல்லது ரஷ்யா
மாதிரி ஆகிவிட்டால் மிகமிக நல்லது தான். எல்லா உடைமை





களும் அரசுக்குத்தான் சொந்தம். அரசு பார்த்து யார் யாருக்கு
எப்படி வைக்கவேண்டுமென்று நிலை வந்தால் என்னைப்
பொறுத்தவரையில் நான் ஏற்றுக்கொள்வேனே தவிர, அதை
மறுப்பவனல்ல. அப்படிப்பட்ட நிலைமை வந்துவிடுமேயானால்
மிகச்சிறப்பாக கூட அமைந்துவிடும். நாடு அதற்கு பக்குவப்பட்டு
இருக்கிறதா என்பதும் அந்த அளவிற்கு எல்லோருடைய மனப்
பான்மையும் இருக்கிறதா என்பதும், அப்படி வந்தாலும் ஒரு சிலர்
விடுவார்களா என்பதும், அத்தகைய நிலைமைகள் இருக்கிற
காரணத்தால் மிகத் தொல்லையாக இருக்கிறது. ஆகவேதான்
நம்முடைய பொது நோக்கம் நிறைவேற்ற வேண்டும் என்பது
தான் இதனுடைய நோக்கம்.

பலபேர்களை வசதி படைத்தவர்களை நாம் விட்டு
வைத்திருக்கிறோம், இவ்வொரு கணக்கை எடுத்துப் பார்த்தால்,
அண்மையில் வந்த கணக்கு இந்தியாவை பொறுத்தவரையில்
நூற்றுக்கு 90 பங்கு சொத்து பத்து பேர்களிடத்தில் இருக்கிறது.
பிர்லா, டாட்டா, பஜாஜ், டால்மியா போன்ற பெரும்பெரும்
பணக்காரர்களிடத்தில் இருக்கிறது. அவர்களை இந்தவகையில்
நாம் இழுத்து கறக்க வேண்டுமே தவிர வேறல்ல. அவர்களை
புதிய அறநிலையங்களை ஏற்படுத்தச் சொல்லி, கல்லூரிகளை
ஏற்படுத்துங்கள் என்று சொல்லி, பிளானிடோரியத்தை
ஏற்படுத்துங்கள் என்று சொல்லி, இவைகளை எல்லாம்
செய்யுங்கள் என்று தூண்டுகிறபோது தான் அப்படிப்பட்டவர்
களுக்கு வசதி செய்யவேண்டும் என்பது தானே தவிர, தனிப்பட்ட
வர்கள் யாருக்கும் ஆதரவு தரவேண்டுமென்றோ அல்லது வேறு
எந்த நிலைமையோ இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன
கருத்துக்களை இந்த அரசு மதிக்கிறது என்பதையும் தெரிவித்துக்
சொள்கிறேன்.

அந்தவகையிலே மாண்புமிகு உறுப்பினர் அப்துல்சமது
அவர்கள் கூட அதிலே இருக்கிற இடர்பாடுகள் எல்லாம் எடுத்துச்
சொன்னார்கள். ஆகவே இந்தக் கல்வி நிலையங்கள் வருமானால்
எதிர்காலத்தில் அதற்கு நல்லபலன்கள் ஏற்படக்கூடும். இன்னும்
கல்வி அதிகமாக வளர வேண்டும் இவ்வளவு செய்தும் கூட
1981-ம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கை கணக்கின்படி
தமிழகத்தில் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் எண்ணிக்கை 100-க்கு
46 போகள் தான். 54 பேர்கள் இன்னும் இல்லிட்டிரேட்டாகவே
இருக்கிறார்கள். அந்த நிலைமை இருக்கிறது இருந்தாலும்
பரவாயில்லை, நாம் இந்தியாவிலேயே கல்வியில் இரண்டாவது
இடத்திலே இருக்கிறோம் என்று அந்த அளவு திருப்தியோடு
இருக்கிறோம். முதலிடத்தில் கேரளம் இருக்கிறது. கேரளாவிலே
100-க்கு 64 பேர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள், அதற்கு
அடுத்தப்படியாக நாம். மற்றவர்கள் எல்லாம். நமக்குப்
பின்னாலே எங்கெங்கோ இருக்கிறார்கள். அங்கே போக வேண்டாம்
என்று எடுத்துச் சொல்லி, இப்போது இதனைக் கொண்டு
வந்திருப்பதன் நோக்கம் நல்ல நோக்கம் தான் என்பதை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய தப் போன்று அதையெல்லாம் அவர்களாகவே எடுத்துக் கொள்ளக் கூடாது. அதற்கு முன்னாலே அரசாங்கத்தின் அனுமதியைப் பெற வேண்டும். அவர்கள் விரும்பியபடி 500 ஏக்கர் நிலங்களை எடுத்துக்கொள்வோம் என்றால் நம் அனுமதிக்க மாட்டோம். என்ன காரணத்திற்காக கேட்கிறார்களோ, எவ்வளவு அனுமதிக்க வேண்டுமோ அவ்வளவுதான் அனுமதிப்போம். அதற்கெல்லாம் வரையறை செய்யப்பட்டிக்கிறதென்று சொல்லி இந்தத் திருத்த சட்டமுன்வடிவை ஏற்றுக்கொள்ளும்படியாக கேட்டுக் கொள் கிறேன்.

திரு. கோ. வீரய்யன் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன். 5-3-1972-ம் தேதியில் நிறைவேற்றப்பட்ட திருத்தத்தைப் பற்றி சொன்னார்கள். அது பூராவும் 40, 25, 20 வரம்பு என்பது விவசாய நிலங்கள் தான். பொறியியல் கல்லூரிக்கு 100 ஏக்கர், 150 ஏக்கர் என்று சொல்கிறபோது கட்டிடங்களாக வைத்துக் கொள்வதற்கு அந்தச் சட்டம் சொல்லவில்லை. விவசாய நிலங் களை வைத்துக்கொள்ளலாம் என்று தான் சொல்லப்பட்டிருக் கிறது. ஆகவே அந்தச் சட்டத்தை இதற்காக திருத்த வேண்டிய தில்லை என்பது தான் என்னுடைய கருத்து. மாண்புமிகு அமைச்சர் அவர்களை இது குறித்து விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் சொன்ன கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கோப்பிலே தெளிவாக எழுதி இருக்கிறார்கள். நஞ்சைப் பயிர்கள் பயிரிடுகிற நிலத்தை எக்காரணத்தைக் கொண்டும், எந்த அளவிற்கும் எடுக்கக் கூடாது என்று குறிப் பிட்டிருக்கிறார்கள். கூடுமானவரையில் பயன்படாத நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டும், புஞ்சை நிலங்களை எடுத்துக் கொள்ளவேண்டுமென்றும் சொல்லி இருக்கிறார்கள். இப்போது இடம் கொடுத்திருக்கிறோமே தவிர அவர்கள் அபரிமிதமாக நஞ்சை நிலங்களை வாரிக் கொள்ளலாம் என்ற நோக்கமில்லை. எப்படி வருகிறதென்றால் இன்றியமையாத பணிகளுக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். உதாரணமாக சொல்ல வேண்டுமென்றால் கரூர்-தூத்துக்குடி அகல ரெயில் பாதை போடுகிற போது சில இடங்களில் புஞ்சை நிலங்களை எடுக்கிறபோது, அங்கே கொஞ்சம் நஞ்சை நிலங்களையும் எடுக்க வேண்டிய அவசியம் வருகிறது. இல்லாவிட்டால் ரெயில் பாதையை நாம் திருப்பி விட முடியாது. அப்படிப்பட்ட இடங்களில் நாம் எடுக்கவேண்டிய அவசியம் வந்து எடுக்கிறோமே தவிர வேறல்ல.

(பிற்பகல் 12-40)

கூடுமானவரையிலும், மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற கருத்தினுடைய அடிப்படையிலே ஒரு பக்கம் இருக்கிற நஞ்சை நிலங்களை நாம் பெருக்கிக் கொண்டு வருகிறோம். கோடிக்



கணக்கான ரூபாய்களைக் கொண்டு அணைகளைக் கட்டி, சில ஆயிரம் ஏக்கர்களிலே தண்ணீர் பாயச் செய்து, பயிர்களை விளைவித்துக் கொண்டு வருகின்றபோது, மற்றொரு பக்கம் நாம் நஞ்சை நிலங்களை நம் பார்த்துக் கொண்டே வந்தால் தம்முடைய உணவுப் பிரச்சனை எதிர்காலத்திலே பாதிக்கப் படும் என்ற நிலைமை இருக்கிறது. கூடுமான வரையில் வீடுகள் கட்டுகின்ற நிலைமைகளுக்குக் கூட பயன்படுத்தக்கூடாது என்று கூடுமான வரையிலும், அதை எடுக்கக்கூடாது, அப்படிப்பட்ட சில பைல்கள் வருகின்றபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட எழுதியிருக்கிறார்கள். புஞ்சையை மட்டும் எடுங்கள், நஞ்சையை எடுக்க வேண்டாம் என்று. ஆகவே அந்தப் புஞ்சையிலே எவ்வளவு காரியங்கள் செய்ய முடியுமோ, அதிலேயே காரியங் களைச் சுருக்கிக் கொண்டு, அடக்கிக்கொண்டு செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள் அந்த உணர்விற்கு அரசு மதிப்பு அளிக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல்சமது: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய சபை முன்னவர் அவர்கள் தெரிவித்த கருத்தினுடைய அடிப்படையிலே ஒரே ஒரு சிறிய வேண்டுகோள். நாம் எல்லாம் மதிக்கக் கூடிய பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்களுடையபெயரால் நிறுவப்பட்டுள்ள ஒரு அறக்கட்டளைக்கு பல் நூறு ஏக்கர் நிலங்கள், அதற்காக வசைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அதை வைத்து எதிர்காலத்திலே கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் எல்லாம் தோற்றுவிப்பதற்கு. அந்த எண்ணத்தோடு வைத்திருக்கிறார்கள். இந்த டிரஸ்டுக்குச் சொந்த மான நிலத்தை அங்கீகரிப்பதிலே சில இடர்பாடுகள் இருப்பதாக நான் அறிகிறேன். அதை முன்னவர் அவர்களும் மாண்புமிகு முதல்வர் அவர்களும் பெருமனதோடு அந்த டிரஸ்டுக்கு உரிய நிலத்தை கையகப்படுத்தி, அதற்கு உரிமைப்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்துல்சமது அவர்கள் எடுத்துச் சொல்லிய கருத்துக்களைப் பற்றி முழு விவரம் சொல்கிற நிலையில் இப்போது நான் இல்லை. அவர்கள் கூறிய கருத்தை அடிப்படையாக வைத்து, அந்த அடிப்படையிலே வைத்து கண்டறிந்து, அதிலே நியாயம் இருக்குமானால், அந்த நியாயத்தினுடைய அடிப்படையிலே சொல்லலாம். ஆனால் இந்த அறக்கட்டளைகளைப் பற்றிச் சொல்லவில்லை. பல்வேறு அறக்கட்டளைகள் எல்லாம் இருக் கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்வது போன்று, தப்பித்துக் கொள்வதற்காக இருக்கின்ற அறக்கட்டளைகள் ஏராளமாக இருக்கின்றன.

வரிசையாக ரிஜிஸ்ட்ரேசன் பண்ணுவதற்காக இதிலே உயர்ந்த லாப்டி ஐடியல்ஸ் என்பார்களே, உயர்ந்த நோக்கங்களை வரிசை யாகப் போட்டுவிட்டு, அதிலே எப்படி உள்ளே நுழைந்து தாங்கள் வாழலாம் என்பதற்கான வசதிகளைப் புகுத்துபவர்கள் இங்கே வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறக்கட்டளைகளை

136426

எல்லாம் நோக்கம் நிறைவேற்றுவதற்கு என்ன செய்யலாம் என்பதையும், அதை நடைமுறைபடுத்துவதற்கு என்னசெய்யலாம் என்பதையும் இங்கே வேறு ஒரு வகையிலே. வேறு வகைகளின் தன்மைகளிலே நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால் நியாயமாக பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்ற நோக்கத்தோடு நிறுவப்பட்ட அறக்கட்டளைகள் பலப்பல இருக்கின்றன. அவற்றுக்கு ஊக்கம் தருகிறோம். ஆனால் அவற்றை நிறைவேற்றாமல் இருக்கிற அறக்கட்டளைகளை வழிப்படுத்துவதற்கு என்ன செய்யலாம் என்பதையும் யோசித்துக் கொண்டு இருக்கிறோம். அதை அரசு 19-வது விதியின் கீழே அரசியல் அமைப்புச் சட்டத்தின் கீழே புகுந்து கொண்டு சுப்ரீம் கோர்ட் வரையிலும் போய்விடுகிறார்கள். இதையெல்லாம் சரிப் படுத்துவதற்கும் உயர்ந்த வழக்கறிஞர்களையும் சட்டத் துறையையும் கலந்து அதற்கு தனி நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு எண்ணிக்கொண்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:

''1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 44/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நிலத்தின் மீது உச்சவரம்பு நிர்ணயித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 44/1985) நிறை வேற்றப் பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.





பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1985.)

(உ) நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1985.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பும் முறைப்படுத்துதலும் திருத்தச் சட்ட முன்வடி)* (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1985) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறவேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலஉச்சவரம்பு முறைப்படுத்துதல் சட்டத்தில் தற்போது உள்ள வகைமுறைகளின் படி பொது அற அல்லது சமய பொறுப்பாட்சி அமைப்புக்கள், டிரஸ்ட்டுகள், கல்வி நிலையங்கள், மருத்துவமனைகள் தொழில் நிலையங்களும் பொறுப்பாட்சி அமைப்புகளின் நோக்கங்களை மேம் படுத்துகின்ற நோக்கத்திற்காக அல்லது அத்தகைய கல்வி நிலையங்களில், கல்வி தொடர்பான நடவடிக்கைகளை விரிவுபடுத்துகின்ற நோக்கத்திற்காக அல்லது அத்தகைய தொழில் நிறுவனத்தில் தொழில் வளர்ச்சியை காப்பாற்றுகின்ற அல்லது நிலையைப் பேணுகின்ற நோக்கத்திற்காக காலி நிலம் எதையும் விற்பனை செய்ய முடியாது. அத்தகைய பொது அற அல்லது சமய பொறுப்பாட்சி அமைப்புகளின் கல்வி நிலையங்களும், மருத்துவமனைகளும் தொழில் நிறுவனங்களும் தாங்கள் வைத்திருக்கிற காலி நிலத்தை முழுமையாகவோ பகுதியாகவோ, விற்பனை செய்வதற்கு உள்ள தடையானது மேற்சொன்ன, பொறுப்பாட்சி அமைப்பு, கல்வி நிலையம், மருத்துவமனை மற்றும் பொது நிறுவனத்தின் வளர்ச்சிக்கு இடையூறாக இருக்கிறது என்பதாக வரப்பட்டன.

எனவே ஒரு கல்வி நிலையமோ, ஒரு மருத்துவ மனையோ தொடங்குவதற்கோ அல்லது பொறுப்பாட்சி அமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கோ பொது அற அல்லது சமய பொறுப்பாட்சி அமைப்பின் விஷயத்தில் அதற்கு போதுமான நிதி ஆதாரங்களை அவை பெற்று இராத போது தான் வைத்து இருக்கும் காலி நிலத்தை முழுமையாகவோ, பகுதியாகவோ, விற்பனை மூலமாகவோ, அடைமானம் மூலமாகவோ, குத்தகை மூலமாகவோ, அல்லது வேறுவிதமான உரிமை மாற்றம் செய்வதற்கு அந்த பொறுப்பாட்சி அமைப்பின் கல்வி நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகியவைகள் அனுமதி கேட்டு அரசுக்கு செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் பேரில் அரசால் வழங்கப்பட்டுள்ளது என்ற நோக்கங்களை இது மிகையாக கொண்டது.

---

*1985 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 16 ஆம் நாள் தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஆகவே, முதலில் கொண்டு வந்த சட்டம் கிராமப்புறத்தில் இருக்கிற நிலங்களை தங்களுக்கு தேவையான அளவுக்கு கையகப் படுத்துகின்ற ஒன்று. இது ஓரளவுக்கு தங்களிடம் இருக்கின்ற நிலங்களை விற்பதற்கு நாம் உரிமை தந்து அதனை கல்வி நிலையத்திற்கோ மருத்துவ மனைகளுக்கோ பயன்படுத்த வேண்டும்.

தொழிற்சாலைகள் நடத்த முடியாத அளவுக்கு ஆகி நட்டம் ஏற்பட்டு இருக்கிறது என்ற கணக்கு காட்டி மூடுகின்ற சூழ்நிலை வரும்போது இதை விற்று நாங்கள் ஓரளவுக்கு நடத்துகிறோம் என்ற சூழ்நிலை சில பல வகைகளில் வருவதன் காரணமாக அவர்களுக்கு உதவி செய்து தொழிற்சாலைகளை நிலை நாட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆக தொழில் இயங்குவதற்கு, தொழிலாளர்கள் பாதிக்காமல் இருப்பதற்கு வகை செய்வதற்காகத் தான் அரசு ஆராய்ந்து பார்த்து தேவையான அளவுக்கு அதில் உண்மையும், நியாயமும் இருக்குமானால் தான் அதை ஏற்றுக்கொள்ளுவது என்ற விதிமுறையின் அடிப்படையில் இந்த சட்டங்கள் கொண்டு வரப்பட்டு இருக்கின்றன. இதற்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய இசைவை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வில் இருந்துகொண்டு இருக்கின்ற சட்டதிருத்த முன்வடிவின் மூலமாக 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அர்பன் லேண்டு சீலிங் ரெகுலேஷன் ஆக்ட்டுக்கு 21-ஏ என்ற சட்டப் பிரிவு புதிதாகக் கொண்டு வரப்படுவதற்கான முயற்சி அரசால் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆனால் 21-ஏ சட்டப் பிரிவு கொண்டு வரப்படும் என்று சொன்னால் அதன் காரணமாக பல்வேறு விரும்பத்தகாத சம்பவங்கள் பிற்காலத்தில் நடந்து விடக் கூடாது என்பதற்காக அதை நாங்கள் கண்டிப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம். அந்த 21-ஏ சட்டப் பிரிவு மூலமாக காலி நிலங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ, பொறுப்பாட்சி அமைப்புகள் விலைக்கு கொடுக்கலாம் என்ற ஒரு உரிமை இதிலே கொடுக்கப்பட்டு இருக்கிறது. காலி நிலங்கள் எந்த நோக்கங்களுக்கு விலைக்குக் கொடுக்கலாம் என்று நோக்கங்களாகச் சொல்லப்பட்டுள்ளவைகள் எல்லாம் நல்ல நோக்கங்கள் என்பது போல் தோற்றம் அளித்தாலும், ஊர்களில் ஒரு பழமொழி சொல்வார்கள் 'விற்க தொடங்கியவன் நிலத்தையெல்லாம் விற்ற பிறகுதான் ஓய்வான்' என்று சொல்வார்கள். அதேபோல் விற்பதற்கு அனுமதி கொடுத்தால் அல்லது விலைக்குக் கொடுக்கலாம் என்று சொல்லுகின்ற உரிமை கொடுக்கப்பட்டால் அது ஒரு விபரீத விளைவை உருவாக்கி விடுமோ என்று நாங்கள் அஞ்சுகிறோம்.

பொதுவாக பொது அற அல்லது சமய பொறுப்பாட்சி அமைப்புகளின் சொத்துகளை விற்பதும் அதற்கு அனுமதிப்பதும் அதற்கு சட்டங்களை கொண்டு வருவதும் பொறுப்பாட்சி அமைப்புகளின் அடிப்படையையே தகர்த்து விடும், வெடிகுண்டாக மாறி விடக் கூடாது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று நான் வேண்டுகிறேன்.



ஒரு மோசமான முன் உதாரணத்தை பிற்காலத்தில் பிரச்சினைகளை உருவாக்கும் நிலைமைகளை இந்தச் சட்டம் ஏற்படுத்தி விடும் என்று நாங்கள் அஞ்சுகிறோம். ஏதோ ஒரு யானை ஏதோ ஒரு தோற்றத்தில் பின்னால் வரப்போகிறது. அந்த யானையின் வருகை ஒரு சில மதத்தைச் சார்ந்தவர்களை புண்படுத்தப் போகிறது. அதற்கு கட்டியம்கூறுவது போல் வருகிற மணி ஓசையாகத்தான் இந்தச் சட்ட திருத்த முன்வடிவு வந்து இருக்கிறது என்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இன்றைக்கு ஆலயங்களின் நிலங்களை கூட விலைக்குக் கொடுக்கலாம் என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது இந்த சட்ட திருத்த முன்வடிவின் மூலமாக.

இப்படி ஆலய நிலங்களை விலைக்குக் கொடுக்கலாம் என்ற நிலைமை ஏற்படும் என்று சொன்னால் அதற்கான சட்ட திருத்தங்கள் வருவது வரவேற்கப்படும் என்று சொன்னால் ஆலயங்களில் இருந்து கொண்டு இருக்கும் திருவிளக்குகள் வருங்காலத்தில் இருக்காது, எரியாது என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். ஆலய நிலங்களை விலைக்கு கொடுப்பதன் மூலமாக அதற்குப் பின்னால் சில பேர் இருந்து கொண்டு தங்களுடைய பணப் பசியைத் தீர்த்துக் கொள்வதற்கு அது வழி வகுத்து விடும் என்று நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆலய நிலங்களை சில துறைகளோ அல்லது அரசாங்கமோ இன்றைக்கு கையில் வைத்து அதை நிர்வகிக்கிறது என்று சொன்னால், தங்களுடைய சொந்த சொத்தாக, சொந்த நிலமாக மனதில் நினைவு கொண்டு அவைகளை அரசாங்கமோ அல்லது துறைகளோ நிர்வாகம் செய்து கொண்டு வரவில்லை.

(முற்பகல் 12-50.)

எப்படி மைனருக்கு தந்தையோ அல்லது வேறு சிலரோ கார்டியனாக இருந்து, அந்த மைனராக இருப்பவன் வளர்கிற வரை, அவனுடைய உணர்வுகளைப் போற்றுகிற வகையில், அந்த நிலங்களைப் பாதுகாக்க வேண்டும் என்று மரபு இருக்கிறதோ, அதைப்போல, இந்து ஆலய நிலங்களுக்கு மைனருக்கு கார்டியன் இருப்பது போல, சில குறிப்பிட்ட துறைகளும், அரசாங்கமும் இருந்து கொண்டிருக்கிறது.

ஆகவே. இன்றைக்கு மைனராகக் கருதப்படுகிற அல்லது நிர்வாகத்திலே ஊழல் செய்து விடுவார்கள் என்று கருதப்படுகிற, அல்லது நிர்வாகமே செய்யத்தெரியாது என்று கருதப்படுகிற இந்து சமுதாயம், அந்தக் குறைகளைப் போக்கிக் கொண்டு தன்னை மைனர் பருவத்திலிருந்து மேஜராக மாற்றிக் கொள்ளும் என்று சொன்னால். அன்றைக்கு, இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கையில் அல்லது வேறு சில துறைகளின் கையில் இருக்கின்ற ஆலய நிலங்கள் இன்று இருப்பது போல, கொடுக்கப்படுவதற்கு நாம் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; கொடுக்க வேண்டும்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1985 ஜூலை 17

இந்தச் சட்ட முன்வடிவை ஏற்றுக் கொண்டால், அந்தக்
கொள்கை தகர்ந்து போகும். ஆலய நிலங்கள் பறிபட்டு
போகும். ஆலயங்கள் வான் முட்டுகின்ற அளவுக்கு கோபுரங்
களைக் கொண்டிருந்தாலும், அங்கே வாடிக் கொண்டிருக்கின்ற
எலும்பும், தோலுமாக இருக்கிற ஆலயப் பணியாளர்கள்,
ஊழியர்கள், அவர்களுடைய வாழ்க்கையை இழந்து விடுவார்கள்.
அவர்களுடைய குடும்பங்கள் வறுமையிலே அழிந்துவிடும்.
ஆகவே, ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கிற
இந்து மதம் அழிந்து போகும். அந்த மதத்தை ஆதாரமாகக்
கொண்டிருக்கிற இந்து தர்மம் அழிந்து போகும். அதனால்
நாட்டுக்கு ஆபத்து வரும். ஆகவே இந்தச் சட்ட திருத்த முன்
வடிவை அரசாங்கம் மறு பரிசிலனை செய்ய வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. வி. பி. சிந்தன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்
அவர்களே, முன்னவர் அவர்கள், அவருக்கே உரிய பாணியில்
பேசுகிற திறமையைப் பயன்படுத்திக் கொண்டு, இந்தச் சட்டம்
கொண்டு வருவதினுடைய நோக்கமாக ஒரு விளக்கத்தைக்
கொடுத்தார். மருத்துவமனையும் தேவை. கல்லூரிகளும் தேவை;
ஏராளமான கல்வி நிலையங்கள் தேவை. அதே முறையில்,
இன்னும் பொது நலனுக்கு பயன்படுத்துவதற்காக நிலத்தை
எடுப்பதற்குள்ள அதிகாரத்தைத்தான் நாங்கள் இந்தச் சட்டத்
திலே கொடுக்கிறோம் என்று சொன்னார். நீங்கள் அத்தகைய
ஒரு நோக்கத்தோடு மட்டும் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால்
நானும், நான் சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும்
உங்களுக்கு முழுமையாக் ஆதரவு கொடுப்பதற்கு தயார்.

ஏராளமான கல்வி நிலையங்கள் நமக்குத் தேவை. மருத்துவ
நிலையங்களும் தேவை. இன்னும் தொழில் வளர்ச்சிக்குத்
தேவையான இடங்கள் இல்லாமல், அந்தக் காரணத்தினால் சில
தொழில்கள் விரிவு அடைய முடியாத சூழ்நிலையில் கஷ்டப்
படுகிற நிலையும் எங்களுக்கு நன்கு தெரியும். அதற்கு எல்லாம்
தேவையான நிலத்தை எடுத்து வழங்கவேண்டும். ஆனால் யார்
வழங்குவது என்ற பிரச்சினையைத் தான் நான் கேட்க விரும்பு
கிறேன்.

அரசே ஏற்று, நீங்கள் வழங்க வேண்டும். அரசின் மூலமாக
அது வழங்கப்பட வேண்டும். அதற்கான எந்த வசதியும் இந்தச்
சட்டத்திலே இல்லை.

இப்போது இந்தச் சட்டத்திலே நீங்கள், அரசியல் சட்டத்தி
னுடைய, கான்ஸ்டிடியூஷனுடைய 39 (பி) (சி) பிரிவு பற்றி
இங்கே குறிப்பிட்டு, அந்த (பி) (சி) பிரிவுகளை அமல் நடத்து
வதற்காகத் தான் கொண்டு வருகிறோம் என்று முன்னுரையிலே
குறிப்பிட்டு இருக்கிறீர்கள். நான் அரசியல் சட்டத்தைத் திருப்பி
படித்துப் பார்த்தேன்.



1985 ஜூலை 17] [திரு. வி. பி. சிந்தன்]

(பி)-பொது நலனைக் கருதியும், (சி)-அதிகமான நிலக்
குவியல்கள் இல்லாமல் அரசுக்கும் ஆகத்தான் அந்த 39 பி, சி
கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த நோக்கத்தை
நிறைவேற்றுவதற்கு இது பயன்படுமா? கல்வி நிலையங்களுக்கு
மட்டும்தான் இந்தச் சட்டமா? நான் நேரத்தை அதிகமாக
எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. நானும் அங்கே பார்த்துக்
கொண்டிருக்கிறேன்.

இந்தச் சட்டத்திலே இரண்டாவது பக்கத்திலே நீங்கள்
குறிப்பிடுவது, "(i) Promoting the objects of the public charitable
or religious trust (including wakf) or for the purpose of permain-
tenance or preservation of the public charitable or religious trusts
(including wakf):" or என்பதாகும்.

மத அமைப்பு, மதஸ்தாபனங்கள்—உடைய அமைப்புக்களை
பாதுகாப்பதற்கும், பரிபாலனம் செய்வதற்கும் இந்த நிலத்தை
விற்பதற்குள்ள அதிகாரத்தையும் நீங்கள் வழங்குகிறீர்கள்.
கல்விக்கானால், 'யெஸ்', தொழில் வளர்ச்சிக்கானாலும், 'யெஸ்,
யெஸ்'. மருத்துவமனைகள் வேண்டுமானாலும்—அதிகமாக
மருத்துவமனைகள் வேண்டும் என்று உங்கள் மூலமாக, மதிப்பிற்
குரிய முதலமைச்சர் அவர்களும் இங்கே இருக்கிற காரணத்தி
னாலே ஏராளமான மருத்துவமனைகளும், பள்ளிக்கூடங்களும்
நமக்குத் தேவை என்று வலியுறுத்துகிறேன்.

நான் வலியுறுத்துவதெல்லாம், இந்தச் சட்டத்திலே உள்ள
அந்தப் பகுதிகள் துர்விநியோகிக்கப்படுவதற்கு இடமளிக்கும்.
புஷ்பம் கல்லூரி என்று ஒரு கல்லூரி உண்டு. நாவலர் அவர்
களுடைய மாவட்டத்தைச் சேர்ந்ததாலே அவர்களுக்கு அந்தப்
பற்றி நன்றாகத் தெரியும். அதற்குத் தேவையான நிலத்தை
மட்டும்தானா அவர்கள் வைத்திருக்கிறார்கள். அண்ணாமலைப்
பல்கலைக் கழகம் அவர்களுக்குத் தேவையான நிலத்தை மட்டும்
தானா வைத்திருக்கிறார்கள். அதை அவர்கள் விற்பார்களாம்.
அவர்களுக்குத் தேவையான நிலத்தைக் கொடுத்து விட்டு,
பாக்கியை அரசு ஏற்றுக்கொண்டால் அதில் எனக்கு ஆட்சேபனை
இல்லை. அவர்கள் விற்பது என்றால், தமிழகத்தில் உள்ள
கோயில்களினுடைய நிலங்கள் எவ்வளவு இருக்கின்றன என்று
சம்பந்தப்பட்ட அமைச்சரவர்கள் இருந்திருந்தால் நான் கணக்கு
கேட்டிருப்பேன்.

அந்தக் கணக்கு எனக்குத் தெரியாது. ஆயிரக்கணக்கான
ஏக்கர் நிலம் அவர்களிடம் உண்டு. அந்த நிலங்களிலே இன்றைக்கு
குடியிருப்பவர்களின் நிலைமை என்ன ஆகும்? அவர்கள் நிச்சய
மாக அப்புறப்படுத்தப்படுவார்கள். கல்லூரிக்கு வாங்குகிறேன்
என்று நான் மனு போட்டால் அமைச்சர், அரசு அதைக்
கவனித்து கல்லூரி அமைப்பதற்கு அந்த நிலத்தை வாங்குவதற்கு
உரிமை எனக்கு வழங்கப்படும். எவ்வளவு ஏக்கரில் என்று
இல்லை, வாங்கினால் கல்லூரி கட்டியிருக்கலாம், கட்டாமலும்
இருக்கலாம். ஒரு வேளை நான் பேசி முடிந்தபிறகு, ஒரு குறிப்
பிட்ட காலத்தில் செய்யவில்லை என்றால் என்ன நிலை என்பதை

படித்துப் பார்த்தேன், அது தெரியாமல் சொல்லவில்லை. அப்படி நிலத்தைத் துர்விநியோகம் செய்ய, ஏழை எளியவர் களுக்கு அந்த நிலம் கிடைக்காமற்போகும் வழிதான் ஏற்படுத்தப் படும். மன உணர்வுகளைப் புண்படுத்த வேண்டுமென்பதற்காக சொல்லவில்லை, சமது அவர்கள் இங்கே இல்லை, நான் மத உணர்வுகளைப் புண்படுத்துவதற்காகச் சொல்லவில்லை. முஸ்லிம் மத அல்லது கிறித்தவ மத அல்லது இந்து மத நிறுவனங்களுக்குத் தேவைக்கு மேலான நிலம் உண்டு. யதார்த்த நிலைமை. இவ்வளவு நிலங்கள் அவர்களுக்குத் தேவை இல்லை. மதிப்பிற் குரிய முன்னவர் அவர்கள் இரஷ்யாவைப்பற்றிக் குறிப் பிட்டார்கள்:

அங்கேயும் கோயில்கள் உண்டு, பக்தர்கள் கோயில்களுக்குச் செல்கிறார்கள், செல்லத் தடை இல்லை, கோயில் செலவுகளை யெல்லாம், விளக்கு எரிப்பதிலேயிருந்து விழா நடத்துவது வரை அந்த பக்தர்கள் நடத்துகிறார்கள், அவர்கள் தேவைக்கேற்ற முறையிலே. நம் அவையெல்லாம் இங்கே அமல்படுத்த வேண்டு மென்றால் அதற்கு உள்ள உணர்வும் பக்குவமான நிலையும் இங்கே ஏற்படவில்லை என்று சொன்னதை நான் நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன். மத ஸ்தாபனங்கள் என்றும், சாரிட்டபிள் டிரஸ்ட் என்றும் சொல்லிக் கொண்டு இவர்கள் துர்விநியோகப் படுத்துகிறார்கள். சபைத் தலைவரவர்களே, நான் உங்கள் மூலமாக முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன், பி.எஸ்.ஜி. குருப் கோவை, அவர்கள் கல்வி நிறுவனங்களை நடத்துகிறார்கள்; சிறந்த தொழிற்சாலைகளை நடத்துகிறார்கள். அவர்கள் கல்வி நிறுவனங்களையும், தொழிற் சாலைகளையும் நடத்தட்டும்; அதற்காக வாழ்த்துகிறேன். ஆனால், அவர்கள் வைத்திருக்கும் நிலம் எவ்வளவு? பச்சை யப்பன் டிரஸ்ட் பற்றி பெரிய விவாதம் வந்தது முன்னவர் களுக்குக் கூடத் தெரியும். அதில் நானும் கலந்து கொண்டேன். பச்சையப்பர் அவர்கள் இன்றைக்கு உயிரோடு இருந்திருந்தால் கண்ணீர் விட்டிருப்பார் என்று அன்றைக்கு நான் சொன்னதை நினைவுக்குக் கொண்டு வருகிறேன். யார் விற்பார்கள்? யார் விற்றார்கள்? யாருக்கு விற்றார்கள்? இந்தப் பச்சையப்பன் கல்லூரியை விரிவுபடுத்து வதற்காக அந்த நிலத்தைப் பயன்படுத்திக் கொள்வதை நான் ஆட்சேபணை செய்யவில்லை. அதற்கு இன்றையதினம் இந்தச் சட்டமே தேவையில்லை. அதே நிலையில்தான் டிரஸ்டுகளின் நிலையும்.

நான் அதிக நேரம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. இந்த ஆபத்து இந்தச் சட்டத்திலே உண்டு அரசியல் சட்டம் 39 பி. சி பிரிவுகள் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கின்ற அரசு என்பதால் தான் நான் இவ்வளவும் சொல்கிறேன். இது நிலக் குவியலுக்கு வழிவகுக்கும், சிலருடைய கைக்கு அந்த நிலங்கள், கல்லூரியின் பெயரால், டிரஸ்டுகளின் பெயரால்—எத்தனை டிரஸ்டுகள் தமிழகத்திலே உருவாக்கப்பட்டிருக்கின்றன என்ற கணக்கை என்னைவிட தெரிந்தவர்கள் முன்னவர் அவர்கள். அந்த டிரஸ்டுகள் இன்றைக்கு ஏராளமான நிலங்களை வைத்திருக்



கின்றன. இன்னும் ஏதேனும் பெயரைச்சொல்லி அரசிடம் அனுமதி பெற்று அதை விரிவு படுத்தும், concentration of land holdings will not be preventoa. இதற்குப் பதிலாக அதை ஊக்குவிக்கும் நிலையில் செல்லும். இதை எதிர்க்கின்ற நேரத்திலே கல்வி வளர்ச்சி யையோ தொழில் வளர்ச்சியையோ அல்லது மற்ற பல முன்னேற் றங்களை எதிர்க்கும் வரிசையிலே இங்கே தயவு செய்து போட்டு விடாதீர்கள். அவையெல்லாம் இன்னும் அதிகமாக வர வேண்டும் என்ற எந்த நடவடிக்கையை நீங்கள் எடுத்தாலும் இரு கரங்களையும் கூப்பி ஆதரவு தருவதற்கு நாங்கள் தயார் என்பதைச் சொல்லி இந்தச் சட்டத்திலே உள்ள இந்தக் குறை பாடுகளைத் தீர்க்க வேண்டுமென்று முன்னவரவர்களைப் பணி வன்போடு வேண்டிக் கொள்கிறேன், வணக்கம்.

(பிற்பகல் 1-00)

திரு. மா. சின்னராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிறிய விளக்கத்திற்காகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் சிந்தன் அவர்கள் பல அறக்கட்டளை களைப் பற்றிச் சொன்னார்கள், பெயர் சொல்லாமல். ஆனால், பி.எஸ்.ஜி.க்கு எவ்வளவு நிலம் என்று சொல்லிவிட்டு, அப்படியே விட்டுவிட்டார்கள். பி.எஸ்.ஜி.யைப் பொறுத்த அளவிலே அது பல கல்வி நிலையங்களைத்தான் நடத்தி வருகிறது. நான் உள்ளூர்க்காரன் என்ற முறையில் சொல்கிறேன். அங்கே விவசாய நிலங்கள் மற்ற பயன்களுக்காகப் பயன்படுகிற அளவுக்கு இல்லை என்பது எனக்குத் தெரிந்த விவரம். அவர், ஏதாவது அவர்களுடைய நில அளவுகளைக் கையிலே வைத்துப் பேசி இருக்கிறாரா? அப்படி இல்லை என்றால், அது ஒரு சந்தேகத்தைக் கிளப்புவதாக இருக்கிறது. அது தேவையில்லை என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நிதி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கக்கூடிய தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு சட்டத்தின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தச் சட்டத்தில், கல்வி, மருத்துவமனை இப்போர்ப்பட்ட காரியங்களுக்கு மனைகளை விற்று, அதிலே வரக்கூடிய இலாபங்களை வைத்து மேலும் விஸ்தரிக்கலாம் என்று விவரங்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி, கல்வி, மருத்துவமனை போன்ற மக்களுக்குத் தேவையான காரியங்களுக்கு மேன்மேலும் அபிவிருத்தி செய்வதில், யாருக்கும் கருத்து வேறுபாடு இடையாது. ஆனால், தொழில் நிறுவனங்கள் கூட விற்றுக் கொள்ளலாம் என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், 1961-ம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டத்தினை உருவாக்குகிறபொழுது, அன்றைக்குக் கல்வி என்ற பெயரால், அறக்கட்டளை என்ற பெயரால், இன்னும் டிரஸ்டுகள் என்ற பெயரால், இப்படி பல்வேறு வகையான ஓட்டைகளைச் சட்டத்தில் கொடுத்து, அந்த ஓட்டைகளின் பெயரால் பல்வேறு பெரிய நிலப்பிரபுக்கள் இன்னமும் தஞ்சை மாவட்டத்தில்

[திரு. பொ. உத்திராபதி] [1985 ஜூலை 17

எடுத்துக்கொண்டாலும், இந்தியாவில் இருக்கிற பெரிய அரசியல் வாதிகள் என்று சொல்லக்கூடியவர்கள் கூட, 15 ஏக்கர் என்ற பெயரால் சட்டத்திற்குள் நுழைந்து, பல்வேறு நபர்கள் நிலத்தை வைத்திருக்கிறார்கள் என்பதெல்லாம் அரசாங்கத்திற்குத் தெரியும்.

அதேபோல், அறக்கட்டளை என்ற பெயரால், கல்வி என்ற பெயரால், இப்படி நிலத்தையெல்லாம் பிரித்து, ஒரே மனிதர் பல்வேறு நபர்கள் பெயரால், பதுக்கி வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அந்த நிலத்தை எடுப்பதற்குத்தான் இந்த சட்ட சபையில் நாம் சட்டம் இயற்றி மத்திய சர்க்காருக்கு அனுப்பினோம். அதற்கு அனுமதி தர மத்திய சர்க்கார மறுத திருக்கிறார்கள். இப்பொழுது இந்தச் சட்டத்திருத்தத்தில் தொழில் நிறுவனங்கள் கூட விற்றுக் கொள்ளலாம் என்று சொல்கிறார்கள். நமது நிதி அமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் சொன்னார்கள், 90 சதவிதம் சொத்துக்கள், 10 பேர்கள் கையில் சிக்கிக் கொண்டிருக்கிறது, மாட்டிக் கொண்டிருக் கிறது என்று சமீபத்தில் சொன்னார்கள். அப்படி இருக்கும்போது தொழில் நிறுவனங்கள் என்றால், சாதாரணமானவர்கள் தொழில்கள் நடத்த முடியாது. டாட்டா. பிர்லா போன்றவர்கள் தான் பெரிய, பெரிய நிறுவனங்கள் வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் நிறுவனங்கள் பெயரால் ஆயிரக்கணக் ான ஏக்கர் நிலங்களை, சட்டத்தின் பெயரால் மறைத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்குப் பாதையைத் திறந்துவிடக் கூடிய அளவுக்கு, வாழவைக்கக்கூடிய அளவுக்கு இடம் கொடுக்கும் இச்சட்டத் திருத்தம்.

இதற்கு முன்னால் வந்த சட்டத் திருத்தத்தில் மாண்புமிகு உறுப்பினர் வீரய்யன் அவர்கள் கேட்டபொழுது, நிதி அமைச்சர் அவர்கள், நாம் கொண்டு வந்திருக்கிறோம், இதற்கு இடம் இருந்தாலும் அனுமதி அளிக்கமாட்டோம் என்று சொன்னார்கள். சட்டத்தில் குறைந்த அளவு ஓட்டை கொடுத்துவிட்டாலே, அதில் பெரிய மனிதர்கள் புகுவதற்குப் பெரிய இடமாக மாற்றி விடுவார்கள். சட்டத்தில் இருக்கிற ஓட்டைகளைப் பல்வேறு உதாரணங்களுடன் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்த அடிப்படையில் நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவு, மருத்துவ மனைகளுக்கோ, கல்வி நிலையங்களுக்கோ, இன்னும் பொது மக்களுக்குத் தேவையான காரியங்களுக்கோ என்றால் நிச்சயமாக நாங்கள் ஆதரவு அளிப்போம். இப்படித் தொழில் நிறுவனங்களுக்கு, மறைத்து வைத்திருக்கக்கூடிய நிலங்களை விற்பதற்கு வாய்ப்பு அளிப்பது சரியல்ல. அந்த வாய்ப்பு இல்லாமல் எதிர்காலத்தில் ஓட்டைகள் அடைக்கப்பட அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னால வைக்கப்பட்டிருக்கிற இந்தத் திருத்தச் சட்டத்தினால் சில நன்மைகள் விளையும் என்ற வகையில் நான் வரவேற்கிறேன்.



1985 ஜூலை 17] [திரு. ஆ. கா. அ. அப்துல்சமத்]

பொதுவாக அறநிலையங்களுக்கு சொத்து என்று நகர்ப் புறங்களில் இருந்தாலும் கூட எந்தவிதமான வருவாயும் இல்லாமல், அறநிலையங்கள் ஏற்படுக்தப்பட்ட விழுமிய நோக்கங்களைக் கூட அமுல்படுத்தமுடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் இப்போது கொண்டுவரக் கூடிய திருத்தச் சட்டம் நிறைவேறுவதன் மூலமாக அதற்கான வருவாய் பெருகி, அவர்கள் என்ன நல்ல நோக்கத்திற்காக நிறுவினார்களோ அவற்றை செம்மையாகவும் விரிவாகவும் நடத்து வதற்கு இந்தத் திருத்தச் சட்டம் வாய்ப்பு அளிக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இதை நான் வரவேற்கிறேன்.

இப்படிச் சொல்லும்போது என்னுடைய பக்கத்திலே அமர்ந்திருக்சக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலபல ஐயங்களை எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் எழுப்பி இருக்கக் கூடிய ஐயங்களுக்குப் பயன்படுவதாக இந்தத் திருத்தச் சட்டம் அமைந்துவிடாமல் அரசு எச்சரிக்கையோடு செயல்படும் என்ற எதிர்பார்ப்பும் எனக்கு இருக்கிறது.

உதாரணத்திற்காக என்னுடைய காதில்பட்ட ஒரு உண்மையை நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன். இப்படிப்பட்ட சொத்துக்களை அனுபவிப்பதற்கு அனுமதி வழங்கும்போது அரசு மிகுந்த எச்சரிக்கையாக இருக்க வேண்டும். நம்முடைய நகரிலே அமைந்திருக்கக்கூடிய மிகப் பிரசித்தி பெற்ற ஆலை, பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்கித் தந்த ஆலை, பக்கிங்காம் கர்நாட்டிக் மில். இந்த ஆலை பல ஆண்டுகளாக நஷ்டத்தில் இருக்கிறது. அதன் காரணமாக நம்முடைய தலைநகரில் வாழ்ந்து கொண்டிருக்கிற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மிகுந்த அவதிக்குள்ளாகி யிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு தமிழக அரசும் மெத்த பிரயத்தனம் எடுத்துக்கொண்டிருக்கிறது. பல கோடி ரூபாய் அந்த நிறுவனத்திற்கு கடனாகவும் தந்திருக்கிறது. கொடுத்த கடனை திரும்பப் பெற முடியாத அளவுக்கு நிர்வாகம் மேலும் மேலும் நலிந்து வருகிறதே தவிர அதனுடைய பொருளாதாரம் செம்மைப்படுத்தப்படவில்லை.

இப்படிப்பட்ட நிலையில் சிலபல யோசனைகளைச் சொல்லி யிருக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். பக்கிங்காம் கர்நாட்டிக் மில்லுக்குச் சொந்தமான, வெறுமையாக இருக்கக் கூடிய நிலங்களை எல்லாம் கட்டிடங்கள், வீடுகள் கட்ட விற்று விட்டால் அதன் மூலமாக நிறைய வருவாய் கிடைக்கும் என்ற யோசனையைச் சொல்லியிருப்பதாக நான் அறிகிறேன். ஏற்கெனவே ஏற்பட்டிருக்கிற நிர்வாகக் கோளாறுகளினால் நஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிற அந்த நிர்வாகம், இந்த சொத்துக்களினால் வரக்கூடிய வருமானத்தை அவர்கள் செலவழித்துவிடாமல் அதைத் தடுக்க வேண்டும், பாதுகாக்க வேண்டும். அப்படிப்பட்ட வருமானத்தைக் கொண்டு அந்த மில்லை மேலும் நடத்துவதற்கு இன்னும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து, ஊதியம் வழங்குவதற்கு, அந்த

வகையில் செயல்பட்டு. அதனுடைய பொருளாதாரத்தை பெருக்கிக் கொள்வதற்கு ஒரு அனுமதி வழங்கினால் அது மெத்த பயன் தரக்கூடியதாக, நன்மை பயக்கக்கூடியதாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளவிரும்புகிறேன்.

அதைப்போன்று பள்ளிக்கூடங்களைப் பொறுத்தமட்டில், பல பள்ளிக்கூடங்கள் நகரின் மத்தியிலே, மக்கள் அதிகமாக நெருக்கமாக வாழக்கூடிய பகுதிகளில் பல அடுக்கு மாடி கட்டிடங்களில் நடைபெறுகின்றன. சின்னஞ்சிறு பிள்ளைகள்கூட 3 மாடி, 4 மாடி ஏறி படிக்கின்ற பள்ளிக்கூடங்கள இருக்கின்றன. பள்ளிக்கூடம் இருந்தால் அதற்கென்று விளையாட்டுத் திடல் இருக்க வேண்டும். ஆனால் குழந்தைகள் படிக்கவேண்டும் என்பதற்காக நகர்ப்புறங்களில் இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு அதிலிருந்து விதிவிலக்கு அளித்திருக்கிறோம். அந்தக் கட்டிடங்கள் விற்பனை செய்யப்பட்டால் அவை பல இலட்சம் ரூபாய் பெறும். அதைக் கொண்டு அண்மையில் வெறுமனே இருக்கக்கூடிய நிலங்களை, தரிசு நிலங்களை—அரசும் துணை செய்து—வாங்கி நல்லமுறையில் பள்ளிக்கூடங்களைக் கட்டினால் நல்ல சுகாதார வசதியோடு மாணவர்களும் படிக்க வாய்ப்பு ஏற்படும். அப்படிப்பட்ட அனுமதியை அரசு தாராளமாக வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அறநிலையங்களைப் பற்றிச் சொல்லும்போது நான் மிகவும் மதிக்கக்கூடிய மூத்த சகோதரர் சித்தன் அவர்கள் சிலபல வார்த்தைகளைச் சொன்னார்கள். அவர்கள் சொன்ன வார்த்தைகளில் வெளிப்படையாக இருக்கக்கூடிய கருத்து ஒன்று இருந்தாலும் அவர்களுடைய உள்ளம் எனக்குத் தெரியும்.

(பிற்பகல் 1-10)

அறநிலையங்கள் என்று சொல்லக்கூடியவை எல்லாம் மத வழிப்படி அமைந்திருக்கக்கூடிய காரணத்தாலேயே இன்று முன்னேறி வரக்கூடிய மக்களாலே அது எதிர்க்கப்படத்தக்கது என்ற எண்ணத்தை அவர்கள் கொள்ள வேண்டியதில்லை. ஆயிரம், ஆயிரம் நல்ல காரியங்கள்; ஆயிரம் ஆயிரம் பள்ளிக்கூடங்கள் இன்றும் இந்த அற நிலையங்களால் ஏற்படுத்தப்பட்டு இந்த அறக்கட்டளைகள் மூலமாக நடைபெற்று வருகின்றன. இன்றைய புள்ளி விவரத்தை எடுத்துப் பார்த்தால் கூட அரசின் சார்பாக எத்தனை பள்ளிக்கூடங்களும், எத்தனை கல்லூரிகளும் நடந்து வருகின்றனவோ அதற்கு அதிகமான எண்ணிக்கையுள்ள கல்லூரிகளும், பள்ளிக் கூடங்களும் கூட மதச் சார்பாக ஏற்படுத்தப்பட்ட அறக்கட்டளைகளின் வழிப்படி நடந்து வருகின்றன. மதத்திலே தங்களை இணைத்துக் கொண்ட தூய வாழ்க்கை வாழக்கூடிய துறவிகளாலே, அப்பழுக்கற்ற வாழ்க்கை வாழக்கூடிய ஞானிகளாலே உண்டாக்கப்பட்ட அறக்கட்டளைகளில் படித்து பகுத்தறிவு பெற்றவர்களாகக் கூட நாம் வளர்ந்திருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது.



ஆனால் அறக்கட்டளைகளிலே சிலபல குறைபாடுகள் இருக்கலாம். குறைபாடுகள் எங்கேதான் இல்லை. நாம் நடத்தக்கூடிய இயக்கங்களில்கூட குறைபாடுகளும் குற்றச்சாட்டுகளும் எழத்தான் செய்கின்றன. எனவே அவற்றை நினைவுறுத்த வேண்டுமே தவிர அறக்கட்டளைகள் என்ற அடிப்படையில் அல்லது மதச் சார்பான வழியிலுள்ள அறக்கட்டளைகள் என்ற அடிப்படையில் அவற்றுக்கு நன்மை செய்வதற்கு நாம் துணை செய்யக்கூடாது என்ற மனப்பான்மை கொள்வது நல்லதல்ல என்று கேட்டுக்கொண்டு அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய இந்தத் திருத்தம் பல நம்பிக்கைகளுக்கு வழி வகுக்கும் என்ற நம்பிக்கையோடு நான் ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புற நில உச்சவரம்பு முறைப்படுத்துதல் திருத்தச் சட்ட முன்வடிவை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். புன்செய் நிலத்தைப் பொறுத்தவரையில் நஞ்சை நிலத்தைப் பொறுத்தவரையில் நில உச்சவரம்புச் சட்டம் என்பது தனியாக வைக்கப்பட்டு அதிலே 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் புஞ்சைக்கு இவ்வளவு என்று நாம் வைத்து இருக்கிறோம். அது வேறு. இந்தச் சட்டம் Urban Land Reform என்ற அளவுக்கு நகர்ப்புற நிலத்தைப் பொறுத்தவரையில் கொண்டுவரப்பட்டிருக்கின்ற சட்டமாகும். ஏன் நகர்ப்புறத்தைப் பொறுத்தவரையில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது என்று சொன்னால் உள்ள படியே நகரங்களில் மக்களின்எண்ணிக்கைபெருகுகின்ற அத்தகைய சூழ்நிலைகளிலும் குடியிருப்புகள் அதிகமாகத் தேவைப்படுகின்ற அத்தகைய சூழ்நிலையிலும், குடியிருப்புகள் அதிகமாக ஆக வேண்டும், அது பலருக்கும் பயன்படவேண்டும் என்றநோக்கத்தின் அடிப்படையில்தான் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் வசதி படைத்தவர்கள் 50 ஏக்கர், 60 ஏக்கர், 70 ஏக்கர் என்று சுற்றி வளைத்துக்கொண்டு அவர்களுக்கும் பயன் படாமல், நாட்டுக்கும் பயன்படாமல், யாருக்கும் பயன்படாமல் பெரும் நகரில் பெருமனையில் பெருமளவுக்கு இடத்தை வளைத்துக் கொண்டுவிட்டால் நகரத்தினுடைய வளர்ச்சிக்கு அது பயன்பட முடியாமல் போய்விடுமே என்பதற்காகத்தான் நகர்ப்புற நில உச்ச வரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு இவ்வளவு இடங்கள்தான் இருக்கலாம்; வீட்டைப் பொறுத்தவரையில் இவ்வளவு இடம் இருக்கலாம்; வீட்டைச் சுற்றி இவ்வளவு இருக்கலாம் மீதப்பட்ட நிலங்களை எக்காரணத்தைக் கொண்டும் அரசு எடுத்துக் கொள்ளும்; அவ்வாறு அரசு எடுத்துக்கொண்டதற்குப் பிறகு சந்தை நிலவரப்படி அவர்களுக்கு ஈட்டுத் தொகை அரசு வழங்கும் என்ற அளவுக்கு நாம் சட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

ஆனால் சென்னை போன்ற நகரங்களில் எடுக்கப்படுகிற நிலங்கள் சாதாரணமாக பெரும்பகுதி குடியிருப்பு மனைகளாகத் தான் அமையும். ஆகவே எடுக்கப்படுகின்ற நிலங்களை யாருக்குத் தருகிறோம் என்றால் பெரும்பாலும் குடிசைமாற்று வாரியத்திற்கும், வீட்டுவசதி வாரியத்திற்கும் தந்து அவர்கள் வீடுகள்

பட்டு, அந்தக் கோயில் நிலங்களை எடுத்து அதை செய்திருக்கிறார்கள். இப்போது கன்னியாகுமரியிலே கூட இருக்கின்ற நிலங்கள் எல்லாம் அந்த வகையிலேதான் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன்.

சுசீந்திரம் கோயில் உள்பட, நிலம் கிடையாது. முன்பு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு அதற்கு ஒரு கிராண்ட என்ற வகையில் மானியம் தந்திருக்கிறார்கள்—ஒரு கணக்கை வைத்து—. அதைக் கூட கொஞ்சம் கூடுதலாக ஆக்கவேண்டும் என்று ஒரு கோரிக்கையும் இருந்து கொண்டிருக்கிறது. அதே அடிப்படையிலேதான் தமிழகத்திலும் கொண்டு வர வேண்டும் என்று, வேறு ஒரு நிலை இருந்தாலும், சென்னையைப் பொறுத்தவரையில் அவ்வளவு பெரும் நிலங்கள் இல்லை. 15 ஏக்கர், 20 ஏக்கர், 50 ஏக்கர் நஞ்சை நிலம் என்று சொல்வதற்கு சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில், மதுரை நகரைப் பொறுத்தவரையில் இல்லை. திருச்சி நகரத்திலே உண்டு. ஆக, அந்த நோக்கம் அறிந்துதான் அவர்களுக்கு எடுத்துச் சொன்னேன்.

ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லிய அந்த எச்சரிக்கையினுடைய அடிப்படையிலேதான் விற்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது எதற்கு விற்கிறார்கள். விற்றதற்குப் பின்னால் அந்தப் பணத்தை எதற்கு செலவழிக்கிறார்கள் என்று அதற்கெல்லாம் கண்டிஷன்கள் போட்டுத்தான் அதை விற்க நாம் அனுமதிக்கிறோமே தவிர, விற்று அவர்களுடைய விழாக்களை நடத்தவோ அல்லது அவர்களுடைய நில இழப்பிற்கு இதை விற்று பயன்படுத்துகிற அளவுக்கு நிலைமை இருக்குமேயானால், அதற்கு அனுமதி அளிப்பதற்கு இல்லை. அந்த நோக்கம் என்னவென்று சொல்ல வேண்டும். நோக்கம் நிறைவேற்றப் பெற வேண்டும். அந்த நோக்கம் நிறைவேறாவிட்டால், அந்தத் தொகையை வாங்கவோ அல்லது அந்த நிலத்தை திருப்பி வாங்குவதற்கோ நமக்கு உரிமை இருக்க வேண்டும் அந்த வகையில்தான் இதைக் கொண்டுவர நினைக்கிறோம்.

இப்போது கூட நிலங்களுக்கு-தொழிற்சாலைகளைப் பொறுத்த வரையில் உபரி நிலம் என்று எடுப்பதற்கு, எக்ஸ்டென்ஷன் அல்லது விரிவாக்கம் செய்கிறோம், அல்லது புதிய தொழிற்சாலையை வைக்கிறோம் என்று சொன்னால், அவர்களுக்கு 2 ஆண்டுக்காலம் காலகெடு தந்து நாம் அவர்களுக்கு விதிவிலக்கு அளிக்கிறோம். இரண்டாண்டு காலத்திற்குள் அவர்கள் சொன்ன விரிவாக்கமோ, அல்லது புதிய தொழிற்சாலைகளோ வைத்தால் நாம் அனுமதிக்கிறோம். வைக்காவிட்டால், இந்த இரண்டு ஆண்டு காலத்திற்குப் பிறகு அந்த நிலத்தை நாம் எடுத்துக்கொள்வோம் என்ற சட்டத்தை வைத்து, பலபேர் அப்படி செய்யாததன் காரணமாக நிலத்தை திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். சில பேர் விரிவாக்கம் செய்து புதிய தொழிற்சாலைகளை கொண்டுவந்ததற்காக அனுமதித்திருக்கிறோம். அந்த வகையிலே, நாம் திட்டவட்டமாகவும், தெளிவாகவும், பொது நன்மைக்காக, நாட்டிற்காக மக்களுக்காக, பயன்படுத்த, மக்கள் சமுதாயத்திற்காக பயன்படுத்த வேண்டும் என்ற



அடிப்படையில்தான் சட்டத்திருத்தம் கொண்டுவந்து, அதற்கான விதிமுறைகளை வைத்தும், அப்படி விதிமுறைகளை வகுக்கிறபோது மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய எண்ணங்களையும் மனத்திலே வைத்துக் கொண்டு, அதற்கு ஏற்ப விதிமுறைகள் வகுக்கப்படும் என்று சொல்லி இந்த திருத்தச் சட்டமுன் வடிவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1–20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: "1985-ம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 45/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பும் முறைப்படுத்துதலும்) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 45/1985) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்டமுன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 8. அறிவிப்பு.

சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்ட முன்வடிவு, 1985. (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.35/1985) பேரவையில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

**(ஊ) சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்ட முன்வடிவு 1985**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1985 ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''.

திரு பொன்முத்துராமலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள சைதாப்பேட்டை வட்டத்தில் உள்ள 12 வருவாய் கிராமங்களின் சில பகுதிகள் சென்னை மாநகரத்தோடு 1978-ம் ஆண்டிலே சேர்க்கப்பட்டு விட்டதால் அங்கே நடைபெறுகிற அசல் உரிமையியல் வழக்குகள் சென்னை உயர்நீதிமன்றத்தினாலே விசாரிக்கப்பட வேண்டும். அதற்கான அதிகார எல்லையை இந்த உயர்நீதிமன்றத்திற்கு சேர்க்க வேண்டுமென்கிற இந்தத் திருத்தச்சட்டத்தில் ஆட்சேபணைக்குரிய பகுதிகள் இல்லை. இருப்பினும் கவனத்தில் கொள்ளக்கூடிய ஒரே ஒரு விஷயத்தை மட்டும் ஞாபகப்படுத்தி விடைபெறலாம் என்று கருதுகிறேன்.

ஏற்கனவே சென்னை உயர்நீதிமன்றமானாலும், பல்வேறு உரிமையியல் நீதிமன்றங்களானாலும் அவற்றில் வழக்குகள் தேங்கி இருக்கின்றன. அப்படி வழக்குகள் தேங்கியிருப்பதால் இதன்மூலம் இன்றைக்கு பல்வேறு வழக்குகள் சேர்கிற நிலையில் மேலும் வழக்குகள் தேங்குவதற்கு வாய்ப்பு உள்ளது. அதனாலே பண ஒதுக்கீட்டை விரைவிலே செய்து, எங்கெங்கே நீதிபதிகள் இல்லையோ அங்கெல்லாம் நீதிபதிகளை நியமித்து, மற்ற பணியாளர்களை நியமித்து, நீதிமன்றங்களில் வழக்குகள் தேங்காத நிலை ஏற்பட்டு, மக்கள் தங்களுடைய நியாயங்களைப் பெறுவதில் எளிதாகவும், விரைவாகவும் நடைமுறைப்படுத்த இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலம் செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், அரசுக்கும் நினைவுபடுத்தி விடைபெறுகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தில் ஆட்சேபணை செய்வதற்கோ, எதிர்ப்பதற்கோ எதுவும் இல்லை. இதை வரவேற்கக் கூடிய நிலையில் ஒரு சில கருத்துக்களை அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதாவது, சிட்டி சிவில் ஜூரிஸ்டிக்ஷன் தான் இங்கே கொண்டு வரப்படுகிறது. குறிப்பாக சொல்ல வேண்டுமென்றால் சென்னை நகரத்தோடு சேர்க்கப்பட்டிருக்கிற ஒரு பகுதி வில்லிவாக்கம் தொகுதி. அந்த வில்லிவாக்கம் தொகுதியைச் சார்ந்த மக்கள் இன்றைக்கு கிரிமினல் கேஸ்களை நடத்த வேண்டுமானால் செங்கல்பட்டு மாவட்டத்திற்கு போக வேண்டிய நிலை இருக்கிறது.

*1985 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 26 ஆம் நாள் தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





அதேபோல அவர்கள் ஏதாவது பிரச்சினையென்றால் மாவட்ட ஆட்சித் தலைவரைப் பார்க்க வேண்டுமென்றால் செங்கல்பட்டு போக வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அதேபோல தாசில்தாரைப் பார்க்க வேண்டுமென்றால் அங்கே போகவேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே சிவில் ஜூரிஸ்டிக்ஷனைப் பொறுத்தவரையில் சென்னை நகரத்தோடு சேர்ப்பதற்கு திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்தத் திருத்தம் கூட ஏழாவது சட்டமன்றத்திலே கொண்டுவரப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்டதன் காரணமாக நிறைவேற்றப்படாமல் காலதாமதம் ஆகியிருக்கிறது. இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கக்கூடிய முறையில் சிவில் ஜூரிஸ்ட்டிக்ஷனை பொறுத்தவரையில் எடுத்துக் கொண்டிருக்கிற நடவடிக்கைகள் போல, கிரிமினல் ஜூரிஸ்டிக்ஷன் நீதிமன்றங்களை சென்னை நகரத்தோடு அந்த ஜூரிஸ்டிக்ஷனுக்குள்ளே கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து அமர்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாவட்டத்தினுடைய எல்லை விரிவாக்கப்பட்டு, கிட்டத்தட்ட 19 கிராமங்கள் புதிதாக சேர்க்கப்பட்டதன் காரணமாக செங்கை மாவட்டத்தினுடைய நீதி பரிபாலனத்திற்கு உட்பட்டு இருந்த அந்தக் கிராமங்கள், சென்னை மாவட்டத்தினுடைய நீதிபரிபாலனத்திற்கு வர வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் இந்த சட்டமுன்வடிவு தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஏற்கனவே உறுப்பினர்கள் கூறியவாறு, மக்களின் நலன் கருதி, இது மிக அவசியத் தேவையான ஒன்று. அந்த அடிப்படையில் இது தற்போது கொண்டு வரப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் பொன் முத்துராமலிங்கம் அவர்கள் பேசுகின்றபோது நீதிபதிகளை நியமிப்பதிலேயும், பணியாளர்களை நியமிப்பதிலேயும், நீதிமன்றக் கட்டிடங்களுக்கு ஏற்பாடு செய்வதிலேயும், துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, கிரிமினல் வழக்குகளும் இதற்கு உட்பட்டு வரவேண்டும் என்ற கோரிக்கையைச் சொன்னார்கள். அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்கிறது என்பதைச் சொல்லி, சிவில் நீதிமன்றங்கள், உயர்நீதிமன்றத்தினுடைய அதிகார எல்லை நீட்டிக்கப்படுகிற போது, சிட்டி சிவில் கோர்ட்டினுடைய அதிகார எல்லை ஆட்டோமேட்டிக்காக நீட்டிக்கப்படுகிறது, பை வே ஆப் நோட்டிபிகேஷன் என்ற முறையிலே. எனவே மக்களின் நலன் கருதி கொண்டு வரப்பட்டு இருக்கிற இந்த சட்டமுன்வடிவை அவை ஏற்க வேண்டும் என்று அவைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1985 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 35/1985) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவு 2 மற்றும் அட்டவணை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1985 ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்ற (விசாரணை அதிகார வரம்பினை நீட்டித்தல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 35/1985) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (18-7-1985) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

—எதுவுமில்லை.—

### (ஆ) அறிக்கைகள் அறிவிப்புகள், ஏனைய தாள்கள்,

184. 1979–80, 1980–81 மற்றும் 1981–82 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கைகளில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முதலாவது அறிக்கை (தமிழ்).

185. 1975–76 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1980–81) ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இரண்டாவது அறிக்கை (தமிழ்).



186. 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் முன்னறிக்கை மீது பொதுக் கணக்குக்குழு (1977–78) அளித்த இரண்டாவது அறிக்கையில் (ஆறாவது பேரவை) கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் மூன்றாவது அறிக்கை (தமிழ்).

187. 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (சிவில்) அறிக்கையின் 24 ஆம் பத்தி மீதான குழுவின் ஒன்பதாவது அறிக்கை (ஆறாவது பேரவை)யில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை (தமிழ்).

188. தமிழ்நாடு அரசின் 1962–63, 1964–65, 1969–70 1970–71 மற்றும் 1971–72 ஆம் ஆண்டுகளுக்கான கணக்குகள் குறித்து பொதுக் கணக்குக் குழு (1980–81) தனது முந்தைய அறிக்கையில் (நான்காவதுஅறிக்கை) தெரிவித்துள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய கல்வித் துறை சம்பந்தப்பட்ட பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை (ஆங்கிலம்).

189. 1973–74 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு அளித்த பதினான்காவது அறிக்கையில் (1980–82) கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் எட்டாவது அறிக்கை (தமிழ்).

190 இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1970-71ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள தமிழ்நாடு மின்வாரியம் தொடர்பான குறிப்புகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1980–81) ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் ஒன்பதாவது அறிக்கை (தமிழ்).

191. 1972–73 ஆம் ஆண்டிற்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1980–82) அளித்த பதினொன்றாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கைப் பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பத்தாவது அறிக்கை (தமிழ்).

192. 1961–62 முதல் 1964–65 ஆம் ஆண்டுகள் வரையிலான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கையின் மீது பொது நிறுவனங்கள் குழு (1973-74) அளித்த முதலாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பதினொன்றாவது அறிக்கை (தமிழ்).

193. 1965–66 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் கணக்குகள் ‘குறித்த தணிக்கை அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழு (1977–78) அளித்த ஐந்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் பேரில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் பன்னிரெண்டாவது அறிக்கை.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136426
சென்னை-600 008.
D
V211,31 N85
N85.14.1